
தேவி



# கட்க▽மாலா

அன்றாட வழிபாட்டு வேள்வி

VOL—I

த்ரிசக்தி பாததூளி
T.V. கல்யாண்

# தேவீ கட்கமாலா

## Vol-I

(அன்றாட வழிபாட்டு வேள்வி)

முதல் பாகம்

## சத்ய தரிசனம்

யோகினி மாதா

மாது ஸ்ரீ ராஜம்மாள் சேஷாத்ரி

அவர்களின்

பூரண ஆசியுடன்

விளக்கி வழங்குபவர்

ஆசிரியர் த்ரிசக்தி பாததூளி

T.V. கல்யாண்

உதவி :

யோகினி R. ராஜீ

தேவீ கட்கமாலா மண்டலி

சென்னை

Title : DEVI KHADGAMALA

Author : T. V. KALYAN

Right : © Copyright with the Author

Published by : Thrisakthi Padhippagam
For Devi Khadgamala
Mandali

Artist : Monalisa Ramamani &
Kavimamani Mayan


Sole Agents : Ananths Agency
Madras-44

Proprietors : K. Anantharaman
K. Ananthakrishnan

Printed at : Mcovendhar Achagam
Madras-600 014

First Edition : April, 1992

Price :
art I & II First Volume }
Part III Second Volume } Rs. 60/- Per Set



I gratefully acknowledge the receipt of incentive received by me from

**TIRUMALA TIRUPATHI DEVASTHANAMS TIRUPATHI**

Under

Aid to Authors Scheme & Financial assistance for religious Publications

Thankfully

T. V. KALYAN

27, Ramachandra Road,
Nehru Nagar,
Chrompet,
Madras-600 044.

# அறிவிப்பு

இன்றைய உலக வாழ்க்கையில் எப்படியோ ஊடுருவி இடம்பெற்றுவிட்ட தீயசக்திகளை அகற்றுவதற்கு மிகுந்த ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் நான் மேற்கொண்டுள்ள,

## "தேவி கட்கமாலா"

அன்றாட வழிபாட்டு வேள்வி இயக்கம். விரைவில் எங்கும் பரவி, உலகில் அமைதியும் சுபீட்சமும் நிலவ,

முதலில் தமிழ் நாட்டில் சுமார் 300 தேவீ ஸந்நிதிகளுக்கு அந்தந்த தலத்தின் பரிமாணத்தையொட்டி **Vol I** ஒரு பிரதியையும் 5, 8, 11, 16 என்ற விகிதாசாரத்தில் **Vol II** பிரதிகளையும் இலவசமாய் வழங்கி ஊக்குவிக்கப்போகிறேன் எனும் செய்தியை எனக்குப் பரிவு காட்டிவரும் அன்பர்களுக்கும் நிறுவனங்களுக்கும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*த்ரிசக்தி பாததூளி*

**T. V. கல்யாண்**

# இது

**பொழுதுபோக்கு புத்தகம் அல்ல;**
**பொறுப்பையுணர்த்தும் மறைநூல்**


மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் பணிவாய் இவ்விணையற்ற கருவூலப் பெட்டகத்தைத் தங்களுக்கு ஸமர்ப்பிக்கிறேன். 44 வருட உபாஸனையின் பயன் இது; அநேக வருடங்களுடைய ஆராய்ச்சியின் அறுவடையிது, இதன் கருத்துக்களை உலகம் முழுவதும் பரவவிட்டு இதன் பயனை யாவரும் அடைய வேண்டும் என்பது எனது சீரிய நோக்கம்.

தயை கூர்ந்து இக்கருத்துக்களை முழுமுயற்சியுடன் பரப்புவதோடு இந்நூலைப் படித்தபின் எழும் எண்ணங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வினயமாய் வேண்டுகிறேன்.

இது விஷயமாய் என்னை நேரில் சந்தித்து அளவளாவ விரும்புவோரை ஆர்வமுடன் சந்திக்க காத்திருக்கிறேன்.

அன்புடன் ஆசிரியர்
த்ரிசக்தி பாததூளி
T. V. கல்யாண்

27, இராமச்சந்திரா ரோடு
நேரு நகர்
குரோம்பேட்டை
சென்னை-600 044



ஸ்ரீ புவனேச்வரி

ஸ்ரீமான் K. S. கிருஷ்ணய்யர்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள்

# காணிக்கை

நடமாடும் புவனேச்வரி
**சாந்தானந்த முனிவரின்**

பேராசிக்குரிய

குருபக்த பாஸ்கர ப்ரும்மஸ்ரீ
**K. S. கிருஷ்ண அய்யர்**
அவர்களின்

நட்புக்கும் பண்புக்கும்
இப்படைப்பைப் புனிதக்
காணிக்கையாக்குகிறேன்.

ஆசிரியர்

**த்ரிசக்தி பாததூளி**
**T. V. கல்யாண்**

# ஓம் ஸ்ரீ ஸ்கந்தாச்ரமம்

## உடையாப்பட்டி—சேலம்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ சாந்தானந்த ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அவர்களின் அருளாசிகள். கட்க மாலா : அநேக வருஷங்கள் ஆராய்ச்சி செய்து எண்ணிறந்த தத்துவவிளக்கங்களை அதிசயிக் தக்க விதமாய் இணைத்து இந்நூலை த்ரிசக்தி பாததூளி T. V. கல்யாண் படைத்துள்ளது, பரவசப்படுத்துகிறது. ஆச்சரியப்பட வைக் கிறது.

தேவி கட்கமாலா அன்றாட வழிபாட்டு வேள்வியும் நாமஸங் கீர்த்தன யக்ஞமும் சேர்ந்த முயற்சி, உலகில்பரந்து நிறைந்துவரும் துர்ப்பிக்ஷம், அதர்மம் அனைத்தும் மறைய, உலகோர் நலம்பெற வழிவகுக்கும் என்பது திண்ணம். ஆஸ்திக மக்கள் ஆண்—பெண் இருபாலரும் இணைந்து பெருமுயற்சியுடன் உத்ஸாகமாய் இவ்வேள்வியினை நடத்தி ஸர்வ மங்களங்களையும் பெற்றுவாழ ஆசீர்வதிக் கிறோம்.

ஆசிரியர் இம்முயற்சியில் வெற்றிபெற ஜகன் மாதா துணை நிற்பாளாக. இந்நூல் எல்லா இந்தியமொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளி வந்து உலகெங்கிலும் சக்தி வழிபாடு பரவ வேண்டும் எனும் அவாவுடன் உழைத்துவரும், ஆசிரியருக்கு ஊக்கமளித்து, வாழ்த்தி பாராட்டி ஆசீர்வதிக்கிறோம்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ சாந்தானந்தஸ்வாமிகள்
ஆக்ஞைப்படி

சேலம், —ஸ்ரீகாரியம்—

**உலகெங்கிலுமுள்ள மக்களுக்கு**
**தென்னிந்தியா**
**சேலம் ஸ்கந்தாச்ரமத்தில்**
**லோகக்ஷேமத்தையே**
**மூச்சுக்காற்றாக்கி சுவாஸித்துவரும்**
**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ**
**சாந்தானந்த ஸரஸ்வத்யவதூத**
**ஸ்வாமிகள் அவர்களின்**

# அழைப்பு

*அன்னை பராசக்தியின் சித்தப்படி தீயசக்திகள் அழிந்து, எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற்றிருக்க* **தேவீ கட்கமாலா மண்டலி** *நிறுவப்பட்டு.*

## தேவீ கட்கமாலா

*அன்றாட வழிபாட்டு வேள்வி*

*எல்லா இடங்களிலும் பரவலாகத் துவங்கப் படவிருக்கிறது. மக்கள் யாவரும் இவ்வியக் கத்தில் சங்கமமாகி ஒற்றுமையுணர்வால் ஐக்கியப்பட்டு உலகெங்கிலும் சாந்தி ஸ்திரப் படுத்தப்பட வேண்டும்.*

*விழித்தெழுங்கள்! செயல்படுங்கள்!!*
*வாழ்வாங்குவாழ்ந்து*
*வரலாற்றுநாயகர்களாருங்கள்!*

**ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி**

*வஸந்தநவராத்திரி*
1992
*சேலம்*

—ஸ்ரீ கார்யம்—

சரணாகதி

## மாதா

செல்லம்மாள்

## பிதா

வெங்கட்ராமன்

## குரு

பகவான் ஸ்ரீ அண்ணா ஸ்வாமிகள்

ஆகியோரை

பக்திசிரத்தை வினயத்துடன் ஸ்மரித்து

## தெய்வம்

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி

பராபட்டாரிகையைச்

சரணடைகிறேன்.

# அஞ்சலி

என்னை வெற்றிப் பாதையில் வழி நடத்திய

மாதுஸ்ரீ ராஜம்மாள் சேஷாத்ரி

(Late) M. R. துரைராஜய்யர்

" வேலவன்

" சிக்கல் ஸோமாஸ்கந்த சாஸ்த்ரிகள்

" த்ரிவேணிகிரி ஸ்வாமிகள்

" T. S. பஞ்சாபகேசய்யர்

" நடேசய்யர்

" ராமய்யா ப்ரும்ஹம்

மேதகு கொட்டையூர் ராம் ஸாது

" N. S. வாஸன்

" T. நாகசுப்ரமண்யம்

" P. நாகராஜ சர்மா

" ஜயலக்ஷ்மி அம்மாள்

" திருவள்ளூர் வெங்கட்ராம சாஸ்திரிகள்

" டாக்டர் வெங்கட்ராகவன்

" வி. குஞ்சிபாதம் அய்யர்

ஆகியோருக்கு என் ச்ரத்தாஞ்சலி உரித்தாகும்.

ஓர் பேரிழப்பால் என்னை மீறி சரளமாய்
அச்சுப்பிழைகள் இடம் பெற்றுவிட்டன.
வருந்துகிறேன். வெட்கப்படுகிறேன்.
இயலும்வரை சகித்துக்கொள்ளுங்கள்.
-ஆசி(றி)யன்-

# முன்னுரை

உலகெங்கிலுமுள்ள மக்கள், எவ்வினத்தவராயினும் சரி, எம்மதத்தினராயினும் சரி, எம்மொழியினராயினும் சரி, யாவரிக்கும் பொதுவான சக்தி உபாஸனையைக் கடைப்பிடித்து அபரிமிதப் பலனை அடைய வாய்ப்புப் பரவலாக நிலவ வேண்டும் எனும் தாகத்துடன் அநேகம் ஆண்டுகளாய் உழைத்து வந்தமையின் பரிசுதான் உங்கள் கையில் தவழும் இத்தந்நிகரற்ற படைப்பு.

குறிப்பாய் ஸ்த்ரீரத்னங்கள் மனது வைத்து முழுமூச்சுடன் இவ்வேள்வியை நடத்த ஆரம்பித்துவிட்டால் வெகு குறுகிய கால அளவான மூன்றே ஆண்டுகளில், அநேகம் தலைமுறைகளாய் நாம் இழந்துவிட்ட தர்மம், பண்பாடு, பாரம்பர்யம், சுபீட்சம் இவை மீட்கப்பட்டு சந்தோஷமும் சாந்தியும் க்ஷேமமும் மக்களின் வாழ்க்கையில் ஐக்கியமாகிவிடும். ஒவ்வொருவரும் இதற்கான ச்ரத்தையை ஊக்கிக் கொள்ளுங்கள். நம் சந்ததிகளுக்கான உண்மை கடமையை அன்னை பராசக்தியின் அருளால் இனிதே ஆற்றி முடிக்கலாம், வெற்றி காணலாம்.

சக்தி உபாஸனையைப் பற்றிப் பரவலாக இரு விதக் கணிப்புக்கள் நம்மிடையே சரளமாய் நடமாடுகின்றன,

ஒன்று, சக்தி உபாஸனையால் பைத்தியம் பிடிக்கும், பெண்கள் விஷயமாய் தவறுகள் மலியும், என்றெல்லாம் பயமுறுத்தும் வகை யுடையது.

இரண்டாவது, சக்தி உபாஸனையால் பெறற் கரிய செல்வமெல்லாம் வந்து குவிந்து எவரும் வந்து பணிந்து நிற்கும் செறுக்கோடு வாழலாம் என்பது.

இவை இரண்டுமே உண்மைக்குப் புறம்பானது. ஆனால் இதிலும் கொஞ்சம் உண்மைக் கலப்பு உண்டு. உபாஸனா மந்திரங்களைத் தான்— தோன்றித்தனமாய் ஆணவத்தோடு கையாள ஆர்வம் எழுவதுண்டு. அந்த ஆர்வத்தை ஸத்வ குண முனைப்புள்ளவர்கள் அடக்கியாண்டு தற்காத்துக் கொள்வர். ரஜோகுண தமோகுண முனைப்புள்ளோர் அத்து மீறிச் செயல்பட்டு மேற்சொன்ன விபத்துக்களுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்வர்.

சக்தி உபாஸனையில் ஆரம்ப காலங்களில் சில வெற்றிகள் எளிதாய் கைகூடும். அப்போது தமக்கு சித்தி கைவந்து விட்டது எனச் சிலர் நினைத்து ஆடம்பரமும், அட்டகாசமும் ஆர்ப் பாட்டமுமாய் வாழ்வர். பின்னர் தாழ்ந்து போவர்.

இந்தக் கட்டங்களெல்லாம் உபாஸகனுக்கு ஆரம்பக் காலச் சோதனைகள். இந்தச் சோத னையை அறிமுகப் படுத்துவோர் அம்பாளின்

ஸமூஹத்திலுள்ள யோகினிக் கூட்டங்கள். இவன் அம்பாளை உபாஸிக்கத் தகுந்தவன் தானா என அவர்கள் செய்யும் பரீக்ஷை. தகுதியில்லாதோர் அம்பாளை உபாசிக்க இவர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள். மட்டு மல்ல, மிகுந்த கோபிஷ்டர்கள், மன்னிக்கும் சுபாவமில்லாதவர்கள். எந்தத் தவறுக்கும் சாபம் கொடுத்து விடுவார்கள்.

ஆனால் செய்த தவறையுணர்ந்து உபாஸகன் பஸ்சாத்தாத்தாபப்பட ஆரம்பித் தால் அவனை அரவணைத்து உதவி தந்து முன்னேறத் துணைநிற்பார்கள். எனவே இந்த உபாசனையில் ஸித்திக்காக ஆசைப்பட்டு யாரும் சிக்கிக்கொண்டு அவதிப்படாதீர்கள். நீங்கள் கேட்காமலேயே உங்களுக்குத் தேவை யான நலன்களெல்லாம் தாமே கைகூடிவரும் காலம் கனியக் காத்திருக்கப் பழகுவதுதான் உபாஸனையில் நிச்சயமாய் முன்னேற உத்திர வாதமான வழி.

ஆனால் சக்தி உபாஸனையில் என்னதான் கிடைக்கும் எனக் கேட்டால்—எதுவுமே கிடைக்கும். ஆனால் ஆசைப்படத் தெரிந்து கொள்ள வேண்டும். நம் ஆசையில் நியாயம், ஸத்தியம், தொய்வுக்கிடம் கொடாத்தாகம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் எதை வேண்டினாலும் வேண்டியபடி கிடைக்கும். இதைத்தான் தெய்வப்புலவர், "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்" என்றார்.

இதற்கும் மேலே சொல்ல வேண்டுமானால் சக்தி உபாசனையில் கிடைப்பது வேறெதாலுமே கிடைக்காது. தெளிவு, நிம்மதி, த்ருப்தி, நிதானம், செழிப்பு, மகிழ்ச்சி, அன்பு செய்யும் பெருந்தன்மை, முடிவாக இறைவெள்ளத்தில் கலத்தல் இவை யாவும் ஒரு உண்மையான உபாஸகனுக்குத் தவறாமல், தட்டாமல் கிடைக்கும். இது உறுதி.

ஒரு எச்சரிக்கை. மந்ரங்களைச் சுயதேவைக் காகக் காம்யமாய் கையாளும் போது ஒரு ஆபத்து உள்ளது எந்த மந்த்ரத்தைக் காம்யமாய் ப்ரயோகம் செய்தாலும் ஆவர்த்திக்கு ஆவர்த்தியோகினிகள் சபித்துக் கொண்டே இருப்பர். மந்த்ரஜபத்தின் பலன் கிடைக்கு முன்னரே இந்த சாபத்தின் பாதிப்புகள் வந்து சேரும்.

இதனால்தான் தேவீ உபாஸனையில் ஆபத்துத்தான் அதிகம் என்ற கருத்து பரவியிருக்கிறது. எந்த மந்த்ரத்தைக் கையாண்டாலும் சாபம் வராமல் தடுக்கும் ப்ரயோகத்தை முதலில் செய்து மாற்றுச் செய்து கொள்ள வேண்டும். அப்போது ஆபத்தில்லை.

ஆனால் சாபம் வராமல் தடுக்கும் உபாயத்தை அநேகர் அறிந்திருப்பதில்லையே, என்ன செய்வது? இருப்பினும் மனந்தளர வேண்டாம். முயற்சி திருவினையாக்கும். வாருங்கள் முதலில் சத்தியத்தைத் தரிசனம் செய்வோம்.

அதன்பின் சக்ர தரிசனம் அதற்குப் பிறகு சக்தி தரிசனம்.

தொடரும் விஷயங்களை ஆழ்ந்து கவனித்துக் கொண்டே வாருங்கள்.

உபாசனையைக் கைக்கொள்வோர் முதலில் ஸத்தியத்தில் பிடிப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்து ரஜோ, தமோ குணங் களைத் தலைதூக்க விடாமல் ஒடுக்கி ஸத்வ குணத்தில் நிலைத்திருக்கப்பழக வேண்டும். இவை இரண்டும் ஸாத்தியமாகி விட்டால் உபாசனை தானாகவே முன்னேறிக் கொண் டிருக்கும். அதிக ப்ரயாசையே தேவை இராது. நம்மால் நமக்கும் அதிகலாபம் சேரும். அடுத்த வர்க்கும் நிறைய நன்மைகள் கிடைக்கும். வெறும்சொல்லல்ல. பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

ஆசிரியர்

# ஆசிரியர் அறிமுகம்

கலைமாமணி மயன் அவர்கள்
ஆசிரியரின் மணிவிழாவில் வழங்கிய
வாழ்த்துப்பா சிலவற்றைத்
தொகுத்து ஆசிரியர்
த்ரிசக்திபாததூளி T. V. கல்யாண்
அவர்களை அறிமுகம் செய்து
வைக்கிறோம்.

—பதிப்பாளர்—

பல்லோர்கள் புவியில்தோன்றி பாங்குற
வாழ்வதுண்டு
நல்லோராய் வாழ்வோர்தம்மை நாம்
காணல் அறிதேயன்றோ
எல்லோரும் போற்றும்வண்ணம் ஏற்றமாய்க்
கீர்த்தி கொண்ட
கல்யாண்ஜீயைப்போலக் காசினியில் சிலரே
உண்டு!

பிறந்த ஊர் கும்பகோணம் பிதாவின் பேர்
வெங்கட்ராமன்
சிறந்த தாயாய்ச் செல்லம்மாள்
சேர்த்திட்டார் தேர்ந்த ஞானம்
விருந்தினர் வியக்கும் வண்ணம்
விருந்தோம்பலிவர்க்கு நோன்பு

பொருந்திடும் பேச்சு எல்லாம் புனிதமாம்
பரதத்துவமே!
முயற்சியால் உயர்ச்சி கண்டார் முன்னேற்றம்
பலவும் கண்டார்
அயர்ச்சியால் ஓய்வு கொள்ளார்
அனைவர்க்கும் நண்பராவார்

பயிற்சியால் பெற்ற வித்தை பலவுண்டு;
பலனுமுண்டு
உயர்ச்சியால் மயங்கமாட்டார் உள்ளத்தால்
பெரியோர் ஆவார்!
சினிமாவில் பங்கு கொண்டு சிறப்பான இடமும்
பெற்றார்
இனிமையாய் எதுவும் செய்வார்
இவர்க்கிணை இவரேயாவார்

தனியொரு பெருமை சேர்க்கும் தரமான
புகைப்படத்தை
நனியுயர் சிறப்புக்கொண்டு நாம்வியக்க
எடுப்பார் அழகாய்!
சக்தியின் அருளைப் பெற்ற சதாயிவர் சிந்தை
யெல்லாம்
பக்தியில் திளைத்து நிற்கும் பாடலாய்
வடிவெடுக்கும்

பக்திக்கு எடுத்துக்காட்டு பக்தரிவர் சொல்லும்
செயலும்!
முக்திக்கு வித்துவாகும் முழுநீளச்
சொல்லாய்த் தோன்றும்!

திருசித்தி எல்லாம் கூறும் தகைமிகு
விடயபுரத்து
பெருஞ்சித்தர் மஹான் சரிதம் பெருமைசேர்
மகாமாயா

அருஞ்சக்தி தன்னைப் போற்றி அழகுசேர்
நூலைச் செய்து,
''த்ரிசக்தி பாததூளித்'' த் திருநாமம்
ஏற்றார் இவர்
அண்டங்கள் படைத்து நம்மை ஆண்டிடும்
அன்னை சக்தி
சண்டமாருதமாய்த் தோன்றி சடுதியில்
பொங்கி வந்து

உண்டதோர் மதுவைப்போல உள்ளத்தை
மயக்கிவிட்டாள்
கொண்டதோர் கிறக்கம்மேலும் கூடுதல்
ஆகக் கண்டார்!
அனுதினம் அன்னை பூஜை அபிஷேகம்;
அலங்காரங்கள்,
தினமொரு விரதம்; திங்கள் திகழ்கின்ற
முழுநாளெல்லாம்

தனமிகு பொருள்களோடு தருகின்ற பட்டுச்
சேலை;
மனமகிழ் சுமங்கலியே மாண்புடை தெய்வம்
இவர்க்கு!
ஆயிரம் எண்ணம் உந்த தொள்ளாயிரத்
தெழுபத்தாறில்
வாய்த்திடும் சிறப்புமிக்க, வஸந்த
நவராத்திரிக்கு!

வேய்ந்திட்ட பந்தல் தன்னில் விழைந்து பல
சுவாசினியை
ஆய்ந்து ஆவரண பூஜை அனுதினம்
சிறப்பாய்ச் செய்தார்!
அன்னையை எண்ணிவிட்டால் அனைத்துமே
மறந்து போகும்
தன்னிலை மறந்து தெய்வத் தண்மையில்
உறைந்து போவார்

இன்னிலை கிடைப்பதற்கு எத்தனை சென்மம்
வேண்டும்
உன்னியே பார்க்கும்போது உயர்வெல்லாம்
எளிதாய்ப் பெற்றார்!
அறுபது ஆண்டைக் காணும் அருளாளர்
வாழ்க, வாழ்க!
அறுபது மட்டுமல்ல ஆயிரம் பிறையும் கண்டு
இருபது வயதைப்போல என்றென்றும்
இனிது வாழ்க!

2-2-1983

ஸ்ரீரஸ்து! சுபமஸ்து!!

ஆரோக்யமஸ்து!!!

# தேவீ கட்கமாலா

## முதல் பாகம்

### ஸத்திய தரிசனம்

ப்ரபஞ்சம் தோன்றுவதற்குமுன் :-
மூலம்-பேரின்பகனமாக, ஸத்-சித்-
ஆனந்த வடிவாக,
ப்ரம்ஹ ப்ரக்ஞையிலே திளைத்தவாறு
நிஸ்சலனமான
இருப்பாக நிலைத்திருந்தது.

ப்ரபஞ்சத்தைத் தோற்றுவிக்க
ஸங்கல்பம் செய்தவுடன்-
ஸத் ஆன சிவம் அன்பாகியது;
சித் ஆன சக்தி அறிவாகியது.
ஆனந்தம் ப்ரபஞ்சமாக விரிவாகி
இயக்கம் பெற்றது.

(இந்த ஆனந்த வடிவைத்தான், தம்பதியானவுடன் காமேச்வரி-காமேச்வரர் இருவரும் உபாஸித்து, லலிதா த்ரிசதியை இயற்றி, ப்ரபஞ்சத்தில் எல்லாத் தத்துவங்களும் இடம் பெற்று, இயக்கத்தில் சங்கமமாகி

ஒன்றைப் போன்று மற்றொன்று அமைந்துவிடாத விநோதப் போக்கை நிறுவி, ப்ரபஞ்ச லீலையை அரங் கேற்றினார்கள்.)

ப்ரபஞ்ச இயக்கத்திலே :-
அன்பு பெண்ணாயிற்று,
அறிவு ஆணாயிற்று;
ப்ரபஞ்சத்தின் இயக்கம் அறமாயிற்று.

ப்ரபஞ்சத்திலே: அன்புமயமானவள் பெண். அவள் தாயாகிறாள். தெய்வமாகிறாள்.

அறிவு மயமானவன் ஆண் அவன் தந்தையாகிறான், ஆசானா கிறான்.


அறமயமானது வாழ்க்கை. அதிலே சுகம் துக்கம் இரண்டும் விளைகிறது.

அறம் சரிவரக் கடைப்பிடிக்கப் பட்டால் சுகம் அறுவடையாகிறது

அறம் தவறினால் துக்கம் அறு வடையாகிறது.

இந்த அன்பு அறிவு அறம் எனும் முக்கோணம் ஒழுங்காகச் சம அளவுள்ள கோடுகளுடன் அமைந்தால் தான் அமைதி நிலவும். இது இயற்கையின் நியதி. இந்த நியதி எதனாலும் மாறுபடாது, மாற்ற முடியாது.

அன்பிலே அறிவு ஊடுருவி அடக்கமாக உள்ளது. அறிவிலே அன்பு ஊடுருவி அடக்கமாக உள்ளது. அறத்திலே அன்பும் அறிவும் சம அளவிலே ஊடுருவி இருப்பதுதான் ப்ரபஞ்சத்தின் முக்கியத் தேவை.



மேலே சொன்ன முக்கோணத்தின் நடுவே உள்ள புள்ளி போன்ற வட்டம் இறையின் மூலஸ்தானம், (கர்ப்பக்ருஹம்). சிவ சிக்தி ஐக்ய தத்துவம். இந்த இறைத்தத்துவத்திலேதான் யாவும் அடக்கம்.

தம்பதியாக மலரும் ஆண்-பெண் ஐக்கிய வாழ்வு அறம் தவறாததாக இருக்க வேண்டும் என்பதுதான் நியதி

இந்த நியதிக்கு இசைவாக வாழ்க்கையை நடத்தும் தம்பதியர் தான் சமூஹத்தின், நாட்டின், உலகின், ப்ரபஞ்சத்தின்—ஏன்?— இறையெனும் இயற்கைத் தத்துவத்தின் உயிரோட்டம்.

இந்த உயிரோட்டம் செம்மையாகவும், சீராகவும் நிலைப்பதற்குப் பாடுபடுவதுதான் மனிதனின்முதற்கடமை.

இந்த உயிரோட்டம் செம்மையாகவும், சீராகவும் இருக்கும்போது சாந்தி நிலையாக இருக்கும் சுபீட்சம் வற்றாத பொக்கிஷமாய் வளரும்.

ஆனால் இந்த உயிரோட்டம் மனிதனின் ஆணவமான செயல்பாட்டால் - முரண்பாடுகள், ஏற்றத் தாழ்வுகள், புறக்கணிப்புக்கள் இவைகளைச்சந்திக்கநேரும் போது பட்டினி, பஞ்சம், கொடும் நோய்கள், அராஜகம், இயற்கையின் சீற்றம் ஆகியவை நேர்ந்து சாந்தி சிதையும், துயரம் பரவும்.

ப்ரபஞ்சத்தைப் படைத்து, ஜீவ ராசிகளையும் படைத்து, ப்ரபஞ்சத் தின் வாழ்க்கைக்கான எல்லாச் செல்வங்களையும் படைத்து, அச் செல்வங்களைப் பாதுகாத்தும், பெருக்கியும் வாழ்ந்து கொள்வதற்குப் பகுத்தறிவான ஆறாவது அறிவுடன் மனிதனைப் படைத்து, அவனை ப்ரபஞ்சத்தின் தர்மகர்த்தாவாக இறை வன் நிறுவியதன் நோக்கம், மனிதன் எல்லாவற்றையும் அறம் பிறழாமல் வழிநடாத்தி முழுமனிதனாக உயர்ந்து இறைநிலையைத் திரும்பப் பெறு வதற்கே.

ஸ்வயம்வரத்தாலோ, காந்தர்வ மணத்தாலோ, பெரியோர் ஏற்பாட் டாலோ தம்பதியாகும் மனிதர் (ஆண் -பெண்) இல்வாழ்க்கையை மேற் கொள்வர்.

அறிவே வடிவான ஆண், வாழ் வதற்கு ஒரு இல்லத்தை அமைத்து அதைத் தனது அறத்திண்மையால் ஒரு கோயிலாக்கி அதில் தன் மனைவியை இவனது விருப்பம்

யாவற்றையும் சுவைததும்பும் இன்பமாகப் பூர்த்தியாக்கித் தரும் இஷ்ட தெய்வமாக ப்ரதிஷ்டை செய்து ஆர்வமுடன் ஆராதிக்கத் துவங்குகிறான்.

த்யாகசீலமுள்ள அன்பே வடிவான அந்த மனைவி தன்னை இவ்வாறு ஆதரவாகப்பேணும் கணவனுக்கு அவன் 'எள்' எனும் முன்னர் எண்ணையாகவே ஸமர்ப்பிக்கும் காமதேனுவாய் இயங்கித் தன் கணவனை ஆசானாகவும் தெய்வமாகவும் ஏற்று, க்ருஹலக்ஷ்மியாக ஒளி வீசிக்கொண்டு, அந்த இல்லக் கோயிலை பூலோக சுவர்க்கமாக அமைத்து அவனுடன் ஐக்கியமாகி விட்டச் சிறப்புப்பாதியாக, (அர்த்த நாரியாக) இயங்க ஆரம்பிக்கிறாள்.

இவர்களது ஊடலோ, கூடலோ, யார் கண்ணிற்கும் இலக்காகிவிடாது. இவர்களது அன்யோன்யத்தை அனுமானிக்கலாமேயொழிய ஆழங் காண இயலாது.

இவள் அறம்வளர்க்கும் நாயகியாகவும், அவன் அறமே செய்யும்

பேராண்மையாளனாகவும் வளைய வருவர்.

இந்த தம்பதியரில், தனக்குத் தனது இணையைவிட உயர்ந்த சிறந்த நபர் வேறு யாருமில்லை எனும் ஸித்தாந்தமே மேலோங்கி இருக்கும். இதன் காரணமாய், இவர்கள் தொடர்பு கொள்ளும் அயல் நபர்களிடமுள்ள சிறப்பு அம்சங்களை வெகு இயல்பானதாக எண்ணிப் போற்றி மதிப்பரேயல்லாது, அந்நபரின் சிறப்பைத் தன் இணையுடன் ஒப்பிட்டு ஏற்றத்தாழ்வுகளைக் கணித்து அதனால் அதிருப்தியோ பெருமிதமோ கொள்ளும் பலவீனமான இயல்பினுக்குத் தம்மை ஆட்படுத்திக்கொள்ள மாட்டார்கள். இவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகள் இவர்களைப் போலவே சிறந்த பிரஜையாக வளர்ந்து இயங்குவர்.

இவர்களது இல்லம் ஓர் அறச்சாலையாக, அமைதிப் பூங்காவாக, ஆன்றோரும் சான்றோரும் வந்து போகும் புனித்தலமாக, இன்பமும் செல்வமும் கொழிக்கும் இந்த்ரபுரியாக இயங்கிக் கொண்டிருக்கும்.

இப்படிப்பட்ட இல்லங்கள் நிறைந்த சமூஹங்களைக் கொண்ட நாடு எவ்வாறு இருக்கும்? ராமராஜ்யமாகத் தான் இருக்கும்.

எந்த மூலையிலும் ஒரு சிறு சச்சரவு கூட எழாது, பொய் எனும் வார்த்தையைக் கூட அறியாத மக்களைத்தான் சந்திக்க முடியும். நீதிமன்றங்கள் வெறிச்சோடிக் காட்சி யளிக்கும். ஏனென்றால் எந்த சர்ச்சையாயினும் அது ஆங்காங்கு உள்ள பெரியோரால் விவாதிக்கப் பட்டு உடனுக்குடன் சமரசம் காணப்பட்டுச் சமாதானத்தை யடைந்து விடும்.

தன்னலத்தைத் தலைகுனிவாகவும் பொதுநலத்தைப் பெருமையாகவும் உணரும் உத்தமர் நிறைந்த உலக மாக ஜ்வலிக்கும்.

இங்கே வீடுகளுக்குத் தாழ்ப்பாளே இராது. இருந்தாலும் பயன்படுத்தத் தேவையே எழாது. வீட்டைவிட்டு வெளியூர் செல்ல நேர்ந்தாலொழிய.

தேவைக்கேற்ப பெண்கள் எந்த இடத்திற்கும் எந்த நேரத்திலும் அச்சமின்றிச் சென்று மீள்வர்.

இங்கே ஒவ்வொரு பிரஜையும் அவரவர் கடமையிலே கண்ணாக இயங்குவர்.

வேளை தவறாது அறம் நடக்கும்.

காலந்தவறாது மழைபெய்யும்.

நேர்மையும் நெஞ்சுரமும் கொண்ட நல்லோர்களால் வளங்கள் ஒழுங்கான பங்கீட்டின்படி அவரவரை வந்தடையும். அந்நல்லோர் ஆய்ந்து எப்பணியை எவர்க்குப் பணிப்பினும், அவரவர் ஆர்வமுடன் பங்கேற்று முடித்து மனநிறைவடைவர்.

சாந்தி சுபீட்சம் இரண்டும் இரண்டும் கால்களாகவும், மக்கள் அரசாங்கம் இரண்டும் இரண்டு கைகளாகவும் அறம் உடலாகவும் அமைதி அந்நாட்டின் உயிரோட்டமாகவும் அமைந்து ஒளி வீசிக்கொண்டிருக்கும்.

இனி அறத்தைப் பேணும் விளக்கம்.

அன்பும் அறிவும் சமவேகத்தில் இணைந்து இயக்கம் பெறும்போது அறம் தழைக்கும், அச்சமரசமின்றி ஏற்றத்தாழ்வுகள் நேர்ந்து அன்பின் வேகம் அதிகமாகும்போது அல்லது அறிவின் வேகம் அதிகமாகும் போது, அறத்தின் வறையறைகள் அலட்சியப் படுத்தப்பட்டு அறம் கறைப்பட்டுப் போகும்.

அன்பின் வேக மேலீட்டால் அறம் பாதிக்கப்படும் போது தர்மசங்கடம் கள் மலியும்.

அறிவின் வேகமேலீட்டால் அறம் பாதிக்கப்படும் போது அனார்த்தங் களும் அமைதியின்மையும் பரவும்.

இப்படி ஒரு தத்துவ விளக்கத்தை ஏன் இணைக்க வேண்டியதாயிற்று.

அன்பு மயமான சிவமும் அறிவு மயமான சக்தியும் தம்முள் அடக்கமா யுள்ள அறிவு அன்பு இவைகளின் சமவேகம் இணைந்த இயக்கத்தால் ப்ரபஞ்சத்தில் ச்ருஷ்டி, ஸ்திதி,

ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் ஆகிய ஐங்தொழில்கள் இம்மியளவும் பிசகாது இயங்கி ப்ரபஞ்சம் சரிவர நடைபெறத் தங்கள் சாங்நித்யத்தை ஒளி வீசச்செய்யும் சமரச (ஸாமரஸ்ய—இரு தத்துவங்களும் சமமாய் இணைந்த இயக்கத்தில் நிலைத்துள்ளனர்.

'கட்கமாலா' தோத்திரத்தை நம் உய்வுக்காகத்தோற்றுவித்தஇறைவன் இச்சமரசத்திற்குச் சான்று பேசும் முகமாக அதை அமைத்துள்ளதை ஊன்றிக் கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டும், முதல் ஐந்து நாள் வழிபாடு சக்திக்கு. அடுத்த ஐந்து நாள் வழிபாடு சிவனுக்கு. அற்தகுமடுத்த மூன்றாவது ஐந்து நாள் வழிபாடு சிவ-சக்தி ஏக்கிய ஸாங்நித்தியத்திற்கு இங்கே சமரசம் எவ்வளவு விஞ்ஞானத் திறத்துடன்கையாளப்பட்டிருக்கிறது, ஏன் முதலிடம் சக்தித்(தாய்)தத்துவத்திற்குத் தந்து அதன் முக்கியத்துவத்தை நிலைநாட்டப்பட்டுள்ளது. என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து ஸத்தியத்தைச் சரியான கோணத்தில்

தரிசிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்'

இறை நிலைக்கு நேர் எதிர்மறை யான நிலைதான் மனிதனாய்ப் பிறந் துள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும். இங்கே பெண் அன்பு மயமானவளாய் இருக்கிறாள். ஆண் அறிவு மயமான வனாய் இருக்கிற ஆனால் பெண்ணுக்குள்ளே அறிவும் ஆணுக் குள்ளே அன்பும் அடக்கமாகஉள்ளது. அங்கே இறைநிலையில் எவ்வாறு சக்தியும் சிவனும் தங்கள் தங்கள் தத்துவங்களின் சம அளவு மாறாமல் இணைந்திருக்கிறார்களோஅதேபோல் தான் இங்கே ஆணும் பெண்ணும் தங்கள் தங்கள் தத்துவத்தில் சற்றே னும் ஏற்றத்தாழ்வு நேர்ந்து விடாமல் சமரசமாய் நிலைத்திருக்கப் பாடுபட வேண்டும்.

அன்பின் சமஅளவு மீறப்படும் போது அறிவு அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அறிவின் சமஅளவு மீறப்படும் போது அன்பு அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த எச்சரிக்கையான இயக்கம் தான் தாம்பத்தியத்தில் முதல் கடமை.

அன்பின் முனைப்பால் பெண் அறத்தின் வரையறையைமீறிஆர்வம் காட்டும்போது அறிவின் விழிப்பால் ஆண் அந்த ஆர்வத்தை அடக்கியாள வேண்டும்.

அறிவின் முனைப்பால் ஆண் அறத்தின் வரையறைளை மீறஆர்வம் காட்டும்போது அன்பின் முனைப்பால் பெண் அவ்வார்வத்தை அடக்கியாள வேண்டும்.

அன்பின் முனைப்பால் அறம் புறக்கணிக்கப்பட்டால் அங்கு தமோ குணம் மேலிட்டு ஆக்கங்களின் வளர்ச்சி தடைப்பட்டுப் போகும்.

அறிவின் முனைப்பால் அறம் புறக்கணிக்கப்பட்டால் அங்கு ரஜோ குணம் மேலிட்டு ஆக்கங்களின் வளர்ச்சியில் அசுரவேகம் தோன்றி எதிர்மறை விளைவுகள் உருவாகி அழிவுக்கான வாய்ப்புக்கள் மலியும்.

எதிலும் முனைப்புத் தோன்றுவது அஹங்கையாலும், சுயநல ஆர்வத்தாலுமே.

ரஜோ குணமோ தாமோ குணமோ மேலிட்டு நம் போக்கை ஆக்ரமித்துக் கொள்ளாமலிருக்க நமது இயல்பில் ஸத்வ குணம் முனைப்பாக இருந்து ரஜோ, தமோகுணங்கள் ஸத்வ குணத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதாக இருந்து வரவேண்டும்.

நம் இயக்கத்தில் அஹங்கையின் ஆதிக்கம் ஆக்க பூர்வமான செயல் பாட்டினுக்குத் தேவையான அளவி னுக்குட் பட்டதாக இருக்கவேண்டும். இது அறத்திலே நிலைத்த நமது இடையறா விழிப்புணர்வால்தான் சாத்தியமாகும். இந்த ஸாத்யதை (திறன்) தீவிர உபாஸனை மூலம்தான் ஸித்தியாகும்.

இந்த அஹங்கை என்பது ஒரு விசித்ரமான தத்துவம். இயக்கத்திற் கான அஸ்திவாரமே அஹங்கைதான். இந்த அஹங்கை எனும் தத்துவத்தை

முதலில் நன்கு புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

சிவ சக்தி இயக்கத்திலே இடம் பெற்றுள்ள அஹங்கைக்குப் பெயர் பரா (அ) ஹந்தை. அன்னை பராசக்தி யின் பரா(அ)ஹந்தாஸ்வரூபிணி எனும் நாமம் ப்ரஸித்தமானது.

இந்தப் பரா(அ ஹந்தா தத்துவத் தினால் தான், அஹங்கையால் சிவன் செய்யும் ஸங்கல்பங்கள் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. இந்த அஹந்தை யில் எதுவுமே கலப்படமிராது. சுத்த மான அஹந்தா ஸ்வரூபமாக இருக்கும். அதனால்தான் இது பரா(அ)ஹந்தை (சுத்த அஹந்தை).

ஜீவர்களின் (மனிதனின்) அஹந்தை யில் 'த்வைதபாவம்' காரணமாய் சுயநலம் தோன்றி அஹந்தையில் கலந்து கொள்வதால் அது அசுத்த அஹந்தையாக மாறிவிடுகிறது.

அறவுணர்வு சரியாக இழையோடும் அசுத்த அஹந்தையில் பொது

நலத்தின் அவசியத்தை நன்குணர்ந்த சுயநலம் ஸங்கமித்திருத்தல்வேண்டும். அப்போது ஆக்கச்சக்தி புஷ்டியுடன் இருக்கும். அதாவது ஸத்வகுணம் மேலோங்கியும்; ரஜோகுணமும் தமோ குணமும் கட்டுக்குள்ளடங்கியும் இருக்கும்.

பொதுநலத்தைப் பொருட்படுத் தாத சுயநல வேகம் ஏற்பட்டு அஹங்கையில் கலந்து அன்பு கண்ணைக் கட்டிக்கொண்டு இயங்கும் போது, பொறாமையும், சந்தேகமும் பயமும், போட்டியும், தோன்றும். ஆதிக்கம் செலுத்தும் தாகம் பீறிட் டெழும். அறத்தின் வரையறைகள் மீறப்பட்டு வேதனைகளும், கவலை களும் மலியும்.

இதே மாதிரியான வேகத்தில் அறிவு முனைப்புடன் இயங்கும்போது போட்டியுணர்ச்சி, பொறாமை, வெறி ஆணவம், ஆத்திரம், பகையுணர்ச்சி இவைகள் தோன்றி அறம் புறக் கணிக்கப்பட்டு ஆபத்தை விளைக்கும்

அழிவுச் சக்திகள் பயிராகிப் பரவ ஆரம்பிக்கும்.

கலியுகம் துவங்கியவுடன், அன்பும், அறிவும், சமவேகத்துடன் ஸத்வகுண முனைப்பிலே இயங்கும் இயல்பு பல வீனப்பட ஆரம்பித்துத் நன்னல வேகம் தலைதூக்கலாயிற்று.

அறத்திலிருந்து விலகி இயங்கும் ஆர்வம் முளை விட்டது.

பண்புகளும் பண்பாடுகளும் சுமையாகத் தோன்றவாரம்பித்தன.

பொதுநல நோக்கு நலியவாரம் பித்தது. சுயநலவேகம் தீவிரமடைய லாயிற்று.

ஆக்கத் தத்துவங்களில் தாறு மாறான அளவுகள். கலவைகள் புக இடமேற்பட்டது.

செயல்பாடுகளில் அறத்தின் புறக் கணிப்பும், தான் தோன்றித்தன்மும் அரும்ப ஆரம்பித்தன.

பாரம்பர்ய மரபுகள் அர்த்த மற்றவை எனத் தப்பான கற்பனைகள் உதித்தன.

சமரச நிலையின் பளிங்குத் தன்மையில் விரிசல்கள் தோன்றின. கலியின் மலர்ச்சி விரிவடைந்தது.

வழக்கமாய் எதிர் கொள்ளும் சுபீட்சமான விளைவுகளுக்குப்பதிலாக ஏமாற்றம் தரும் விளைவுகள் அறுவடையாகின.

நம்பிக்கையைப் பற்றுக் கோடாய்க் கொண்டு இயங்கி வந்த ஆறாவது அறிவு, அதன் எதிர்பார்ப்புக்களில் ஏற்பட்ட ஏமாற்றங்களால் குழப்ப முற்று, அவநம்பிக்கையைத் தழுவிக் கொண்டு எதிலும் தவறான ஸித்தாந்தத்தைப் பூசிப்பார்த்து மருளும் மயக்கத்திற்காளாகி, எதற்கும் சான்றுதேடி வாதாடிச் சந்தேகக் கண்ணோட்டத்துடன் துருவிப் பார்க்கும் சிற்றிவாகச்சுருங்கியது — ஆனால் தனக்குப் பகுத்தறிவு எனும் சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொண்டது.

சிற்றறிவாய் சுருங்கிப் போன அறிவில், ஏற்கனவே அடக்கமா யிருந்த அன்பும் சுருங்கிப்போய் வற்ற ஆரம்பித்தது.

ஏமாற்றங்களின் தொடர்ச்சியால் அவநம்பிக்கை வேரூன்றிக் குழப்பம், ஆத்திரம், அவசரவேகம்,தோல்விகள், ஆற்ற மாட்டாத் தவிப்பினால் கையாலாகாத்தனம், பதட்டம், பகை, பழியுணர்வு, இழிவுணர்வு, தெய்வ நிந்தனை, அசுரத்தனம் என அவலங் கள் அலையலையாய் வீசி அமைதி யைக் குலைத்து அறத்தை முற்றுகை யிட்டு முடக்க ஆரம்பித்தன.

வாய்மையை ஊமையாக்கும் முயற்சி யும் கையாளப்பட்டுப் பொய்மைக்கு, ஆதரவு வளரலாயிற்று.

நல்லவை நலிந்தன. அல்லாதவை வலிவெய்தின.

கலியின் வேகமும் அழுத்தமும் அதிக மாகியது.

மதிப்புக்கள் திருத்தியமைக்கப் படலாயின.

இயற்கைச் செல்வங்களின் மதிப்பை மனிதன் தோற்றுவித்த உயிர்ப்பற்றச் செயற்கைத் தத்துவமான 'பணம்' எனும் மாயைஆக்ரமித்துக்கொண்டது. இந்தப் பணமாயையுடன் வட்டி எனும் துணைமாயையையும் சேர்த்து அமலாக்கப்பட்டது.

இயற்கைச் செல்வங்கள், பணத்தால் ஆட்டிப்படைத்து அலைக்கழிக்கப்பட்டு, யாவிலும் செயற்கைப் பற்றாக்குறை ஒருபுறம், தேவைக் கதிகமான தேக்கம் மறுபுறம் எனவும் செயற்கை ஏழ்மை ஒருபுறம், செயற்கைச் செழிப்பு மறுபுறம் எனவும்; பொய்மையான ஏற்றத்தாழ்வுகள் விஸ்தரிக்கப்பட்டு நிலைபெறலாயின. மனிதனின் புதுப்புது மனப்போக்குகள், புதிய புதிய, குறைபாடுள்ள தீர்க்கதரிசனமில்லாத ஸித்தாந்தங்களால் ஊக்குவிக்கப்பட்டு ஒரு சாராரை மறுசாரார் பகைக் கண்ணோட்டத்துடன் மதிப்பிடும் அவலங்கள் அரங்கேறலாயின, விரிவடையலாயின.

இந்த விரிவாக்கம் எப்படியெல்லாம் பரிணாமச்மடைந்து அமைதியைச் சீரழிய வைத்துள்ளது என்பதைப் பார்ப்போம்.

பகை-வஞ்சம்-சூது-கபடம்-சுரண்டல்-வழிப்பறி- வன்முறை-இரட்டைமுகம்-அடுத்துக் கெடுத்தல்- துதிபாடிப் பிழைத்தல்-ஈனமான செயல்களுக்குத் துணை போகுதல்- நம்பிக்கைத் துரோகம்-எதிரிக்கெதிரியுடன் கூட்டு-வாய்ப்புக்கேற்றபடி விசுவாசமாற்றம், தற்காப்புக்கெனத் தோற்றுவித்துக் கொண்ட ஆயுதங்களால் தன் இனத்தையேதாக்கும் காட்டுமிரண்டித்தனம், புதுப்புது ஆயுதங்களையும், அபரிமித விஞ்ஞானத் திறமுள்ள அழிவுச்சக்திகளையும் தோற்றுவித்துச் சந்தையில் சரளமாக நடமாடச் செய்து நண்பர்களைப் பிரித்துப் பகைவர்களாக்கி அவர்களைப் பலமிழக்கச் செய்து தன் பலத்தை வெகுவாகப் பெருக்கிக் கொள்வது - ஆக்கத்திற்குதவ வேண்டிய விஞ்ஞான வளர்ச்சியைப் பெரும்பாலும் அழிவுக்குப் பயன்படும்படி தடம் மாற்றுவது - இயற்கைச்

செல்வங்களை மனம் போனபடி அழிப்பது, விரயம் செய்வது-அன்பு. அறிவு,அஹிம்சை எனும்முக்கண்ணை யும் மூடி மறைத்துக் கொண்டு, காற்று, நீர், மண் எனும் இயற்கைச் செல்வங்களில் நஞ்சு கலக்கும் பேராபத்தை விஸ்தரிப்பது- நம் வாழ்க்கைக்கு வேண்டிய வளங்களை விளைக்கும் ஒலி ஒளி வடிவ அலைகளைக் கொண்ட ஆகாயத் தத்துவத்தில் சிந்திக்காமல் பேசும் அவலச் சொற்களாலும், அவதூறு வார்த்தைகளாலும், ஒலிப்பெருக்கி மூலம் பரப்பும் கடும் ஓசைகளாலும், நல்லதிர்வு அலைகள் சிதைந்து போகும் அபாயத்தைப் பெருக்கி, இயற்கை நமக்குப்பாதகமாக இயங்கும் ஸாத்தியக் கூறுகளை அதிகரிப்பது, பெரும் தொழிற்சாலைகளின்கழிவுகள், வெடி குண்டுகள், ஏவுகணைகள், ராக்கெட்டுகள், ஆகியவைகளால் சூழலில் நச்சுத் தன்மையை அதிக மாக்கும் ஆபத்தைப்பற்றிக் கவலையே படாமல் செயலாற்றுவது-பெண்கள் உட்பட மனிதனையே மனிதன் விலை

பேசி அடிமை கொள்வது, அடக்கி வைப்பது, இழிவாய்ப் பயன் படுத்துவது ஆதாயம் கிடைக்க வாய்ப்பைத் தோற்றுவிக்க எங்கும், எதிலும் ஸ்திரமற்ற தன்மையை நிலைக்கச் செய்வது என்றெல்லாம் பரவலாக்கப்பட்டு, எதையும் பலத் தாலோ அறிவினாலோ திருத்திச் சீரமைக்க முடியாத நிலைக்கு உலகமும் அதன் ஸமுதாயங்களும் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

எவ்வளவோ விரிவாய்ச் சொல்லி விளக்க வேண்டிய எண்ணிறந்த அவலங்களை இந்த அளவு கோடிட்டுக் காட்டியக் குறிப்புக்களிலிருந்து ஊகித்துப் புரிந்து கொள்ளலாமெனும் எண்ணத்துடன் இங்கு நிறுத்திவிட்டு மேலே செல்வோம்.

அஹந்தையின் கண்மூடி வேகத்தால் வளர்ந்து கொண்டே போகும் அபாயங்களைக் கண்டு பயந்து அவ்வப்போது அறிவும் பலமும் இணைந்து தம்மாலான பெருமுயற்சி களால் எவ்வளவோ முயன்றும்

இவ்வபாயங்களைத் தடுக்க இயல வில்லை.

மாறாக, அன்பை அடித்தளமாய்க் கொண்ட தன்னடக்கமும், எந்தவித விருப்பு - வெறுப்புக்கும் இடமிராத தூய மனிதாபிமானமும், தீர்க்க தரிசனமும் இல்லாத இம்முயற்சி களிலே அறிவும் பலமும் முயன்று முயன்று தோல்விகளையே சந்தித்த வாறு திணறிக் கொண்டிருக்கின்றன.

இப்படிப் பலத்தினாலும் அறிவி னாலும் திருத்திச் சீரமைக்க முடியாத போக்கை எதனால் மாற்றியமைத்து வெற்றி காணலாம் எனும் முடிவை நிர்ணயிக்கச் சற்று வித்யாசமான பாதையில் சிந்தித்து வழிகளை ஆராய்வோம்.

அறிவு சிற்றறிவாகச் சுருங்கிப் போய், அன்பு செலுத்தும் திறனும் குன்றிய நிலையில், அன்பையே சந்தேகிக்கும் பலவீனமும் அறிவில் குடியேறியது.

அன்பே உருவான தாய்க்குலம், அறிவினால் எல்லா விதத்திலும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்தம் இயல்பான அன்பின் பேராற்றலால், சமஅளவை மீறித் தடம்புரண்டு போன அறிவை அடக்கி யாளத் திறனற்றுப் போயிற்று.

அன்பில் அடக்கமாயுள்ள அறிவு நலிந்தால் அன்பு செயலற்றுக் கோழையாகி விடும்.

அறிவில் அடக்கமாயுள்ள அன்பு நலிந்தால், அறிவு பேராண்மையை இழந்து, தன்னலமும் ஆணவமும் தலைவிரித்தாடும் அசுரத்தனம் மேலோங்கிவிடும்.

நடக்கவே கூடாத இந்த இரண்டு விபத்துக்களுக்கும் நாம் இந்தத் தலை முறையில் ஆளாகியுள்ளோம்.

எப்படியாவது நம் தலைமுறையி லேயே இந்த நிலையை மாற்றிச் சரி செய்யாவிட்டால், நாம் வாய்ப்பிருந் தும் வெற்றி ஈட்டாத வீணர்களெனும் பழிக்காளாவோம்.

எனவே ஒருங்கிணைவோம், வழி யமைப்போம்,இலக்கினை எட்டுவோம், அமைதியை மீட்போம்.

பலத்தாலும் அறிவாலும் சீரழிவு கள் திருத்தப்பட்டு அவ்வப்போது அமைதி மீட்கப்பட்டதைப்புராணங்கள் கூறுகின்றன. ஆனால் மீட்கப்பட்ட அமைதி மறுபடி மறுபடி அறிவின் அஜாக்ரதையால் சிதறுவதும், புனர் முயற்சியால் திரும்பவும் அமைதி ஸ்திரப்படுத்தப்படுவதுமாக மாறி மாறி நிகழ்ந்து வந்துள்ளன. எனவே தாற்காலிக வெற்றியைத்தான் பலத் தாலும் அறிவாலும் ஈட்ட இயலு மென்பது புலனாகிறது.

இப்படித் திரும்பத் திரும்ப நேர்ந்த சீர்கேடுகள் எதனால் விளைந்தன? வலிமிக்க துஷ்டர்கள் தவத்தால் பெற்ற பலத்தை, நல்லோர் கள், தம் அறிவாலும், தவத்தால் தமக்கு கிடைத்த பலத்தாலும் ஒடுக் கினரேயொழிய, கிடைத்த வெற்றியை அன்பாலும், அறத்தாலும் பேணிக் காக்காமல், திரும்பவும் அறிவின்

ஆற்றலியே திளைத்து, அன்பை உதாசீனம் செய்து, அறத்தை நலிய விட்டு வாழ்ந்து வந்தனர். அமைதிக்கு அவ்வப்போது விபத்துக்கள் நேர்வது ஸகஜமாயிற்று.

இவ்வளவுதான் அறிவை மட்டுமே நம்பி இயங்கும் ஆற்றலின் எல்லை; அஹந்தையால் ஈட்டப்படும் தவப் பயனின் எல்லை.

ஆணவத்தால் அறிவை மட்டும் நம்பி அவசரப்புத்தியால் அறம் புண்படும் வகையில் செயல்பட்டு விட்டால் அதன் பின் விளைவுகளைச் சந்திக்கும் போது எவ்வளவு வேதனையாக இருக்கும் என்பதற்குப் புராணங் களிலே நிறையச் சான்றுகளிக் கின்றன.

இந்த்ரலோகம் என்பது மனிதன் புண்யங்களின் பயனாக ஸ்வர்க்க போகம் அனுபவிக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு.

இந்த்ரலோகத்தில் உள்ள தேவாதியர் யாவருக்குமே ஒவ்வொரு கடமை

உண்டு. திக்பாலகர்களாக யாகஅவி யைப் பெற்றுக்கொண்டு ப்ரபஞ்சத் திற்கான கடமைகளை ஆற்றும் பொறுப்புக்களுமுண்டு.

ப்ரபஞ்சத்தின் இயல்புகளையும், வாய்ப்புக்களையும், வசதிகளையும் சுட்டிக்காட்டி அவைகளைப் பயன் படுத்தும்வழிமுறைகளைக் கற்றுத்தர, தேவர்கள் மனிதராகப் பிறவியெடுத்து நம்மிடையே வாழ்ந்துவிட்டுத்திரும்பும் சம்பவங்கள், நம் கணிப்புக்களுக்கு அகப்படாமல் இயல்பாக நடந்துவரும். அப்படி வந்து திரும்புவோரைத்தான் நாம் மேதைகள்,கண்டுபிடிப்பாளர்கள், சிரஞ்சீவிகள் என நம் கோணத்தில் வர்ணித்து வருகிறோம்.

இப்படிப்பட்ட கடமைகளிலுள்ள தேவாதியர் ஆணவம் மேலிட்டு அறிவை மட்டும் நம்பி இயங்கி, விசுவாமித்ரர் போன்ற சாதனையாளர் களின் தவத்தைக் கெடுக்கத் தமது சக்திகளை துஷ்ப்ரயோகம் செய்து 'கர்த்ருத்வ' தோஷங்களுக்கு ஆளா யினர். இந்தத் தோஷங்களின் பின்

விளைவுகள், அசுரச்ரேஷ்டர்களின் மனத்தில் மஹாஸித்திகளை ஈட்டப் பேராசைகளாக விளைந்து, அவர்கள் கடும் தவங்களின் மூலம் அரிய வரங் களைப் பெற்று, தேவாதியரைத் துன்புறுத்தும் சம்பவங்கள் நிகழ லாயின. தேவர்கள் செய்த தவறு களைத் தடுக்காத மெத்தனத்திற்காக ரிஷிகளும் அத்துன்பங்களைப் பங் கேற்க நேர்ந்தது.

இப்படி வலிமிகுந்த வரப்ரஸாதிகளான அசுரர்களின் அட்டஹாஸத்தால் நேர்ந்த ஆபத்துக்களை எதனாலும் சமாளிக்க முடியாமற்போன காலங் களில் அறிவும் பலமும் பயனற்றுப் போய், ஆண்கள் (மும்மூர்த்திகள், தேவர்கள், ரிஷிகள்) ஒருமித்த மனத் தினராய் தவத்தினும் மேலானவலிமை யுள்ள சரணாகதியின் வாயிலாய் அன்னை பராசக்தியைச் சரணடைந்த வேளைகளில் அன்பே வடிவான பராசக்தியும் அவளது சக்திஸமூஹ மும் விளையாட்டாய்ப் போரிட்டு அக்கொடிய அசுரர்களை அழித்து அமைதியை மீட்டு, திரும்பவும் அறிவு

மயமான ஆண்களிடமே தந்தாள். அப்படித் தந்ததை, அறிவு, அன்போடு இணைந்து அறந்தவறாது பேணி வந்திருந்தால் இன்று இந்த அவல நிலைக்காளாகி இருப்போமா என இப்போதாவது சிந்தித்துச் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் முதலில் வெற்றி பெறுவோம். பிறகு தேர்ந்தெடுத்த பாதையிலே அயராது முன்னேறி வெற்றியைச் சொந்தமாக்கிக் கொள்வோம்.

இதுவரை ஆராய்ந்ததில் அறிவும் பலமும் அவ்வப்போது வெற்றி பெற்றாலும் கிடைத்த வெற்றியை இழக்காமலிருக்க நாம் கவலைப்படவே இல்லையென்பது வெளிப்படை.

எப்படி இந்த அஜாக்ரதை நமக்கு நேர்ந்ததென்றால் வெற்றிப் பெருமிதத்தால் ஆணவத்திற்கு ஆதிக்கம் தந்தோம். அன்பைப் புறக்கணித்தோம். அன்பினுக்கு மூலமான தாய்க் குலத்தை நம்மிலே இரண்டாந்தரமானவர்களாக நடத்தி அவர்களது ஆக்கச் சக்தியை மழுங்கச் செய்தோம்.

'இளைத்த பாலினர்'என அவர்களைத் தரம் தாழ்த்தி வைத்தோம். அறிவில் அதிக நம்பிக்கை வைத்தோம். அவலங் கள்ஆதிக்கம்பெற உடந்தையானோம். மீள வழியறியாமல் பள்ளத்தை நோக்கியே பயணித்தவாறு வாழ் கிறோம். எனவே இதுவரை அறிவுக்கு அளித்து வந்த சந்தர்ப்பத்தை, இந்தக் கணம் முதல் அன்பினிடம் ஒப்படைத்துவிட்டு அன்பே வடிவான தாய்க்குலம் நம்மை மீட்கவிருக்கும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பைத் தந்து தோள்கொடுப்போம்; வாரீர்!

ஆகாசத் தத்துவத்தில்தான்,ப்ரபஞ்சத் தில் ஸூக்ஷ்மமாகவும் ஸ்தூலமாகவும் நாம் உணரும், அனுபவிக்கும் எல்லா விஷயங்களின் மூலங்களும், நம் ஊனக்கண்ணால் கண்டறிய முடியாத ஆனால் யோகிகளின் ஞானக் கண்ணுக்கு மட்டுமே புலப்படக்கூடிய ஒலி-ஒளி வடிவ அலைகளாய் வளைய வந்து கொண்டிருக்கின்றன. இந்த அலைகளின் இயக்கத்தால்தான் பருவங்கள் காலந்தவறாமல் மாறி மாறிப் பரிணாமமடைந்து நடமிட்டு

ப்ரபஞ்ச கார்யங்கள் நடைபெறஆதார மாய் இயங்குகின்றன. ப்ரபஞ்ச காரியங்கள் இனிதே நிறைவேறக் காலந்தவறாமல் மழை, காற்று, வெப்பம், தட்பம், இவற்றால் வளங் கள் செழித்தோங்கிப் பயன்கள் களஞ்சியம் வந்து சேர வேண்டும்.

இந்தக் கால அட்டவணை பிசகிவிடா மலிருக்க, ஆகாயத்தில் நடமிடும் ஒலி-ஒளி நல்லதிர்வுகள் புஷ்டியாகவும், ஒழுங்கு தவறாத காலப்ரமாண விசை யுடன் சரிவர இணைந்தும் இருக்க வேண்டும். இங்கு சொல்லப்பட்ட புஷ்டியும் காலப்ரமாணமும் எந்த விதமான குறுக்கீடும் பாதிப்பும்தீண்ட முடியாத கதியில், சூழலில் இயங்கும் தன்மையதாக நிலைத்திருக்க வேண்டும்.

இந்த நிலைத்த தன்மையைப் போஷித் துக் காத்து நிற்கும் அரும்பணி யினைத்தான் நாம் வேளை தவறாமல் ஆற்றும் நித்யகர்மானுஷ்டானங்களும் நாள்தோறும் செய்யும் வேத பாராயணங்களும், வழிபாடுகளும்,

யோகங்களும், த்யானங்களும், நாம ஸங்கீர்த்தனங்களும், தவங்களும், காலம் தோறும் நிகழ்த்தும் வேள்விகளும், சேர்ந்து செய்து வருகின்றன.

இந்த எல்லை, அறிவின் ஆற்றலை நம்பி மனிதன் விஸ்தரித்து வரும் விஞ்ஞான வளர்ச்சியால் என்றுமே அடைய முடியாத இடம்.

மெய்ஞானத் துறையில் அரும்பெரும் சாதனைச் சிகரங்களைத் தோற்றுவிக்கும் அளவிறந்த ஆற்றலைப் பெற்ற அருந்தவச் செல்வர்க்குத்தான் தம் த்யானத்திறன் மூலம் இந்த எல்லைக்குள் சென்று இவ்வதிசய இயக்கங்களின் போக்கைக் கண்ணுறவும், கணிக்கவும், கண்காணிக்கவும் முடியும். இப்படிச் செய்வது அவர்களது கடமைகளில் ஒன்று. ஆகையால்தான் அவர்களால் திசைகளைக் கணிக்க முடிந்தது, கதியைக் கணக்கிட முடிந்தது, கால அளவை நிர்ணயிக்க முடிந்தது, நமக்கு அவைகளின் பயனைப் போதிக்க முடிந்தது, அவை

களை நமக்குச் சாதகமாய் இயங்க வைக்கும் ஸாத்யதையைக் கொண்ட வழிமுறைகளைக் கண்டுபிடித்து கற்றுத் தரமுடிந்தது.

ஆகாயத் தத்துவத்தில் உலவும் நல் அதிர்வுகளின் கதியில், மனிதனின் ஆணவமான செயல்பட்டால் முரண் பாடுகள் இடம் பெறும்போது, காலம் தவறிப் பருவங்களின் பரிணாமம் நேர்வது. நிலநடுக்கம், புயல், சூறைக் காற்று, பெருமழை, தேவையற்ற இடங்களில் மழை, தேவை உள்ள இடங்களில் வறட்சி என நேரும்.

ஆன்மீகப் பயணங்களில், இந்த அபாயங்களின் சாத்தியக் கூறுகளை தம் தீர்க்கதரிசனத்தால் கண்டு கொள் ளும் மஹான்கள், மனிதனின் அறியாமைமீது கழிவிரக்கம் கொண்டு உடனே இவ்விபத்துக்களைத் தவிர்க்க வேதங்களையும், தந்த்ரங்களையும், ஆராய்ந்து, அப்போதைக்கு நிலை யைச் சீர்செய்யக் கூடிய வேள்விகளை அறிவுறுத்தி நம்மைச் செய்ய வைத்துத் துணை நிற்கிறார்கள்.

பின்னர், இனி இதுபோன்ற ஆபத்துக் கள் விளையாமலிருக்க நாம் என்ன வெல்லாம் செய்யக்கூடாது, என்ன வெல்லாம் செய்ய வேண்டும்என்றெல் லாம் வலியுறுத்தி வழி நடத்திச்செல்ல முன்வருகிறார்கள். நமக்கு நல்லகால மாக இருந்தால் அவரை மதித்துப் பின்பற்றி நன்மை யடைகிறோம். நமக்குப் போதாத காலமென்றால் அவரைப் பின்பற்றாமல் தொல்லை களை எதிர்கொள்கிறோம்.

நமது கஷ்டகாலம் காரணமாக நாம் அம்மஹானின் அறிவுரைகளைக் கடைப்பிடிக்கத் தயங்கும்போது, சில சமயம் அம்மஹான் தனது ப்ரார்த் தனா பலத்தால் நமது தயக்கத்தைப் போக்கி நமக்கு ச்ரத்தையை உண்டாக்கிப் பயனடையச் செய்வதும் நேர்வதுண்டு. ஆனால் நம் ப்ரதி பந்தகம் வலுவாக இருந்தால், அவரது முயற்சி பலனளிக்காது எனப் புரிந்து கொண்டு,நமக்கு நேரக்கூடிய துன்பங் களை ஒரளவு இலேசாக்கும் முயற்சி யில் தன் ப்ரார்த்தனையை நடத்தி உதவுவார்.

நாம் கண்கூடாக அறியமுடியாமல் இப்படியெல்லாம் எத்தனையோ தர்மங்கள், வழிமுறைகள், நம்மைக் காக்க நம் சூழலில் ஸூக்ஷ்மமாக நடமிட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் தான் அறியாமை இருளில் சிக்கி, நாம் எதையும் சாதிக்கவல்லவன் எனத் தப்புக்கணக்குப் போட்டவாறு, நம்மை சுற்றி வளையவரும் நல்லதிர்வுகளைப் பயன்படுத்துவதுமில்லை, புரிந்து கொள்வதுமில்லை, தெரிந்து கொள்ள முயற்சியும் செய்வதில்லை. மாறாகக் குதர்க்கவாதம் செய்து நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்.

இதுவரை, அறத்தைப் பெரிதாய் மதியாமல் அறிவை முழுமையாய் நம்பி மனிதன் இயங்கியதால் நேர்ந்த நஷ்டங்களைக் கணக்கெடுத்துப் பார்த்தோம். இனி, அன்பை நம்பி இயங்கியிருந்தால் எவ்வாறு இத்துன்பங்கள் நேர்ந்திராமல் தவிர்த்திருக்கலாம் என நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

நமக்கு நேரும் ஏதோ ஒருதுன்பத்தைப் போக்க நிறைய ப்ரார்த்தனை நடத்திப்

பார்க்கிறோம். பெரும்பாலும் துன்பத்திலிருந்து விடுபட முடிவதில்லை. ஏனெனில், நாம் அறிவின் பலத்தை நம்பிப் பிரார்த்திக்கிறோம். நம் துன்பம் எப்படியாவது தீரவேண்டும் எனும் சுயநலமுனைப்பும் கலந்ததாகத் தான் நம் பிரார்த்தனை அமைகிறது. இங்கு அன்பெனும் தத்துவமும் கலப்பதில்லை. அன்பு கலவாத காரணத்தால் நமது முயற்சியில் ஸத்வ குணத்தின் முனைப்புஇராது. மாறாக ரஜோகுணம் முனைப்புடன் இருக்கும். நான் செய்கிறேன் எனும் அசுத்த அஹங்தை யுடன், இந்த முயற்சி பலிக்குமா எனும் தமோகுண அவநம்பிக்கையும் இழையோடும், நாம் அறிவை மட்டுமே நம்பி இயங்குவதால். எனவே நம் பிரார்த்தனையில் சரணாகதித் தத்துவமும் இடம் பெற வாய்ப்பில்லை. ஆனால் இம்முயற்சிக் காலங்களில் நமது பூர்வ புண்ய நலன் வலுவாக இருந்தால், நம்மையறியாமலேயே பிரார்த்தனையில் நெகிழ்வு கலந்து, அன்பும் இழையோடி, சரணாகதிப் பக்குவம் கை கூடும். துன்பத்திலிருந்து விடுபட்டு

விடுவோம். ஆனால் இது சகஜமாக நேர்வதில்லை. யாருக்கோ, எப்போதோ கைகூடும் ஒரு சம்பவமாக இருக்கும்.

ஆனால் நமது இதே துன்பத்தைப் போக்க, நமக்காக நம்மீது பரிவுள்ள ஒருவர் பிரார்த்திக்கும்போது பெரும் பாலும் அப்பிரார்த்தனை பலித்து விடுகிறது நாம் துன்பத்திலிருந்து விடுபடுகிறோம். இது எப்படி நேர் கிறது? அவர்கள் தங்கள் நலத்திற் காகப் பிரார்த்திக்கவில்லை, வேறொரு வருக்காக அதைச் செய்கிறார்கள். அதில் அறிவின் ஆதிக்கமில்லை, அன்பின் அழுத்தம் இடம்பெற்று விடுகிறது. வெற்றி கிடைக்கிறது.

அறிவுக்கு, ஆராய்ச்சி செய்வதும், முன்னுதாரணம் தேடுவதும், விளைவு களை எதிர்மறையாகக் கற்பனை செய்து சீர்தூக்கிப் பார்ப்பதும், எல்லாவற்றையும் அலசிவிட்டு ஒரு முடிவுக்கு வந்து காரியத்திலிறங்கும் போது அளவுக்கு மீறிய ரஜோகுண ப்ரதானமான தன்னம்பிக்கையோடு பிறர் யோசனையை உதாசீனம்

செய்யும் மமதையான போக்கும் பொறுமையின்மையும் ஏற்படுவதால் வெற்றி வாய்ப்புக்கள் குறைந்தும், வழுக்கலுக்காளாகித் தோல்விகளை அல்லது வேண்டாத விளைவுகளை எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள் மிகுந்தும் இருக்கும். இப்படியெல்லாம் கணிப்பது சரிதான் என்பதற்கு, கலி தோன்றி இன்று வரை நாம் சந்தித்து வந்துள்ள சரிவுகளே சான்று கூறும். அன்பைப் பற்றி மேலும் சற்று ஆராய் வோம். அன்பிலே நம்பும் இயல்பு ஆழமாக இருக்கும்; அடுத்தவர் சொல் வதைக் கேட்கும் உண்மையான ஆர்வ மிருக்கும்; இறங்கப்போகும் காரியத் தில் சிரத்தை இருக்கும்; காரியத்தை ஒழுங்காய்ச் செய்து முடிக்க வேண்டுமே எனும் கவலை இருக்கும்; எந்தக் கட்டத்திலும் தவறேதும் நேராமலிருக்க வேண்டுமேயெனும் பயமும் எச்சரிக்கையுணர்வும் இருக்கும் அவசியமென்றால் எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் திண்மையு மிருக்கும்; அப்படியிறங்கிய காரியம் ஏதோ காரணத்தால் வெற்றியாகா

விட்டால்-சரிஇப்படித்தான் ஈச்வரஸங் கல்பம் போலும் என எண்ணும் மனப் பக்குவம் இருக்கும். வெற்றியாக அமைந்து விட்டால் — இறைவன் துணை நின்றான், காரியம் வெற்றி யாகியது எனும்அடக்கமான சந்தோஷ மும் த்ருப்தியும், நன்றியும் இருக்கும். இதுவரை அன்பிலே நடமிடும் உயர் தன்மைகளை வர்ணித்துள்ளதை ஒரு முறை திரும்பவும் எண்ணிப்பார்த் தால் இந்தப் பண்புகள் பூராவும் பெண்களிடம் இயல்பாக இருப்பதை நம்மால் மறுக்க இயலாது. இதற்காக நாம் (ஆண்கள்) மனந்தளர்ந்து தாழ்வு மனப்பான்மையைத் தழுவத் தேவையில்லை. பெண்கள் நமக் கன்னியமல்ல—நம்மில் பாதி, நமது சிறப்புப்பாதி. ஆகையால் அவர்கள் இவ்வளவு சிறப்புக்களுக்கு இருப்பிட மாக இருப்பதே நமக்குப் பெரும் பலம் தானே! பழமொழியைக் கேட்டிருக் கிறோம்— வெற்றி வாகை சூடும் ஒவ்வொரு ஆணுக்கும் பின்னே ஒரு பெண் இடம் பெற்றிருப்பாள் என்று. இதை எக்கணத்திலும் மறவாத உண்மையாக மனத்திருத்திக் கொண்டு

நமக்கு அவர்கள் செம்மையாகத் துணைநிற்க வாய்ப்பையும் வசதியையும் நிறுவி அதைக் கண்காணித்துப் பேணியும் வந்தோமானால்இன்றைக்கு நாம் எட்டியுள்ள சாதனையின் அளவைவிட இன்னும் எவ்வளவோ மேலே போகலாம்; இன்றைக்கு நம்மைச் சுற்றிலும் நம்மை அலங்கோலமாக்கக் காத்திருக்கும் அவலங்களையும் அழித்து விடலாம்.

இதைச் செய்ய நமக்குத் தேவையானதெல்லாம், இந்த முயற்சியை நாம் ஒரு கௌரவப் பிரச்சினையாக ஆகாமல், இதை தவிர்க்க முடியாத, நடத்தியே தீரவேண்டிய, ஒன்றாக நினைத்து விட்டோமானால், அக்கணம் முதலே வெற்றி நம்மை நோக்கி நெருங்கிவர ஆரம்பிக்கும். வாழ்க்கையில் ஒரு புதியஅர்த்தம் தோன்றும்,அசாதாரண நம்பிக்கை பிறக்கும் அமைதி நம்மையும் நம் சூழலையும் தழுவும், அறம் தழைக்கும், ஆனந்தம் பரவும்.
அறிவைத்துணை கொண்டு, தவத்திற்கான வழிமுறைகள்,சட்டத்திட்டங்கள், கட்டுப்பாடுகள் யாவற்றையும்

ஆராய்ந்து தொகுத்துக் கொண்டு தவத்தை மேற்கொள்ளும் போது. ஸத்வகுணம் முனைப்பாக இருக்க என்னதான் முயற்சி செய்தாலும், அறிவின் அடிப்படையில் மேற்கொள்ளும் தவத்தில் ரஜோகுணம் முனைப்பாகி ஸத்வகுணத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டுவிடும். ரஜோ குணத்திற்கு ஆதிக்கம் கிடைத்து விட்டால் அஹங்கைக்கு அதிகாரம் அதிகமாகி விடும். தவத்தில் ச்ரத்தைக்குப் பதில் 'தவம் செய்கிறோம்' எனும் பெருமிதம் இடம்பிடித்துக் கொள்ளும். குவிவதற்குப் பதில் தவத்தால் கிடைக்கக் கூடிய ஸித்திகளைப் பற்றிய கற்பனைகளில் மனம் அலையும். மனங்குவிந்து தன்னையறியாமல் சரணாகதியைத் தொடும் வாய்ப்பு நேர இடமிராது. எனவே தவத்தின் பலன் மிக அற்பமானதாக அமையும். ஆனால் அன்பை ஆதாரமாய்க் கொண்டு மேற்கொள்ளப்படும் தவத்திலே முழு வெற்றிக்கான வாய்ப்புக்கள் அதிகம். இதில் சிரத்தை முதலிடம் வகிக்கும். எந்தக் கட்டத்திலும் வழுக்கல் நேராமலிருக்கப் பெரியோரின்

துணையை நாடும் பணிவு இறை யோடும். மனம் கற்பனைகளில் அலை யாமல் கவலையுடன் குவியும். சரணாகதிப்பாங்கு வசமாகும். தவம் ஆழமாக அமையும். தவத்தின் பயன் முழுமையாகக் கனிந்து கைக்கு வரும்.

எனவே, இந்நாளில், உலகியல் வியவ காரங்களில் வெகுவாக அமிழ்ந்து போய்த் திணறிக் கொண்டிருக்கும் ஆண் பெருமக்கள் தவமியற்றிக் குறைந்த அளவில் பயனை ஈட்டு வதைவிட, இவர்களை விட இன்னும் சற்று அதிக ஓய்வும், அன்புத் தத்துவத்தின் முழுஆதிக்கமும் உள்ள பெண்பாலர் தவமியற்றிப் பெரிய அளவில் நமக்கு வெற்றியை ஈட்டித் தர முனைந்தால், நிலைமைகள் சீக்கிரமே கட்டுக்கடங்க ஆரம்பித்து ஆபத்துக்கள் விலகும், அவலங்கள் மறையும், அறம் வளரும், அமைதி நம் வாழ்வைத் தழுவ வாய்ப்புக்கள் பெருகும்.

ஆகவே இம்மஹத்தான பணியினை வாத விவாதத்திற்கிடம் கொடாமல், பெண் இனத்திடம் ஒப்படைத்து,

அவர்கள் ஆர்வத்துடன் முனைந்து செயல்பட்டு ஸித்தி பெற முழுமனத்துடன் நமது ஒத்துழைப்பைத் தந்து, நாட்டையும் வீட்டையும் காத்து நலமெலாம் காண்போம். இவ்வேள்வியை எங்கும் பரவவிட்டு யாவரையும் பயனடையச் செய்வோம். இறைவன் வகுத்த பாதையில் இசைந்து செல்லும் நன்மக்களாய் உயர்வோம். நேசக்கரம் நீட்டி நெஞ்சினிக்கப் படர்வோம். நீடூழிவாழ்வோம்!

இனி, பெண் இனம் என்ன தவம் ஆற்றவேண்டும், எவ்வாறு ஆற்ற வேண்டும் என்பதைப்பற்றிப் பேசப் புகுமுன், பெண்களின் ஆற்றல் சிறப்பை வெளிப்படுத்திக் காட்டிய பெருமாட்டிகளை ஒருமுறை எண்ணி வணங்கி நம் நம்பிக்கையை ஆழப் படுத்திக் கொள்வோம்.

தவ வலியால் இரும்புக்கடலையை வேக வைத்து, மும்மூர்த்திகளையே மழலைகளாக்கிப் பின்னர் மும்பெருந் **தேவியர்க்கே மடிப்பிச்சை தந்து**

மாபெரும் யோகீந்த்ரரான அவதார மூர்த்தி தத்தாத்ரேய பகவானை நமக்களித்த அன்னை அனசூயாப் பெருமாட்டியின் ஆசிகள் நமக்குண்டு. எப்படியெனில் அன்னை பராசக்தியின் ஆராதனையை நமக்கு வகுத்துத்தந்த வள்ளலே தத்தாத்ரேயர்தான்.

தன் பதிவிரதா தர்மத்தின் பலத்தால் கதிரவனையே உதிக்காமல் தடுத்து தேவர்களையும் முனிவர்களையும் திகைக்கச் செய்த நளாயினி தேவியின் நற்றுணையும் நமக்குண்டு. எப்படி யெனில், தனது மாங்கல்யத்தைக் காக்கவே அவ்வன்னை இவ்வாறு செய்தனள்.

தன் நோன்புத் திறனால் யமனையே பின்தொடர்ந்து யமப்பட்டினம் சென்று கணவனின் உயிரைமீட்ட ஸதி சாவித்திரியின் நல்வாழ்த்து களும் நமக்குண்டு. எப்படியெனில் இங்கேயும் தம் தம் கணவனை உயர்த்தி அவர்கள் மூலம் உலகில் அறத்தை ஒளிவீசச் செய்யப் போகிறார்கள், இப்புண்ய பூமியின் ஸ்த்ரீ ரத்னங்கள்.

இன்னும் ஏனையப் புராண ஸதிகளும், வரலாற்று நாயகிகளான வாஸுகி, ஒளவையார், காரைக்கால் அம்மை யார் ஆகியோரும் இந்நன்முயற்சிக்கு ஆசி நல்குவார்கள். ஏனெனில் அவர் கள் விழைவதெல்லாம் அறத்தின் ஆட்சியும் அமைதியின் மீட்சியும் தானே.

இப்படி இவர்களெல்லாம் நல்லாசி வழங்கிய பின் தெய்வம் ஏன் தயங்கப் போகிறது? தெய்வமும் நம் திருந்திய போக்கைக்கண்டு மகிழ்ந்து விரைவில் நாம் வெற்றி காண வரங்களையும் வளங்களையும் வாரி வாரி வழங்கப் போகிறது. வாழ்வாங்கு நாம் வாழத் தான் போகிறோம் வெல்லத்தான் போகிறோம். வாழ்க வையம்! வெல்க வாய்மை! வளர்க அறம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இத்தவத்திற்காக இங்கு அறிமுகப் படுத்தப்படுவது ஜகன்மாதா மஹா சக்தியின் வழிபாடு. பெரும் வெற்றி களைத் தரவல்லது. இந்த உபாஸனை

யில் ஆண்களை விடப் பெண்கள் சீக்கிரம் முன்னேற முடியும். காரணம் ஆண் தன்னைப் பராசக்தியின் குழந்தையாகப் பாவனை செய்து தவமியற்றும் போதுதான் பலன்கள் சீக்கிரமாகவும் முழுமையாகவும் கனி யும். மற்ற எந்த அணுகுமுறையும் எளிதல்ல. அவற்றில் வழுக்கல்கள் நேர வாய்ப்புக்கள் அதிகம். தவறுகள் நேர்ந்தால் யோகினிகள் கோபமேற் பட்டுத் தவம் வீணாகிவிடும்.

ஆனால் பெண்கள் எந்தக் கோணத் தில் தவமியற்றினாலும் அதில் தவறு நேர வாய்ப்புமில்லை, யோகினிகளின் கோபமும் நேராது. லலிதா ஸஹஸ்ர நாமத்தில் அம்பாளுக்கு, ஸுமங்களீ, ஸுவாஸினீ, ஸுவாஸின்யர்ச்சன ப்ரீதா எனும் நாமங்கள் வருகின்றன. ஸுவாஸினீ என்றால் நல்லவை யாவற்றிலும் வசிப்பவள் என்று பொருள். நற்குணங்கள் அமையப் பெற்ற ஸுமங்களீ (விவாஹிதை யானவள்) என்றும் பொருள் கொள்ள லாம். இவர்களால் ஆராதிக்கப் பெறுவதை அம்பாள் மிகவும் விரும்பு

கிறாள் எனச் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. எனவே வெற்றி சுலபம், நிச்சயம். இதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அம்சம் ச்ரத்தையும் சரணா கதியுமே.

நாம் அறிமுகப் படுத்தப் போகும் வேள்வியின் வழிபாட்டுமுறை, தேவி உபாஸனையில் மிக இரகசியமாய் காக்கப்பட்டுக் காலப்போக்கில் இதன் மஹத்துவம் எவ்வளவு அதிசய மானது எனும் உண்மையும்வெளிச்சத் திலிருந்து விலகிப்போன ஒன்று.

இந்த வழிபாட்டால் அடையமுடியாத ஸித்திகள் ஏதுவுமேயில்லை. மூவுலகுக் கும் அதிபதியாகும் உயர்ந்த, உன்னத பதவியைக் கூட அடைந்து விடலாம். இப்படி வாக்குறுதி தந்துள்ளவர் வேறு யாருமல்ல; ஸாக்ஷாத் பரமேச் வரனே தான்.

ருத்ர யாமள தந்த்ரத்தில் உமா-மஹேச் வரரின் உரையாடல் மூலம் அநேகம் வழிபாட்டு முறைகளும், தோத்திரங் களும் மந்த்ரங்களும், வாரி வழங்கப்

பட்டுள்ளன. அதிலே அன்னை பராசக்தியின் வழிபாட்டு முறையான 'கட்கமாலா' தோத்திரம் அற்புதச் சக்தி வாய்ந்த ஒன்று.

இந்தக் 'கட்கமாலா'வை இன்னும் அதிக சக்தி வாய்ந்த வழிபாடாக 'சுத்தமாலா' எனும் பெயரில், பிரதமை முதல் பௌர்ணமி வரை பதினைந்து விதமாகவும், திரும்ப பௌர்ணமிக்கு மறுநாள் ப்ரதமை முதல் அமாவாஸ்யை வரை தலைகீழாக அதே பதினைந்து வகைகளையும் பாராயணம் செய்து ஸித்திகள் பெற வாய்ப்புக்களுடன் வகுத்துத் தந்த பெருமை பதினைந்து (பனிரெண்டும் மூன்றுமாக) ஆதித்ய ரிஷிகளைச் சேரும்.

இவ்வழிபாட்டு வேள்வியால் என்ன நன்மை நடக்கும் என்பதை இங்கு கொஞ்சம் பார்த்துக் கொள்வோம்.

இவ்வேள்வியிலிருந்து கிளம்பும் நல் அதிர்வு அலைகள், முன்னம் குறிப்

பிட்டபடி ஆகாயத் தத்துவத்தில் கலந்து போயுள்ள எதிர்விளைவு களைத் தோற்றுவிக்கும் தோஷ அலை களை நாசஞ் செய்து, ஆங்கு சிதறிப் போயுள்ள நல்அதிர்வு அலைகளை ஒன்று சேர்த்துத் தாமும் அவை களுடன் சங்கமமாகி ஒரு தூய்மை யான, வலுவான, பயனுள்ள நல் அதிர்வுக்கூட்டமாக மாறி அங்கிருந்து இறங்கிப் பிரபஞ்சத்தில் இயங்கும் எல்லாத் தத்துவங்களிலும் வந்து கலந்து :

மனிதனில் மனிதாபிமானத்தையும்;
மக்களுக்கு அறத்தினிடம் பற்றையும்,

பஞ்ச பூதங்களில் புஷ்டியான கதியையும்;

பருவங்களில் சீரான போக்கையும்,

சூழலில் அமைதியில் ஸ்திரத் தன்மையையும்,

வளர்த்துக்கொண்டே போகும். மக்கள் வாழ்க்கையின் உண்மை அர்த்தத்தை யுணர்ந்து செயல்பட ஆரம்பிப்பர்.

தீயசக்திகள் மறையத் துவங்கும். நல்லன எல்லாம் நிமிர்ந்நோங்கித் தழைக்கலாகும். இவை போதாதா பழி நம்மைச் சேராமல் காக்க! உயர்த்த!

பெண்கள் இவ்வேள்வியைக் குறைவற நடத்தி நமக்கு வெற்றி தேடித்தர அவர்களுக்குத் தேவையான ஊக்க மும் ஆக்கமும் சேர்க்க, ஆண்களும் ஒருவிதக் கூட்டு வழிப்பாட்டினைத் தமது கடமைகளுக்கிடையே ஒரு சிறிய அளவிலேனும் நடத்தியாக வேண்டும்.

காலைநேரங்களில் ஐந்தேமுக்கால்மணி முதல் ஆறுமணி வரை கோஷ்டியாகச் சேர்ந்து 'தெருவின் ஒமுனையிலிருந்து மறுமுனை வரை ஒருமித்த மனத் தினராய் இனிமையாய் வாய்விட்டு :

''ஓம் நமோ நாராயணாய ஓம் நம: சிவாய

ஓம் நம சிவாயை நமோ ஓம் நம: சிவாய''

என ஓதிச் செல்ல வேண்டும். இதன் பெருமை இப்போது புரியாது, பலன் அறுவடையாகும் போது தெரியும்.

தேவியின் "கட்கமாலா" என்பது ஒரு மாலாமந்த்ரம். சில அக்ஷரங்கள் கொண்ட தொகுப்பை மந்த்ரம் எனவும் நிறைய அக்ஷரங்கள் உள்ள தொகுப்பானால் மாலாமந்த்ரம் எனவும் குறிப்பிடுவது மரபு.

ப்ரபஞ்சத்தைத் தோற்றுவிக்கத் தன்னை ஸ்ரீசக்ரவடிவாகப் பரிணாமப் படுத்திக் கொண்ட அன்னை பராசக்தி தன்னை ஆங்கு என்னென்ன சக்திகளாகப் பிரித்துக் கொண்டு எங்தெந்த ஸ்தானத்தில் என்னென்ன மந்த்ராத்மகமான நாமங்களுடன் ஒளிவீசிக் கொண்டிருக்கிறாள் எனும் பேருண்மைகளை விளக்கி ஓதுவதே 'கட்க மாலா' எனும் தந்திகரிலா மாலா மந்த்ரம்.

ஸ்ரீசக்ரத்தின் நடுவே ஸாமரஸ்ய தத்துவமாக, பிரிந்திராத எட்டாவது-ஒன்பதாவது (பிந்துவுடனான ப்ரதமத்ரிகோணாம்) ஆவரண வடிவாக,பரா (அ)ஹந்தா ஸ்வரூபிணியாக ப்ரகாசித்துக் கொண்டு, தன்னில் இருந்தே தோற்றுவிக்கப்பட்ட சக்தி

ஸமூஹத்தால், ப்ரபஞ்சமாகவும், ப்ரபஞ்சத்தின் இயக்கமாகவும், சிவ-சக்தி ஐக்கிய வடிவாக ஒவ்வொரு அணுவினுள்ளும் ஸாந்நித்யமாயுமிருப்பதைத் தரிசிக்கும் ஆற்றலை நமக்குக் கூட்டி வைக்கவே-ப்ரம்ஹ ஸாக்ஷாத் காரத்தின் முழுச்சுவையையும் அணு அணுவாகச் சுவைக்க இறைவன் எடுத்துக் கொண்ட தத்தாத்ரேய அவதாரத்தில், ஸ்ரீசக்ர ஆராதனம் எனும் மஹத்தான சக்தி உபாஸனையை வரையறுத்து, முறைப்படுத்தி நமக்குத் தந்துள்ளார். அப்படித் தந்ததைத்தான் பரசுராமகல்ப ஸூத்ரத்தின் வாயிலாக நாம் இன்று பின்பற்றிப் பயனடைந்து வருகிறோம்.

எப்படி ப்ரபஞ்சம் ஸ்ரீசக்ரவடிவாக அமைந்துள்ளதோ அதேபோல் தான், காரண - ஸூக்ஷ்ம - ஸ்தூல சரீரங்களைக் கொண்ட நமது அமைப்பும் ஒரு ஸ்ரீசக்ரம். இந்த ஸ்ரீசக்ரத்தின் பிந்துவில் உள்ளது, ஜீவாத்மா, இந்த ஜீவாத்மா தனது ஸ்ரீசக்ர அமைப்பில் ஆதிக்கம் பெற்றுள்ள

சக்தி ஸமூஹங்களின் மூல மாகத்தான் தான் ப்ரபஞ்சத்தினிட மிருந்து அடையவேண்டிய அனுபவங் களைப் பெறுகிறது, துய்க்கிறது. இந்த வினோத பந்தத்தின் ஸூக்ஷ்மங் களைப் படிப்படியாய் அனுபவ பூர்வ மாக உணர்வதற்குத்தான் உபாஸனை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

உபாஸனை முறையாக கைக்கொள்ளப் பட்டு, தாரையாக ஸாதனை தொடரு மானால், முன்னேற்றங்கள் தொடரத் தொடர ஆங்காங்கே ஸித்திகளும் வசமாகும். ஸித்திகள் வசமாகி ரஸாஸ் வாதம் குறுக்கிடாமல் தாரையான ஸாதனையைத் தொடரும் திண்மை நிலைத்து விட்டால், ஸாக்ஷாத் காரத்தை எட்டும் திறன் அதிகரிக்கும். ஜீவன் முக்தனாகும் பாக்யம் நெருங்கி வரும்.

இம்மாதிரியான உயர்நிலைகளை உபாஸனையால் அடையும் பாக்ய வான்களால்தான், தங்கள் ப்ரார்த் தனை மூலமாகவும், பிறருக்கு ப்ரார்த்தனா முறைகளை அறிமுகப்

படுத்தி ஊக்குவிப்பதன் மூலமாகவும் அவ்வப்போது துர்பிக்ஷங்கள் அகற்றப்படுகின்றன; சுபிக்ஷங்கள் மீட்டுத் தரப்படுகின்றன.

பராசக்தியின் அம்சமான ஸுவாஸினி ஸமூஹம் இந்த மீட்புச் சாதனையைத் தான் இந்தக் கட்கமாலா எனும் 'சுத்தமாலா' நித்யபாராயண வேள்வி மூலம் சாதிக்க வேண்டும் எனப் பரிவுடன் வேண்டிக் கொள்ளப் படுகிறார்கள்.

## தேவி கட்கமாலா
## அன்றாட வழிபாட்டு வேள்வி

இறைவழிபாடுகளில் அன்னை பரா சக்தியின் வழிபாடு தலைசிறந்தது என்பது வேதங்களும், புராணங்களும் வரலாறும் வலியுறுத்தும் உண்மை.

பரிந்து காப்பதில் தாயினும் சிறந்த வேறெவர் உண்டு? இதை உணர்ந் தால் போதும்-பராசக்தி வழிபாட்டின் அருமை, பெருமை, புரிந்துவிடும்.

பராசக்தி வழிபாட்டினிலே ஒரு அம்சம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது சக்தியும் சிவனும் இணைந்த அம்ச மாகவே பாவித்து வழிபட வேண்டும் என்பது தான் அது. வேறெந்த வழி பாட்டிலும் இப்படி ஒரு முறை அழுத்தமாய் வரையறுக்கப்பட வில்லை. இந்த அடிப்படையைப் பின் பற்றித்தான் பிற்காலத்து வழக்கில் லக்ஷ்மியுடன் சேர்ந்த நாராயணனை யும் அல்லது லக்ஷ்மியை வழிபடும் போது நாராயணனையும் சேர்த்து ஆராதிக்க வேண்டும் என நடை முறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே பராசக்தியின் வழிபாட்டிற்கு ஈடு மில்லை, இணையுமில்லை. அதே போல் சிறந்த பலனைத் தருவதிலும் இவ்வழிப்பாட்டினுக்கு ஈடிணையே இல்லை. இவ்வுண்மையை உணர இராமாயணத்தில் இராமன் தேவியை ஆராதித்ததையும், கிருஷ்ணாவதாரத் தில் கண்ணன் அம்பாளை வழிபட்ட தையும் நன்கு நினைவு கூர்வோம். மேலும் தேவீ மாஹாத்மியத்திலும் தேவீ பாகவதத்திலும் மும்மூர்த்தி

களும், தேவர்களும், முனிவர்களும், அன்னை பராசக்தியை வழிபட்டுப் பயனடைந்ததையும் நினைவுப் படுத்திக் கொள்வோம்.

இனி, வழிபாட்டுக்கான சில இன்றி யமையா நுணுக்கங்களைப் புரிந்து கொள்வோம்.

அறத்திலே நிலைத்துக் கடமையிலே கண்ணும் கருத்தும் ஒன்றிய பாங் குடன் வளையவரும் யதார்த்தவாதி யான சாமானியனுக்காகவே ஆலயங் கள் தோற்றுவிக்கப்பட்டன. இவன் அங்கு தினமும் சென்று, தெய்வத்தின் முன் நின்று ஒரு கணம் நெஞ்சார வணங்கி விட்டால் போதும். அதுவே அவனது வழிபாட்டை நிறைவுள்ள தாக ஆக்கி விடும்.

சாமானியனைவிட ஒரு படி மேலே போய்க் கற்றறிந்து பொறுப்புமிக்க பணிகளை ஆற்ற முன்வருபவன் தன் பணிகள் குறைவற நிறைவுறச் சாதாரண அறிவு அனுபவச் சிறப்புக் களுடன் கூட, தனக்கிருக்கும் மனித

ஆற்றலோடு இறை ஆற்றலையும் பெற்று இணைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறான். ஆகவே இவன் சான்றோரை அண்டி, இறை ஆற்றலைப் பெற்றுப்பெருக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கற்க வேண்டி வருகிறது. சான்றோர் இவன் தரமறிந்து, திறமறிந்து இவன் பெற்று வளர்த்துக் கொள்ளவேண்டிய இறை ஆற்றலின் வகையினைக் கணித்து அதற்குரிய மந்திரத்தையும்; தேவதையையும், வழிபாட்டு முறை களையும் போதிக்கின்றனர். அவன் பக்திமானாக வளர்ந்தால், தானும் பயன் பெறுகிறான், வீட்டுக்கும், நாட்டுக்கும், சமூகத்திற்கும், பயன் உள்ளவனாக வளர்கிறான். மாறாகப் பேராசைக்காரனாக வளருவானே யானால், இவன் கொஞ்ச காலம் முன்னேற்றம் போன்ற கானல் நீர் வாழ்க்கையை அனுபவிப்பான் பின்னர் தாழ்ந்து போவான். இவனால் யாருக்கும் பயன் இராது. இவனுக்கு வழிமுறைகளைப் போதித்த சான் றோனும் தன் தவவலி ஓரளவேனும்

தேய்ந்து போகும் நஷ்டத்திற்காளா வான்.

மேற்கூறிய நடுத்தர இயல்புடைய வனைவிட இன்னும் சிறப்பான குறிக் கோள்களை முன் வைத்துக் கொண்டு செயலாற்ற முனைபவன், படிப் படியாய் வழிபாட்டின் நுணுக்கங் களைப் புரிந்து கொண்டு, அவற்றின் ஆக்கச் சக்திகளைத் தடம் புரளாமல் பேணி வசப்படுத்திக் கொண்டு நெறி தவறாமல் வாழ்க்கையில் பயணித்துச் சான்றோனாக உயர் கிறான்.

இன்னும் உயர்ந்த குறிக்கோள்கள் உள்ளதை ஊகித்து ஆன்மீக நாட்ட முனைப்புக் கிலக்காகி உலகவியல் களின் மயக்குத் தன்மையையும், ஓயாமல் மாறும் இயல்பினையும் உணர்ந்து அவை மாட்டுப் பற்றறுத் துப் பேரின்பத்தின்கண் மோக முற்றுச் சலியாமல் உழைத்து உழைத் துப் படிப்படியாய் முன்னேறிக் கொண்டே உலகுக்குத் தேவை நேரும் போதெல்லாம் கைகொடுத்தும், கண்

காணித்தும், ஒரு விஞ்ஞானியாக வளர்ந்து மெய்ஞானியாகப் பழுக்கும் வேள்வியாளனாகி விடுகிறான், உயர்ந்த நிலையிலுள்ள மனிதன். இந்நிலை கனிந்தோரைத் தான் நாம் ஆங்காங்கு ஞானியாகவும், மஹானாகவும், ஆபத்பாந்தவனாகவும் குறைதீர்க்கும் கற்பகத் தருவாகவும் நமது பூர்வபுண்ய வசத்தால் தரிசித்துப் பயனடைகிறோம்.

நமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள இறைச் சக்தியை அடைவதற்கும் நமது ஆன்மீக உயர்வுக்கும், மந்த்ரங்கள் துணை நிற்கின்றன. மந்த்ரங்களை ஜபம் செய்வதில் அநேகம் ஸூக்ஷ்மங்கள் அடங்கியுள்ளன. அவைகளை நன்கு புரிந்து கொண்டு அந்தந்த பாவனையில் ஊன்றி நின்று ஜபம் செய்துவர நன்கு பழகி வருவதோடு, மனம் நம்மை விட்டு விட்டு எங்கும் மேய ஓடி விடாமல் பிடித்து வைத்து நம் செயலிலேயே அதைப் பிணைத்து நிறுத்த ஓயா முயற்சியும் அயரா விழிப்பும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மந்திரத்தை ஜபம் செய்வதற்கு, முதலில் அதன் ந்யாஸத்தைச் செய்து கொள்ள வேண்டும். அதாவது:

முதலில் மந்திரத்தின் பெயர்.

அடுத்து அந்த மந்திரத்தை அறிமுகப் படுத்திய ரிஷி.

அடுத்தது சந்தஸ் (அதாவது நாம் அந்த மந்திரத்தை உச்சரிக்கவேண்டிய விதம், இடைவெளி எங்கெங்கு,எப்படி என்ற விபரத்தைச் சுட்டும் சொல்).

இதற்குமடுத்தது அந்த மந்திரத்தின் சாரமாக அதனுள் விளங்கும் மூன்று பீஜாக்ஷரங்களை பீஜம்-சக்தி-கீலகம் என்று குறிப்பிட்டுவிட்டு, எந்தக் குறிக்கோளையடைய ஜபம் செய் கிறோம் என விண்ணப்பித்துக் கொள்ளும் கட்டம். பீஜம் என்பது விதை. சக்தி என்பது விதையை ஏற்றுப் பயிராக்கிப் பலனைக் கனிய வைக்கும் விளை நிலம். கீலகம் என்பது விதையைச் சக்தியில் சரியாகக் கொண்டு சேர்த்து விதைக் கும் செயல்.

அதன் பின் கர ந்யாஸம், அங்க ந்யாஸம்.

நமது இரு கை விரல்களில் ஜபம் செய்யப் போகும், மந்த்ரத்திற்குரிய ஆறு ந்யாஸ பீஜங்களால் இரு கைகளிலுமுள்ள பத்து விரல்களிலும் ஸமஷ்டியாக இரு கைகளிலும் அந்த பீஜாக்ஷரங்களின் முக்கிய ஈர்ப்புத் தன்மையை நிலை நாட்டிக் கொள்ளுதல்-கரந்யாஸம்.

அதே பீஜாக்ஷரங்களால் திரும்பவும் தொடர்ந்து, இதயம், தலை, சிகை, இரு புஜங்கள் சேர்ந்த மார்பகம். முக்கண் (வெளி உலகைக காணும் இரு ஊனக் கண்களும், அக உலகைக் காணும் ஆற்றலுள்ள நெற்றிக் கண்ணும்) அஸ்த்ரம் (அவரவர் கைகளால் ஆயுதத்தைக் கையாளும் திறம்) இந்த ஆறு இடங்களில் ஷட் ப்ரயோக முறையுடன் செய்தல் அங்க ந்யாஸம்.

(இந்தஷட் ப்ரயோகங்களின் விரிவான விபரங்களை அவரவர் குரு மூலம் அறிந்து கொள்ள வேண்டும்)

இதன்பின், விரல்களால் நம்மைச்சுற்றி வட்டமாகச் சொடுக்கி திக்பந்தனம். இப்போது நம்மைச் சரியாகத் தூய்மைப் படுத்தித் தயார் செய்து கொண்டு எதுவும் உள்ளே புக முடியாமல் நம்மைச் சுற்றி அரணும் அமைத்துக் கொண்டாயிற்று.

இனி அந்த வட்டத்தினுள்ளே நாம் ஜபம் செய்யப் போகும் மந்த்ரத்தின் தேவதையை த்யானம் செய்து எழுந் தருளச் செய்தல்.

இதன் பின், விரல்களினாலேயே பஞ்ச பூத லிபிகளான பீஜாக்ஷரங்களால் பஞ்ச பூஜை. இதில் பஞ்சபூதத்தத்துங் களை கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலாதி ஸமஷ்டி உபசாரங்களாக ஆக்கி எதிரே எழுந் தருளியுள்ள தேவதைக்கு அர்ப்பணிக் கிறோம். அதாவது நமது வ்யக்தியில் (நமது அமைப்பின் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் அடங்கிய தொகுப் பில்) நிலவும் பஞ்சபூதத் தன்மை களை அத்தேவதைக்கு அர்ப்பணிக் கிறோம். அதாவது நம்மையே நாம்

ஒட்டு மொத்தமாகத் தேவதைக்கு அர்ப்பணித்து விடுகிறோம்.

இதற்குப் பிரதியாக நமக்கு என்ன கிடைக்கிறது? ஜபமுடிவில் அந்தத் தேவதையிடமிருந்து நாம் கோரியப் பலனைப் பூராவாகத் தாங்கிக் கொண்டுள்ள நம்மையே நாம் திரும்ப அடைகிறோம்.

இந்தப் பாவனையுடன் இணைந்து சரிவரச் செய்யப்படும். ஜபம் கோரிய பலனை வெகு விரைவாகப் பெற்றுத் தரும்.

இந்த அர்ப்பணத்தில் மனமும் ஒன்றியிருந்தால் தான் நம்மை நாம் அர்ப்பணித்ததாகக் கனியும். இல்லையேல் இது ஒரு உயிரற்ற சடங்காகி விடும். பலன் வெகு சொல்பமாகி விடும்.

முன் சொன்ன விளக்கங்களை இங்கும் இணைத்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

மந்த்ரம் என்பது பீஜம் (விதை)

யந்த்ரம் என்பது சக்தி (விளை நிலம்)

நந்த்ரம் (வழிபடும் முறை) என்பது கீலகம் (விதைத்தல்).

இங்கு நாம் எடுத்துச் சொல்லப் போவது தேவி வழிபாடு.

தேவியின் மந்த்ரங்கள் எண்ணிறந் தவை அவற்றில் முக்கியமானவை :

ஓம்-ஓரெழுத்து மந்த்ரம்.

ஐம் க்லீம் ஸௌ : மூன்றெழுத்து மந்த்ரம் இன்னும்

ஸ்ரீம் ஹ்ரீம்க்லீம் -இதுவுமொரு மூன்றெழுத்து மந்த்ரம்.

இந்த மந்த்ரத்தின் எந்த ஒரு அக்ஷரத் தையும் தேவியின் முக்ய மந்த்ரமான பஞ்சதசீயின் (பதினைந்து எழுத்து மந்திரம்) இறுதியில் சேர்த்துக் கொள்ளும் போது அம்மந்த்ரம் ஷோட சாக்ஷரீ (பதினாறு எழுத்து மந்த்ரம்) ஆகிவிடும். இவை தவிர இன்னும் அதிக விசேஷமான ஷோடசீ மந்த்ரங் கள் உண்டு. அவைகளை ஷோடசீ என்று குறிப்பிட்ட போதிலும் அவற்றில் பதினாறுக்கும் அதிகமான

அக்ஷரங்கள் வரும் இவைகள் அந்தந்த உபாஸனா பரம்பரை அனுஷ்டானத்தையொட்டி அனேகம் மாறுபாடுகளுடன் நிலவுகின்றன.

இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் கட்கமாலா நித்ய பாராயண வேள்விக்கு அடிப்படை மந்த்ரம் பஞ்சதசீ. இதில் மூன்று தொகுப்புக்கள்.

முதல் தொகுப்புஐந்து அக்ஷரங்களைக் கொண்ட "வாக்பவ கூடம்" எனும் தொடர்; இது அம்பாளுடைய முகமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டாவது தொகுப்பு ஆறு அக்ஷரங்களைக் கொண்ட காமராஜ கூடம் எனும் தொடர்; இது அம்பாளுடைய கழுத்து முதல் இடுப்பு வரை உள்ள அமைப்பு.

மூன்றாவது தொகுப்பு நான்கு அக்ஷரங்களைக் கொண்ட சக்தி கூடம் எனும் தொடர்; இது அம்பாளுடைய இடுப்பு முதல் பாதம் வரை உள்ள அமைப்பு.

ஆக அம்பாளுடைய மந்த்ரஸ்வரூபம் பஞ்சதசீ, யந்த்ர ஸ்வரூபம் ஸ்ரீசக்ரம், தந்த்ர ஸ்வரூபம் கட்கமாலா ஆராதனம்.

இப்பஞ்சதசீயின் ஒவ்வொரு அக்ஷரத்திலிருந்தும் ஏனைய தேவதைகளும், எல்லாத் தத்துவங்களும், ஜீவர்களும் ஜீவராசிகளும், ப்ரபஞ்சமும் தோற்று விக்கப்பட்டன. எந்த எந்த அக்ஷரத்தி லிருந்து எவை எவை தோன்றின, எனும் விபரங்களைப் போதிக்கும் நூல்கள் அநேகம் உள்ளன. அவை களைப் படித்துப் புரிந்து கொள்வது கடினம். தேர்ந்த ஆசானிடம் பாடம் கேட்டுத்தான் அவைகளை உணர முடியும்.

இவ்வேள்விக்குத் தேவையான அளவு விபரமறிய சுருக்கமான விளக்கம் தொடர்கிறது. திரும்பத் திரும்பப் படித்துத் தெளிவை வசப்படுத்திக் கொள்ளலாம்.

பஞ்சதசீயின் பதினைந்து அக்ஷரங் களிலிருந்தே யாவும் தோன்றியுள்ள

தாகையால், அதன்பாற்பட்ட எல்லா விபரங்களையும் ஒன்றாக்கிஅம்மூன்று தொகுப்பினையும் எளிதாக ஒரு வரையறைப் படுத்திப் பார்த்தோமானால் :

முதல் தொடர் ஐந்து எழுத்துக்களும் பஞ்ச பூதங்களாகி அவைகள் வெவ்வேறு விகிதாசாரத்தில் கலைவயாகிப் பிரபஞ்சமாக (நாம் உள்பட) விரிவடைந்ததைப் புரிந்துக் கொள்வோம்.

இரண்டாவது தொடர் ஆறு எழுத்துக்களும் ஆறு ருதுக்களாகி பிரபஞ்சத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைக்கும் ஆதாரங்களாயமைந்துள்ளதைப் புரிந்துகொள்வோம்.

மூன்றாவது தொடர்நான்கு எழுத்துக்களும் தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்), மோக்ஷம் (வீடு) எனும் நான்கு புருஷார்த்தங்களாகி மனிதன் உலகைச் செம்மையுள்ளதாகவும், அமைதியுள்ளதாகவும் சமைத்துக் கொள்ள அடிப்படையாயமைந்துள்ளதெனப் புரிந்து கொள்வோம்.

மேலே சொன்ன மூன்று தொடரில் யாவுமே அடக்கமாகியுள்ளன. பஞ்ச தசீயின் இந்தக் கோணத்தைச் சரி வரப் புரிந்துகொண்டு தேவியை ஆராதித்தால் நாடும் வீடும் இன்ப புரியாகி விடும். இந்தப்பஞ்சதசீ மந்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரமும் வரிசையாகப் பதினைந்து நாள் பாராயணத்திற்கும் அடிப்படையாக அமைக்கப்பட்டுள்ளது.

இனி : ஸ்ரீசக்ரம் என்பது தேவியின் வாசஸ்தானம். இங்கு தேவி ப்ரபஞ்சத் திற்குத் தேவையான யாவற்றையும் ஸாதித்துத்தா வல்லமையுள்ள சக்தி களாகத் தன்னை ஆவிர்ப்பவித்துக் கொண்டு அந்த அந்த ஸ்தானங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறாள். அந்த சக்திகளை ஒவ்வொன்றாக ஸ்மரித்து வணங்கும் நாமாவளிதான் "கட்க மாலா." இதன் ஒவ்வொரு நாமத்தை யும் ஊன்றிக் கவனித்துக் கொண்டே போனால் இச்சக்திகள் யாவும் எப்படி இயங்கிக் கொண்டு நமக்கு நல்வாழ்வை அமைத்துத் தருகின்றன என்பது நன்கு புரியும். இப்படிப்பட்ட

ஒரு அரிய தோத்திரத்தொகுப்பு ஏன் பரவலாகக் கையாளப்படாமலிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இனி இது பரவப் போகிறது என்பது திண்ணம். அதற்கு நாம் யாவரும் முழு மூச்சாகப் பாடுபட வேண்டியதும் அவசியம், அவசரம்.

ருத்ரயாமளம் எனும் தந்த்ரத்தில் உமா மஹேச்வரரின் உரையாடல் மூலம் அனேகம் வழிபாட்டு முறைகளும், தோத்திரங்களும், மந்த்ரங்களும் வாரி வழங்கப்பட்டுள்ளன. அவைகளிலே அன்னை பரசக்தியின் வழிபாட்டு முறையான ''கட்கமாலா'' தோத்திரம் அற்புதச் சக்தி வாய்ந்த ஒன்று.

இந்த வழிபாட்டினால் அடைய முடியாத ஸித்திகள் எதுவுமேயில்லை. மூவுலகுக்கும் அதிபதியாகும் உயர்ந்த உன்னத பதவியைக் கூட அடைந்து விடமுடியும். இப்படி வாக்குறுதி தந்துள்ளவர் வேறு யாருமல்ல, ஸாக்ஷாத் பரமேச்வரனே தான்.

இந்தக் 'கட்கமாலா'வை இன்னும் அதிக விசேஷ சக்தி வாய்ந்த வழி பாடாக 'சுத்தமாலா' எனும் பெயரில் பிரதமை முதல் பௌர்ணமி வரை பதினைந்து விதமாகவும், திரும்ப கிருஷ்ண பிரதமை முதல் அமாவாஸ்யை வரை தலைகீழ் வரிசை யில் அதே பதினைந்தையும் பாரா யணம்செய்து ஸித்திபெறும்வகையில் வகுத்துத் தந்த பெருமை பதினைந்து (12+3) ஆதித்ய ருஷிகளைச் சேரும்.

முன்னம் நம்மில் உள்ள பஞ்சபூதத் தன்மைகளை எவ்வாறு தெய்வத் திற்கு அளித்துப் பின் அவைகளைப் பூரணப் பொலிவுடன் எப்படித் திரும்பப் பெறுகிறோம் எனச் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது.

அதே அடிப்படையில் இந்த வழி பாட்டிலும் பஞ்சபூதத் தன்மைகளைச் செழிப்பாக்கும் உத்தியைக் கை யாண்டுள்ளனர், அந்த ஆதித்ய ருஷிகள்.

இப்பதினைந்தை, ஐந்து, ஐந்தாய்ப் பிரித்து, முதல் ஐந்து நாள் சக்திக்கு;

அடுத்த ஐந்து நாள் சிவனுக்கு; இறுதி ஐந்து நாள் சக்தியும் சிவனும் இணைந்த தத்துவத்திற்கென்று முறைப்படுத்தி ஒவ்வொன்றிலும் ஒரு பூதத்தன்மையை நிறுவியுள்ளனர்.

முதலாவது-காற்று, இரண்டாவது நிலம், மூன்றாவது — நெருப்பு, நான்காவது-நீர், ஐந்தாவது-ஆகாயம். இம்மாதிரி மூன்று தடவை வருவதை யொட்டி மாதம் மும்மாரி இனிதே கிடைக்க வழி வகுத்துள்ளனர்.

இந்தப் பஞ்சபூதங்களின் உயிர்ப்பைத் தாங்கிய பஞ்ச தன்மாத்ரைகள் அம்பாளின் வலது கையிலுள்ள ஐந்து மலரம்புகளில் இருக்கைபெற்றுள்ளன, (பஞ்ச தன் மாத்ர ஸாயகா—லலிதா சஹஸ்ரநாமம் 11-வது நாமம்). மேலே குறிப்பிட்டுள்ளபடி பஞ்ச பூதங்களுக்கும் பஞ்சதசீ மஹாமந்திரத்திற்கும் இன்னுமோர் அழுத்தமான தொடர்பு உண்டு. பஞ்ச பூதங்களின் முக்கிய மூலத்தைத் 'தன்மாத்ரை' எனக் குறிப்பிடுவது மரபு. சப்த, ஸ்பர்ச,

ரூப, ரஸ, கந்தம் என்பவை அவை. இவற்றில் நிலத்தன்மையில் இந்த ஐந்தும், நீரில் நான்கும், நெருப்பில் மூன்றும், காற்றில் இரண்டும், ஆகாயத்தில் ஒன்றும் ஆகப் பதினைந்தாகி ஒவ்வொன்றும் பஞ்சதசீ மந்த்ராக்ஷரம் ஒவ்வொன்றிலும் ஐக்யமாகி உள்ளது.

இந்த விசேஷ மாலாவின் பதினைந்து வித பாராயண முறையில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விசேஷ ஸித்தி உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது. அவையாவன :

1. கட்க ஸித்தி—இதனால் பெரும் ஸாம்ராஜ்யாதிபதி ஆகலாம்.
2. பாதுகாஸித்தி— த்ரிபுவனங்களிலும் செல்வாக்கு ஏற்படும்.
3. அஞ்ஜனஸித்தி-மறைந்துறையும் நிதிகளைக் கண்டறியலாம்.
4. பிலஸித்தி—உருவமாயும், அருவமாயும் நடமிடும் யோகிகளைத் தரிசித்துப் பயனடையலாம்.
5. வாக்ஸித்தி— அபார கவிதா சக்தியும் சொன்ன சொல் பலிக்கும் சக்தியும் சேரும்.

இந்த ஐந்தும் சக்திக்குரியது.

6. தேஹ சுத்தி—உடல் வஜ்ரசரீர மாகும்.

7. உலோஹ ஸித்தி — தங்கம் செய்யும் ஆற்றலை அடைய லாம்.

8. அஷ்டஸித்தி—அணிமாதி எண் வகை ஸித்திகளும் கைகூடும்.

9. வச்யஸித்தி—காண்போரெல்லாம் வசமாவர்.

10. ஆகர்ஷணஸித்தி— இருக்குமிடத் திலிருந்தவாறே எதையும் நம்மிடம் வரச் செய்யலாம்.

6 முதல் 10 வரையுள்ள ஐந்தும் சிவனுக்குரியது.

11. மோஹனஸித்தி—யாரும் நம்மை கண்ணுற்ற மாத்திரத்தில் அடிமையாவர்.

12. ஸ்தம்பனஸித்தி — வைரிகளைச் செயலிழக்க வைக்கலாம்.

13. சதுஷ்டய ஸித்தி—தர்மம், அர்த் தம், காமம், மோக்ஷம்—ஆகிய நான்கு புருஷார்த்தங்களும் வசமாகும்.

14. நித்யானந்தஸித்தி — லோகாயத மானதோ, ஆன்மீகமானதோ எந்த அனுபவம் கிடைத்தாலும் அதை நித்யானந்தப் பாங்கோடு அனுபவிக்கும் சமரஸ நிலை கைகூடும்.

15. போகமோக்ஷஸித்தி — இஹத்தில் நிறைவான போகமும், பரத்தில் சாச்வதமான மோக்ஷமும் நிச்சய மாய்க் கிடைக்கும்.

*11 முதல் இம்மூன்றாவது ஐந்தும் சிவ-சக்தி ஐக்கிய வடிவுக்குரியது.*

இவ்வளவு ஸித்திகளையும் உத்திர வாதமாய்த் தரவல்லதாகையால் இவ் வழிபாட்டு முறையை வெகு இரகசிய மாய் வைத்துக் காத்து வந்துள்ளனர், நம் முன்னோர். இதில் சொல்லப்பட்ட ஸித்திகளை மட்டும் வேண்டி யாரும் தவமியற்றுவரேயானால் எதுவும் கை கூடாது. மாறாக - ஸத்திகள் மீது நாட்டமே கொள்ளாமல் உபாஸனா தெய்வத்தின் ப்ரீதி ஒன்றையே குறிக் கோளாக்கித் தவமியற்றினால் எல்லா ஸித்திகளும் இயல்பாகவே நமக்கு வசமாகும். அந்த ஸித்திகளை நாம்

அற்பச் சுயநலத்திற்காகப் பயன்படுத்தாமல் லோக க்ஷேமத்தை முன்னிட்டு ஈச்வர ஸங்கல்பங்கள் நிறைவேற அவற்றைப் பயன்படுத்தும் தெளிவும், திறனும் நம்முள் மேலோங்கி, நாம் நல்லவனாகவும், வல்லவனாகவும், யாவர்க்கும் இன்றியமையாதவனாகவும் இறைவனுக்கு இனியவனாகவும் வளைய வருவோம். இப்படிப்பட்ட மஹத்துவங்கள் கைவந்த நன்மக்களே உலகில் பரவலாக இருந்து ப்ரபஞ்சத்தை அறந்தவறாமல்நடத்திச் செல்ல வாய்ப்பிருக்கவேண்டும் என்பதற்குத்தான் இவ்வாறான அரிய வழிபாட்டு முறைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

இனி இச்'சுத்தமாலா'த் தொகுப்பின் 'பலச்ருதி'யைக் காண்போம்.

'நினைத்தாலே யாவற்றையும் கைகூடவைக்கும் இம்மஹத்தான சுத்தமாலா'வை எப்போதும் கையாண்டு பயனடைவதோடு, அடியில் கண்ட நெருக்கடிக்காலங்களில் வெகு தீவிரமாக ஆங்காங்கு கூட்டுவழிபாடுகளை

நடத்தி சுபிட்சத்தையும் சாந்தியையும் மீட்டு நிலை நிறுத்தவேண்டும்.

அரசனுக்கு ஆபத்து வரும்போதும், அரசாங்கத்தில் குழப்பங்கள் நேரும் போதும், கலகங்கள் தோன்றும் போதும், போர்கள் மூளும் போதும், திருடர் பயம் அதிகரிக்கும் காலங் களிலும், வன்முறைகள் விரிவாகும் போதும், மித்ரபேதம் நம்பிக்கைத் துரோகம் பரவலாகும் போதும், பெருந் தீ, பெருவெள்ளம், பேய்மழை, சூறாவளி, புயல், பூகம்பம், வறட்சி ஆகிய துர்பிக்ஷங்கள் நேரும்போதும், அம்மை, வாந்திபேதி, காலரா ஆகிய கடும் நோய்கள் பரவும்போதும், பேய், பிசாசுகளின் உபத்திரவங்கள் உண்டாகும் போதும், ஏவல், பில்லி சூன்யங்களுக்கு வாய்ப்பு மலிந்து துராசாரங்கள் பெருகும் போதும், மக்கள் பீதிக்காளாகி நிவர்த்திக்காக ஏங்கித்தவிக்கும் போதும், இன்னும் ஏனைய துர்நிமித்தங்கள் அதிகரிக்கும் போதும்—

இவ்வழிபாட்டினைச் சமய சஞ்சீவி யாய்த் துணை கொண்டு எதையும் தவிர்த்துத் தற்காத்துக் கொள்ளலாம் எனச் சாக்ஷாத் பரமேச்வரனால் சாஸனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சாஸனத்தில் ஒளிவீசும் ஸத்தி யத்தை ஸாத்தியமாக்கிக் கொள்ளத் தான், ஆஸ்திகப் பெருமக்களின் ஒத் துழைப்பை எதிர்பார்த்து நம்நாட்டின் ஸுவாஸினிப் பெருமாட்டிகளிடம் இம் மாபெரும் வேள்வியினை நடத்தி, உலக சமாதானத்தையும், லோக க்ஷேமத்தையும், ஸமூகத்திற்கு அறத் தில் பிடிப்பையும், நாட்டை நடத்திச் செல்லும் ஆண்களுக்குப் பேராண் மையில் நிலைப்பையும், மக்களிடம் தெய்வ நம்பிக்கையையும் நிலைநாட் டித் தருமாறு உரிமையுடன் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்படுகிறது.

ஆவன செய்வதற்கு உடனே முனைய வேண்டும். பெரும் வெற்றிகளை நமக் கும் நாட்டுக்கும் ஈட்டித்தரவேண்டும். அறம் தழைக்க வேண்டும்! அமைதி நிலைக்கவேண்டும்.

—முதல் பாகம் முற்றும்—

## முதல் பாகத்தின் முடிவுரை.

இதுவரை முதல் பாகத்தில் நீங்கள் படித்துமுடித்த விஷயங்களில், ஆன்மிக விஷயங்கள் உள்ள அளவுக்குச் சமமாகவே லோகாயதவிஷயங்களும் இடம் பெற்றுள்ளனவே! ஒரு ஆன்மீக நூலில் இத்தனை விஷயங்களைச் சேர்த்து ஆன்மீகத்திற்கு இரண்டாமிடம் அளித்துள்ளது போல் தோன்றுகிறதே— இது அவசியமா எனச் சிலர் எண்ணலாம். காரணம் - ஆன்மீகம் வேறு - உலகியல் வேறு என எண்ணி நாம் பழக்கப்பட்டு விட்டோம். அந்தப் பழக்கத்தை இனி மேல் நாம் மாற்றிக் கொண்டாக வேண்டும். ஏனென்றால், இவ்விரண்டு விஷயங்களும் ஒன்றையொன்று சார்ந்த, பிரிக்கவியலாத நிலையில் இயங்குபவை.

ஆன்மீகம் என்பது நிவ்ருத்திமார்க்கம். அதாவது நாம் கடைத்தேறவழி.

உலகியல் என்பது ப்ரவ்ருத்திமார்க்கம். அதாவது நாம் வாழும்போது விழிப்புணர்வினுக்கு முக்கியத்துவம் தராமல்


உலகியலில் ஆழ்ந்து அமிழ்ந்து விடு வதும், அப்படி வாழ்வதால் உலகிட மிருந்து நாம் பெறுவதற்குப் பிரதி யான கடமைச்சுமை அதிகமாகிவிடு வதும் — அதனால் உலகியலைப் பற்றிய கவலையே சுமையே — மிகப் பெரிதாகி, நம்மை மீட்டுக் கொள்ளும் செயலான நிவ்ருத்தி மார்க்கம் என்று ஒன்று இருப்பதே மறந்து போய் விடு கிறது. இந்த மறதியால்தான் நமது சீரிய தன்மைகள் குன்றி விலங்குத் தன்மை ஆதிக்கம் பெறும் வாய்ப்பு மலிந்து விடுகிறது. இத்தாழ்மையை நீடிக்க விடக்கூடாது என வலியுறுத் தத்தான் இந்தஅளவுக்கு உலகியலைக் கலந்து எழுத நேர்ந்து விட்டது. என்னை மன்னித்துவிடுங்கள்.

ஆசிரியன்.


# தேவீ கட்கமாலா

(இரண்டாம் பாகம்)

## சக்ரதரிசனம்



மஹாமேரு



ஸ்ரீசக்ரம்

ஸ்ரீசக்ரம், மஹாமேரு இரண்டும் ஒன்றேதான்.

ஸ்ரீசக்ரம் என்பது வரைகோடுகளால் மஹாமேருவின் அமைப்பை ப்ரகடனப் படுத்துவது.

மஹாமேரு என்பது சக்தி ஸமூஹத் தோடு மஹா த்ரிபுரஸுந்தரி உறையும் அ மை ம ப் பை முப்பரிமாணத்தில் ப்ரகடனப்படுத்துவது.

சிலா மே ரு வை உச்சியிலிருந்து கொண்டு பார்த்தால் ஸ்ரீசக்ரமாய்த் தெரியும். ஸ் ப டி க மேருவானால் அடிவழியாய்ப்பார்த்தாலும் ஸ்ரீசக்ரம் தெரியும்.

ஸ்ரீசக்ரத்தில் இருக்கை பெற்றுள்ள சக்திஸமூஹத்தின் நாமங்கள் (பெயர் கள்) அடங்கிய தோத்திரந்தான் தேவி கட்கமாலா. அவை வெறும் பெயர் களல்ல.

ஆதிகுரு ஸதாசிவர், நமக்காக மந்த்ர ஒலிகளால் தொகுத்த சத்திவாய்ந்த நாமங்கள், அவை. அந்நாமாகளில் இழையோடும் உயிரோட்டத்தைச் சரி வரப் புரிந்து கொண்டுச் சொந்தமாக்

கிக் கொண்டு விட்டால் ஒவ்வொரு வரும் ஒரு நடமாடும் சக்தி நிலயமாகி விடலாம்.

பரவலாக நடமிட்டு யாவரும் உணர்ந்து அனுபவித்து வரவேண்டிய இந்த விஞ்ஞான உண்மையை 'இரகசியம்' என்ற சிவப்பு நாடாவால் கட்டிப்போட்டு முடக்கி வைத்து வெளிச்சத்திற்கு வரவொட்டாமல் ஏன் தடுக்கப்பட்டுள்ளது என்பது புதிராக இருக்கிறது.

இந்நூற்றாண்டில் இதுவரை இதனைக் கையாண்டு வந்தவர்கள் உண்மையிலேயே இதன் அருமை பெருமைகளை விரிவாய் தெளிவாய் உணர்ந்துதான் வழிபட்டார்களா, அல்லது, ப்ரமையுடன் ஆனால் பக்தி பயம் ச்ரத்தையோடு வழிபட்டு எதை யெதையோ அடைந்து, அண்டி வருவோர்க்குத் தம் ஸாதனைத் திறத்தால் உதவி வந்தார்களா என்பதும் ஒரு புதிர்தான்.

எது எவ்வாறாயினும் இருக்கட்டும். இப்போதாவது இந்த நூல் வழியாக

அந்த விஞ்ஞான உண்மைகள் வெளிப் பட்டு வெளிச்சத்திற்கு வந்து பரந்து நிறைந்து ஆர்வமும் ச்ரத்தையும் உள் ளோர்க்குக் கைகொடுக்கப் போகின்ற னவே; அதுவே நம் சந்ததிகளின் பாக்கியந்தான்.

விவசாயி எவ்வாறு காலம், நிலம், சூழல், வசதி இவைகளின் தன்மையை நன்கு தெளிந்து எவ்வாறெல்லாம் விவசாயம் செய்து பலனை அறுவடை செய்கிறானோ அதேபோல்தான் நம் முள் இறைச்சக்தியைப் பெருக்கிக் கொள்ள வழிபாடுகளைக் கையாள வேண்டும். வழிபாட்டின் உயிர்நாடியும் இலக்கணமும் புரிந்தால் தான் 'கையாளுகை' பலன் கனிவதாக அமையும். எனவே, தொடரும் விளக் கங்களை ஆழ்ந்து பலமுறை படித்துப் பயன்பெறுங்கள்.

யந்த்ரம் (சக்ரம்), ஒருவரைபடத்தின் (MAP, PLAN, BLUE PRINT) அமைப்பைப்போன்றது. கட்டிடத்தின் வரைபடமானால், எங்கெந்த நிலையம் (அறை) எங்கெங்கு அமைந்துள்ளது என்பதைக்காட்டும்.

தேசத்தின் வரைபடமானால் எங் கெங்கு நகரம், பட்டிணம், கிராமம், மலை, நதி, வாய்க்கால், விளைநிலம், சதுப்புநிலம் என்றெல்லாம் ஏனைய விளக்கங்களைத் தரும்.

சக்ரம் எங்கெந்தக் கோடுகளில் கட்டங்களில், கோணங்களில், தளங் களில் என்னென்ன சக்தியைக் கொண்ட தேவதைகள் இருக்கை பெற்றுள்ளன எனும் உண்மைகளைப் புலப்படுத்தும். மட்டுமல்ல, ஒவ்வொரு கோட்டிலும் (ரேகை), ஸந்தியிலும் ஒருவித ஆக்க அலைபொதிந்திருக்கும். உதாரணமாக, அவரவர் உள்ளங் கையில் அவரவரது இந்தப் பிறவியின் வாழ்க்கையை விளக்கும் சக்ரம் இருக் கிறது. கைரேகை வல்லுனர் அதை ஆராய்ந்துவிட்டு எங்கெந்தக் கோள் கள் பலமாக உள்ளன அல்லது பலம் குறைவாக உள்ளன. எப்போது என்னென்ன பலன்கள் நடக்கச் சாத்தியக்கூறுகள் உள்ளன என்று அறிகிறார். இதையும் ஒப்பிட்டு உணரவேண்டும்.

எந்தச் சக்ரத்திலும் அதன் நடுமத்தியில் அந்த யந்த்ரத்திலுள்ள சக்தி ஸமூஹத்தின் மூலதேவதை ஸாந்நித்யம் பெற்றிருக்கும்.

இம்மாதிரி சக்ரங்களை வரைவதானால் சிலநாட்கள் அத்தேவதையை முறைப்படி ஆராதித்து விரதமிருந்து ஒரு நல்ல நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு தயார் செய்யவேண்டும். பின்னர் அச் சக்ரத்தை முறையே ஜலத்திலும், பாலிலும், தானியத்திலும் குறிப்பிட்டகால அளவு வாஸம் செய்வித்துப்பின் ப்ராணப்ரதிஷ்டை செய்து பூஜிக்கத் துவங்கவேண்டும்.

இங்கே தேவி கட்கமாலாவின் வழிபாட்டுக்குரிய யந்த்ரம்-ஸ்ரீசக்ரம்.

ஸ்ரீசக்ரத்தில் நடுவே பிந்துவும் (வட்டமான புள்ளி) பிந்துவைச் சுற்றிலும் படிப்படியாய் வெளிநோக்கி நாற்பத்தி மூன்று முக்கோணங்களும், ஒரு எட்டிதழ்க் கமலமும், ஒரு பதினாறிதழ்க் கமலமும், மூன்று வலயங்களும்

(வட்டம்), மூன்று நாற்சதுரக்கோடு களும், நான்கு வாயில் போன்ற இடை வெளியும் அமைந்துள்ளன.

நடுவே பிந்துவில் அன்னை பராசக்தி, லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி பரா பட்டாரிகையாக, யாவற்றுக்கும் தலைவியாக, சிங்காதனத்தில், தனது மறுபாதியாகிய காமேச்வர மஹா பட்டாரகரின் இடது துடைமீது அமர்ந்து எழுந்தருளியுள்ளாள். முதலில் அன்னையிடமிருந்தே வழி பாடு தொடங்குகிறது.

இதுமுதல் வரிசையாய் வழிபாட்டி லுள்ள திருப்பெயர்களைக் கூறி அதனதன் சூட்சமத்தை விளக்கி அந்தந்த ஸ்தானத்தையும் சுட்டிக் காட்டப்பெறும்.


முதலில், குறிப்பிட்ட கோணங்களின் தொகுப்பைக் கொண்ட அந்த அந்த ஆவரணங்களை அதததற்குரிய ஒட்டு மொத்தக் குறிப்புக்களுடன் பார்ப் போம்,

தேவியின் நவாவரண பூஜையென்பது ஸ்ரீசக்ரத்தில் இருக்கும் ஒன்பது ஆவரணங்களிலும் உள்ள சக்தி ஸமூஹத்தை ஆராதனை செய்வது தான்.

**முதல் ஆவரணம்**


த்ரைலோக்ய மோஹனசக்ரம்-மூவுலகையும் மோஹிக்கவைக்கும் ஆற்றலைத் தரவல்லது, இதில் மூன்று சதுரக் கோடுகள் அமைந்துள்ளன.

**முதல் கோட்டில்,**




பத்து ஸித்தி தேவதைகளும்

இரண்டாவது கோட்டில்,



எட்டு மாத்ருகா தேவிகளும்,

மூன்றாவது கோட்டில்,




பத்து முத்ராசக்திதேவிகளும், உள்ளனர்.

மூன்று வித சக்தி ஸமூஹத்தைக் கொண்ட இக்குழாமிற்கு ப்ரகட யோகினிகள் எனப்பெயர்.

**இரண்டாவது ஆவரணம்**

ஸர்வாசாபரிபூரக சக்ரம்-எல்லா ஆசைகளையும் நிறைவேற்றித் தரவல்லது. பதினாறு தாமரையிதழ்கள், வட்டமாய் அமைந்துள்ளன.

இதில்,



பதினாறு நித்யகால தேவிகள்

உள்ளனர். இச்சக்திக் குழாமிற்கு குப்தயோகினிகள் எனப்பெயர்.

### மூன்றாவது ஆவரணம்

ஸர்வஸம்க்ஷோபண சக்ரம் யாவற்றை யும் கலக்கமடையச் செய்யவல்லது எட்டு தாமரையிதழ்கள் வட்டமாய் அமைந்துள்ளன.

இதில்,




எட்டு சக்தி தேவிகள்

உள்ளனர். இக்குழாமிற்குப் பெயர் குப்ததரயோகினிகள்.

### நான்காவது ஆவரணம்

ஸர்வஸௌபாக்யதாயக சக்ரம். எல்லா வித ஸௌபாக்யங்களையும் தர வல்லது. பதினான்கு முக்கோணங்கள் உள்ளன.

இதில்,




பதினான்கு சக்தி தேவிகள்

உள்ளனர். இவர்களுக்குப் பெயர் ஸம்ப்ரதாய யோகினி.

**ஐந்தாவது ஆவரணம்**

ஸர்வார்த்தஸாதகசக்ரம் — எல்லா விதச் செல்வங்களையும் தரவல்லது. பத்து முக்கோணங்கள் உள்ளன.

இதில்,



பத்து சக்தி தேவிகள்

உள்ளனர். இந்தச் சக்திக் குழாமிற்குப் பெயர் குலோத்தீர்ணயோகினி.

### ஆறாவது ஆவரணம்

ஸர்வரக்ஷாகரசக்ரம் — எல்லா விதப் பாதுகாப்புக்களையும் தரவல்லது. இதிலும் பத்து முக்கோணங்கள் உள்ளன.

இங்கே




பத்து சக்தி தேவிகள்

உள்ளனர். இவர்களது பெயர் நிகர்ப்ப யோகினி.

### ஏழாவது ஆவரணம்

ஸர்வரோகஹர சக்ரம்—எல்லாவித ரோகங்களையும் அழிக்க வல்லது. இதில் எட்டு முக்கோணங்கள் உள்ளன.


இங்கே,



எட்டு வாக்தேவிகள் உள்ளனர். இவர்களின்பெயர் ரஹஸ்ய யோகினி.

அடுத்ததாக ஏழாவது எட்டாவது ஆவரணங்களுக்கிடையே ஒரு சதுரத்தை பாவித்துக் கொண்டு அதன் நான்கு திக்கிலும் உள்ள ஆயுத சக்திகளுக்கு ஆராதனை.

இங்கே,




1. பாணசக்தி, 2. தனுஸ்சக்தி,
3. பாச சக்தி, 4. அங்குச சக்தி.

**எட்டாவது ஆவரணம்**

ஸர்வஸித்திப்ரத சக்ரம்—இங்கே ஒரே ஒரு முக்கோணம், ப்ரதமத்ரிகோணம் எல்லாவித ஸித்திகளையும் தர வல்லது.


இங்கே,




மூன்று மஹாசக்திகள் உள்ளனர். இவர்களைப் பூஜித்து விட்டு நடுவில் மூலசக்திக்கும் பூஜை. இவர்களுக்குப் பெயர் அதிரஹஸ்ய யோகினி.


**ஒன்பதாவது ஆவரணம்**

ஸர்வானந்தமய சக்ரம்—ப்ரதமத்ரி கோணத்தின் நடுவே உள்ள வட்டம்—பிந்து எல்லாவித ஆனந்தங்களையும் தரவல்லது,




இங்கே காமேச்வர மஹாபட்டாரகரின் தொடை மீது அமர்ந்திருக்கும் காமேச்வரி மஹாபாட்டாரிகைக்குப் பூஜை. பெயர் பராபராஹஸ்ய யோகினி.

கட்கமாலா நாமபாராயணத்தில் முதலில், 'நமஸ்த்ரிபுரஸுந்தர்யை'' எனத் துவங்கி, தொடர்ந்து ஆறு அங்க தேவிகளையும் ஆராதித்தல், வரும். இந்த ஏழுக்கும் இடம் பிந்துவில் தான். இதைத் தொடர்ந்து ப்ரதம த்ரிகோணத்தில் கீழ்முனையிலிருந்து அப்ரதக்ஷிணமாக பதினைந்து நித்யா தேவிகளையும் ஆராதித்து விட்டு, மறுபடியும் பிந்துவில் பதினாறாவது நித்யாதேவிக்கு ஆராதனம்.



நித்யா தேவிகளில் பதினாறாவது மஹாநித்யா என்று முடிந்தவுடன் 'பரமேச்வர பரமேச்வரி' என ஆராதிப்பது நடுவில் பிந்துவிலேயே. இதன் பின் மித்ரீசமயி என ஆரம்பித்து ஸ்ரீராமானந்தமயி என முடியும் வரை ஏழாவது ஆவரணத்தில் ப்ரதமத்ரி கோணத்தின் மேலே உள்ள மூன்று கோடுகளிலும் ப்ரதமத்ரிகோணத்திலும் ஆராதனம்.



இறைத்தன்மை எப்படி ஸ்ரீசக்ர அமைப்போ அதேபோல் ப்ரபஞ்சமும்

ஒரு ஸ்ரீசக்ர அமைப்பு. இன்னும், ஆறறிவு படைத்த மனிதனும் ஒரு ஸ்ரீசக்ர அமைப்பே.

மனிதன், வழிபாட்டின் நுணுக்கங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உபாஸனை செய்யச் செய்ய அவனது வ்யக்தியில் (அமைப்பில்) உள்ள ஸ்ரீசக்ரத்தில் இறைச்சக்தி மேலோங்கி ஒளிவீச ஆரம்பிக்கும். அப்போது தன் தேஹத்தையே அவன் ஸ்ரீசக்ரமாயுணர்ந்து வழிபட ஆரம்பிப்பான். அந்த வழிபாட்டின் விளைவு அவன் எடுத்த காரியம் வெற்றியாகும்; உலகிலே நல்லவனாக உயர்வான்.

யாவருக்கும் நன்கு தெரிந்த, ஆனால் தன்முனைப்புக் காரணத்தால் அலட்சியப்படுத்தப்படும், 'நல்லவனாக உயர்தல்'' எனும் சீரிய தன்மையை இங்குச்சற்று விளக்கிவிட்டு மேலே செல்வோம்.

வாழ்வில் ஆசை இருக்கவேண்டும்—பேராசை கூடாது. போட்டி இருக்க

வேண்டும்—பொறாமை கூடாது. சுறு சுறுப்பு இருக்க வேண்டும்— சோம்பேறித்தனம் கூடாது, பரபரப்பும் கூடாது.

ஆண்மை இருக்கவேண்டும்—ஆணவம் கூடாது. வீரம் இருக்க வேண்டும்— வீம்பு, கோபம், ஆத்திரம் இவை கூடவே கூடாது.

தர்ம சிந்தனை வேண்டும்— விளம்பர ஆசை கூடாது.

பண்புவேண்டும்—பாசாங்கு கூடாது. வாய்மைதான் இருக்கவேண்டும் — பொய்மையே கூடாது. மரியாதையை அதட்டிப்பெறுவது காட்டுமிராண்டித் தனம்; மரியாதையை மரியாதையால் பெறுவது மனிதத்தனம். இவற்றை நிச்சயமாய்ப் பிறரிடம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் எப்படி இருக்கிறோம் என்ற சிந்தனைக்கே இடந் தருவதில்லை. முதலில் நம்மைச் சரி செய்து கொள்ளவேண்டும். பிறரிடம் எதிர்பார்க்கும் நல்லவைகளை முதலில் நம்மில் ஸ்திரப்படுத்திக் கொள்ள

வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனுக்கு ஆற்றும் வழிபாடுகள் இடர்களுக்கும் தாமதங்களுக்கும் இடமேயிராத முழுப்பயனைக் கனிய வைக்கும்.

''லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து'', — உலகம் முழுவதும் க்ஷேம மாக இருக்கவேண்டும் என்பது மறை களின் அறைகூவல் மட்டுமல்ல, வலியுறுத்தலும்கூட. உலகம் க்ஷேம மாக இருந்துவிட்டால், நாமும் அதன் அங்கந்தானே—நாமும் க்ஷேமமாகவே இருக்கமுடியும் என்பதுதான் இதன் கருத்து. நான் மட்டும் க்ஷேமமாக இருந்தால்போதும், உலகைப் பற்றி எனக்கேன் கவலை என்று எண்ணக் கூடாது. இப்படி அடுத்தவர்களும் எண்ணுவார்களேயானால் உலகம் என்னவாகும், நான் என்ன ஆவேன், அந்த உலகத்திடமிருந்துதானே எனக்கு எதுவும் கிடைக்கவேண்டும் என்ற கவலை நம் எண்ணங்களில் இழையோட வேண்டும். அப்போது தான், நல்லவனாய் வாழவேண்டும், அதில்தான் நன்மை இருக்கிறது என்ற

'ஞானோதயம்' ஏற்படும். இந்தத் தெளிவு உலகில் பரவலாகி விட்டால் சுபீட்சத்திற்குப் பஞ்சமே இராது. நல்லவனாக வாழ்ந்து உயர்ந்தவனாக மலர்வதற்குத்தான் இறைவழிபாடு. வழிபாட்டில் ஆசாரமாயிருப்பதைவிட நல்லவனாயிருப்பது மிகமிகமுக்கியம். இந்த உணர்வுகளுடன் வழிபாட்டில் முழுமூச்சாக ஈடுபடவேண்டும். அதாவது நிலத்தைப் பண்படுத்த வேண்டும். நல்ல விதையை நட வேண்டும். சரியாக உழைத்து எச்சரிக்கையாய்ப் பயிர் செய்ய வேண்டும். அமோகமான மகசூல் உத்திரவாதம்.

இந்த சாத்தியக் கூறுகளையெல்லாம் மனதில் இருத்திக்கொண்டு, தொடர்ந்து வரும் விளக்கங்களைப் படியுங்கள். விளக்கங்களில் நின்று ஆழ்ந்து ஆங்காங்கே ஒளிரும் சக்தித் தரங்கள் (திறம்) எவ்வாறு நம்முள் அமைந்துள்ள ஸ்ரீசக்ர அமைப்பில் நட மிட்டு நம்மை நாம் பிறந்துள்ளதன் நோக்கம் நிறைவேறுமாறு செயல்பட வைக்கின்றன எனச் சிந்தித்து, அவை

களை நமது நடப்பில் பொருத்திப் பார்த்துத் தெளிவு பெறுங்கள், முன் னேறுங்கள்!

'கட்கமாலா' ஆரம்பத்தில் முதலில் ஒருமுறை ஒன்பதாவது ஆவரணத் திலும், எட்டாவது ஆவரணத்திலும் பின் ஏழாவது ஆவரணத்திலும் ஒரு பகுதி ஆராதனையைச் சொல்லி முடித்துவிட்டுப்பின் முதலாவதி லிருந்து தொடங்கி ஒன்பதாவதில் வந்து முடியும். அந்த முறைப்படி தொடர்வோம்.

**முக்கியக்குறிப்பு :**

பிறந்தது முதல் காம, மோஹ, மத, மாத்சர்ய, லோப, குரோதமென்னும் ஆறுவித உந்தல்களுக்கிலக்காகிச் செயல்பட்டு பாபபுண்யக்கணக்கினை விரிவாக்குகிறோம். இக்கணக்கின் அளவு, தன்மைக்குரிய அனுபவங் களைப் பெற்றுத் தீர்க்கத்தான் திரும்பத்திரும்ப பிறந்திறக்க நேர் கிறது. இச்சங்கிலித்தொடரை வெட்டி வீழ்த்தி முடிக்க உதவுவதுதான்

'கட்கமாலா' (வாள்மாலை). வாருங்கள்! வாட்களின் கூர்மையை ஆய்ந்தறிவோம்!

பிந்துவில்

ஒன்பதாவது ஆவரணம்.

ஓம் நமஸ்த்ரிபுரஸுந்தர்யை நம :

தேவித்ரிபுரஸுந்தரிக்கு நமஸ்காரம்.

(இனி தேவியின் மெய்க்காப்பாளர்களான சக்திகள்)

ஹ்ருதயதேவி —
ஆறுவகை உந்துணர்வில்காமம்
இந்தச்சக்தியின் ஆதிக்கத்தில்.
ஆறுவிதப்ரயோகங்களில் இந்தச்
சக்தியின் ப்ரயோகாக்ஷரம்'நம:'
ப்ரயோகம்—வச்யம்.

சிரோதேவி —
உந்தல் உணர்வு — மோஹம்
ப்ரயோகாக்ஷரம்—ஸ்வாஹா.
ப்ரயோகம்—மோஹனம்.

சிகாதேவி —

உந்தல் உணர்வு—மதம்.
ப்ரயோகாக்ஷரம் - வஷட்.
ப்ரயோகம்—ஸ்தம்பனம்.

கவசதேவி —

உந்தல் உணர்வு—மாத்சர்யம்.
ப்ரயோகாக்ஷரம்—ஹூம்.
ப்ரயோகம்—வித்வேஷணம்

நேத்ரதேவி —

உந்தல் உணர்வு—லோபம்.
ப்ரயோகாக்ஷம்— வௌஷட்.
ப்ரயோகம் - உச்சாடனம்.

அஸ்த்ரதேவி —

உந்தல் உணர்வு—குரோதம்.
ப்ரயோகாக்ஷரம்—பட்.
ப்ரயோகம்— மாரணம்.

எட்டாவது ஆவாரணம் ப்ரதமத்ரி கோணத்தில்:-

(ப்ரதமை முதல் பௌர்ணமி வரை, திரும்ப அடுத்த ப்ரதமை முதல் அமாவாஸ்யை வரை ஒன்று முதல் க்ரமமாய் 15 கலைகளுடன் ஒளிரும் திதிநித்யா தேவிகளுக்கு ஆராதனை.)

| நித்யாதேவி | வளர்பிறை | தேய்பிறை |
|---|---|---|
| காமேச்வரி | ப்ரதமை | அமாவாஸ்யை |
| பகமாலினி | த்விதியை | சதுர்த்தசி |
| நித்யக் லின்னா | த்ருதியை | த்ரயோதசி |
| பேருண்டா | சதுர்த்தி | த்வாதசி |
| வன்ஹி வாஸினி | பஞ்சமி | ஏகாதசி |
| மஹாவஜ் ரேச்வரி | ஷஷ்டி | தசமி |
| சிவாதூதி | ஸப்தமி | நவமி |
| த்வரிதா | அஷ்டமி | அஷ்டமி |
| குலஸுந் தரி | நவமி | ஸப்தமி |
| நித்யா | தசமி | ஷஷ்டி |
| நீலபதாகா | ஏகாதசி | பஞ்சமி |
| விஜயா | த்வாதசி | சதுர்த்தி |
| ஸர்வ மங்களா | த்ரயோதசி | த்ருதியை |
| ஜ்வாலா மாலினி | சதுர்த்தசி | த்விதியை |
| சித்ரா | பௌர்ணமி | ப்ரதமை |
| மஹா நித்யா | (பதினாறு கலைகளுடன் எப்போதும் பிந்துவில் ப்ரகாசித்துக் கொண்டிருப் | |

பவள். அதாவது மஹாத்ரிபுரஸுந்தரியேதான் மஹாநித்யை)

இனி ஏழாவது ஆவரணத்தில் நடுத்ரிகோணத்தின் மேலேயுள்ள இடைவெளியிலிருக்கும் மூன்று கோடுகளிலும், ப்ரதமத்ரிகோணத்தின் மூன்று மூலைகளிலும், நடுவில் பிந்துவில் 'பரமேச்வர பரமேச்வரி' என்று தொடங்கி குருமண்டல நாதர்களை ஆராதித்தல்.

மித்ரீசமயி
ஷஷ்டீசமயி
உட்டீசமயி
சர்யாநாதமயி
லோபாமுத்ராமயி
அகஸ்த்யமயி
காலதாபனமயி
தர்மாசாரமயி
முக்தகேசீச்வரமயி
தீபகலாநாதமயி
விஷ்ணுதேவமயி
ப்ரபாகரதேவமயி
தேஜோதேவமயி

மனோஜதேவமயி
கல்யாணதேவமயி
ரத்னதேவமயி
வாஸுதேவமயி
ஸ்ரீராமானந்தமயி

முன்னமேயே ஒன்று முதல் ஒன்பதாவது ஆவரணம் வரையிலான தொகுதி விவரங்களும் தன்மைகளும் விளக்கப் பட்டுள்ளன.

இங்கிருந்து ஸ்ரீசக்ரத்தின் நவாவரண தேவதைகளின் ஆராதனம் துவங்குகிறது. ஒவ்வொரு நாமத்தையும் சொல்லி அதற்குரியசக்தி விசேஷமும் விவரிக்கப்படுகிறது.

இவ்வளவு சக்தித் தத்துவங்களும் தேவைக்கேற்ப ஆங்காங்கு செயல் பட்டுத்தான் ப்ரபஞ்சத்தின் இயக்கமும் தனிமனிதன் இயக்கமும் செம்மையாய் நடைபெறுகின்றன.

இச்சக்திகள் ஸ்ரீசக்ரத்திலும், ப்ரபஞ்சத்தின் இயக்கத்திலும், நம்முள்ளும் நடமிடுவதைக்காண ஆழ்ந்து அடிக்கடி படியுங்கள்.

அணிமாஸித்தி— அணுவளவுக்கும் சுருங்கிவிடும் திறம்.

லகிமாஸித்தி —பஞ்சினும் இலேசாய் ஆகும் திறம்.

மஹிமாஸித்தி — விரும்புமளவு பெரிதாய் ஆகும் திறம்.

ஈசித்வஸித்தி — தலைமை வகிக்கும் திறம்,

வசித்வஸித்தி — கட்டுப்படுத்தி அடக்கும் திறம்.

ப்ராகாம்யஸித்தி— எதையும் அடையும் திறம்.

புக்திஸித்தி —போகங்களை முழுமையாய் நுகரும் திறம்.

இச்சாஸித்தி —விரும்பியதைப் பூர்த்தி செய்துகொள்ளும் திறம்.

ப்ராப் திஸித்தி—நினைத்த மாத்திரம் எங்கும் போய்ச் சேரும் திறம்.

ஸர்வகாமஸித்தி எக்காரியத்திலும் வெற்றிபெறும் திறம்.

ப்ராம்ஹி—வளரும் திறம்.
மாஹேச்வரி—ஆளுகை திறம்,
கௌமாரி—இளமை திறம்,

வைஷ்ணவி—செல்வாக்கை
வளர்க்கும் திறம்.
வாராஹி—பிடிவாதமாய்ச்
சாதிக்கும் திறம்.
மாஹேந்த்ரி—போட்டியிட்டு
வெற்றிபெறும்திறம்.
சாமுண்டா—தீயவற்றை
ஒடுக்கும் திறம்,
மஹாலக்ஷ்மி—சந்தோஷத்தைப்
பரப்பும் திறம்.
ஸர்வஸம்க்ஷோபிணி—கிளர்ந்தெழும்
உணர்ச்சி திறம்.
ஸர்வவித்ராவிணி—விரட்டி
யடிக்கும் திறம்.
ஸர்வாகர்ஷிணி—நாடிவரச்
செய்யும் திறம்.
ஸர்வவசங்கரி—வசப்படுத்திக்
கொள்ளும் திறம்.
ஸர்வோன்மாதினி—மதியை
மயக்கும் திறம்.
ஸர்வமஹாங்குசா—தடுத்து
இழுக்கும் திறம்.
ஸர்வகேசரி—காற்றெனக்
கடுகிடும் திறம்,

ஸர்வபீஜா—விதைக்கும் திறம்.
ஸர்வயோனி—விளைக்கும் திறம்,
ஸர்வத்ரிகண்டா—காரியத்தின்
திட்டம், செயல்பாடு, விளைவு
மூன்றையும் ஆளும் திறம்.

த்ரைலோக்யமோஹன
சக்ரஸ்வாமினி—
மூவுலகையும் மோஹிக்கவைக்கும்
திறம்.
ப்ரகடயோகினி—
வெளிப்படையாய்க் காணப்படும்
உருவ அமைப்பைத் தரிக்கும்
திறம்.
காமாகர்ஷணி—ஆசைகொள்ளும்
திறம்.
புத்த்யாகர்ஷணி—கூர்ந்தறியும் திறம்.
அஹங்காரா கர்ஷணி—தன்னை
முன்வைத்துச் செயல்படும்திறம்.
சப்தாகர்ஷணி—கேட்டறியும் திறம்.
ஸ்பர்சாகர்ஷணி—உணர்ச்சியால்
அறியும் திறம்.
ரூபாகர்ஷணி—கண்ணால்
கண்டறியும் திறம்.

ரஸாகர்ஷிணி—சுவைத்தறியும் திறம்.
கந்தாகர்ஷிணி—நுகர்ந்தறியும் திறம்.
சித்தாகர்ஷிணி—கவர்ந்திழுக்கும்
திறம்.
தைர்யாகர்ஷிணி—நெஞ்சுரத்திறம்.
ஸ்ம்ருத்யாகர்ஷிணி—அனுமானித்தும்,
நினைவாலும் அறியும் திறம்.
நாமாகர்ஷிணி பெயரால் அறியும்
திறம்
பீஜாகர்ஷிணி—எதிலும் ஆதாரத்தை
யறியும் திறம்
ஆத்மாகர்ஷிணி—ஸத்தியத்தை
அறியும் திறம்.
அம்ருதாகர்ஷிணி—பலனைக்
கொள்ளும் திறம்.
சரீராகர்ஷிணி—விரும்பியதை
ஒட்டுமொத்தமாக அடையும்திறம்
ஸர்வாசாபரிபூரக—
சக்ரஸ்வாமினி—எல்லா ஆசைகளையும்
பூர்த்தியாக்கிக்கொள்ளும் திறம்
குப்தயோகினி—மறைந்துறையும்
திறம்
அனங்ககுஸுமா—வார்த்தையாலும்

சைகையாலும் உணர்த்தும், உணரும் திறம்

அனங்கமேகலா—ஆய்ந்து புரிந்து ஏற்கும் திறம்

அனங்கமதனா— உடலால் இயங்கும் திறம்

அனங்கமதனாதுரா—வேண்டாத வற்றை வெளியேற்றும் திறம்

அனங்கரேகே—இன்பத்தைத் துய்த்து மகிழும் திறம்

அனங்கவேகினி—விலக்கும், எதிர் நடவடிக்கை எடுக்கும், திறம்

அனங்காங்குசா—மதிப்பைப் பெறும் திறம்

அனங்கமாலினி—பற்றறுக்கும் திறம்

ஸர்வஸ்ம்க்ஷோபண

சக்ரஸவாமினி—கிளர்ந்தெழவைக்கும் திறம்

குப்ததரயோகினி—கண்டறிவதற்குக் கடினமாக்கிக் கொள்ளும் திறம்

ஸர்வஸம்க்ஷோபினி—கலகம் செய்யும் திறம்.

ஸர்வவித்ராவிணி—துரத்திச் செல்லும் திறம்.

ஸர்வாகர்ஷிணி— தன்பக்க
மிழுக்கும் திறம்.

ஸர்வாஹ்லாதினி—மகிழ
வைக்கும் திறம்.

ஸர்வஸம்மோஹினி—மயக்கும்திறம்.

ஸர்வஸ்தம்பினி—சிக்க
வைக்கும் திறம்.

ஸர்வஜ்ரும்பிணி—விடுவிக்கும் திறம்.

ஸர்வவசங்கரி—கவர்ந்தி
ழுக்கும் திறம்.

ஸர்வரஞ்ஜினி—விரும்ப
வைக்கும் திறம்.

ஸர்வோன்மாதினி—அளவு கடந்து
மோஹிக்கச் செய்யும் திறம்

ஸர்வார்த்தஸாதினி—எதையும்
அடையும் திறம்.

ஸர்வஸம்பத்திப் பூரணி—எல்லாச்
செல்வங்களையும்
சேகரிக்கும் திறம்.

ஸர்வமந்த்ரமயி—மந்த்ரங்களைக்
கொண்டு பயனடையும் திறம்.

ஸர்வத்வந்த்வக்ஷயங்கரி- ஒருமை
யைக் காண இடையூறாய்
இருக்கும் இருமை உணர்வை
ஒழிக்கும் திறம்.

ஸர்வஸௌபாக்ய
தாயக சக்ரஸ்வாமினி—எல்லா
நன்மைகளையும்குறைவற
அடையும் திறம்.

ஸம்ப்ரதாய யோகினி—இயல்பாகச்
செயல்படும் திறம்.

ஸர்வஸித்திப்ரதா —எல்லாவற்
றையும் ஸாதிக்கும்
திறம்.

ஸர்வஸம்பத்ப்ரதா —எல்லாச்
செல்வங்களுக்கும் அதிபதி
யாகும் திறம்.

ஸர்வப்ரியங்கரி—யாவருக்கும்
இனியவனாகநடக்கும் திறம்.

ஸர்வமங்களகாரிணி—எதையும்
நன்மையாகவே முடிக்
கும் திறம்.

ஸர்வகாமப்ரதா—எல்லா
விருப்பங்களையும் நிறை
வேற்றிக் கொள்ளும் திறம்.

ஸர்வதுகவிமோசினி—எந்த
துக்கத்தையும் நிவர்த்தி
செய்யும் திறம்.
ஸர்வம்ருத்யுப்ரசமனி—எந்தவித
ம்ரண பயத்தையும்
விலக்கும் திறம்
ஸர்வவிக்னநிவாரிணி —எந்த இடை
யூறையும் ஒழிக்கும் திறம்.
ஸர்வாங்கஸுந்தரி—எல்லா அங்கங்
களையும் அழகு கொழிக்க வைத்
துக் கொள்ளும் திறம்.
ஸர்வஸௌபாக்யதாயினி— எல்லா
நன்மைகளையும் ஈட்டிக்கொள்
ளும் திறம்.
ஸர்வார்த்தஸாதக
சக்ரஸ்வாமினி—எல்லாச் செல்வங்
களும் கொழிக்க வாழ்ந்து
கொள்ளும் திறம்.
குலோத்தீர்ணயோகினி— குலத்தை
உயர்த்தும் திறம்.
ஸர்வக்ஞா—விஞ்ஞான அறிவுத் திறம்.
ஸர்வசக்தி—எதையும் சாதிக்கவல்ல
திறம்.
ஸர்வைச்வர்யப்ரதா—எல்லாச் செல்
வங்களையும் பெருக்கிக்
கொள்ளும் திறம்.

ஸர்வக்ஞானமயி— எதையும்பற்றி முழுமையாய்த் தெளியும் திறம்.

ஸர்வவ்யாதிவிநாசினி—எந்த நோயையும் எதிர்த்து முறியடிக்கும் திறம்.

ஸர்வாதாரஸ்வரூபா— எதையும் தனக்கு ஆதரவாக அமைத்துக் கொள்ளும் திறம்.

ஸர்வபாபஹரா-எல்லப் பாபங்களையும் நசிக்கச் செய்யும் திறம்.

ஸர்வானந்தமயி-எதிலும் உள்ள ஆனந்தகனத்தில் ஒன்றிவிடும் திறம்.

ஸர்வரக்ஷாஸ்வரூபிணி - எதிலும் பாதுகாப்பு அம்சத்தை வலுப் படுத்திக்கொள்ளும் திறம்.

ஸர்வேப்ஸிதப்ரதா—விரும்பியதை விரும்பியவாறே அடையும் திறம்.

ஸர்வரக்ஷாகர
சக்ரஸ்வாமினி—எதிலும் பாதுகாப்பாய் வாழ உதவும் அம்சங் களைக்காக்கும் திறம்.

நிகர்ப்பயோகினி— பிறவாநிலையை வசப்படுத்திக் கொள்ளும் திறம்.

வசினி—தன்னடக்கத் திறம்.

காமேச்வரி—ஆசையையடக்கும் திறம்.
மோதினி—த்ருப்தியாயிருக்கும் திறம்.
விமலா– தூய்மையாயிருக்கும் திறம்.
அருணா—விழித்த நிலை, வருமுன் காக்கும் எச்சரிச்கை, முன்கூட்டி அறிதல்—திறம்.
ஜயினி– ஜயிக்கும் வல்லமை பெறும் திறம்.
ஸர்வேச்வரி—எதையும் தனக்கடங்கியதாய் ஆக்கும் திறம்.
கௌளினி—பிறவிப்பயனை அடையும் திறம்.
ஸர்வ ரோகஹர
சக்ரஸ்வாமினி–பிறவிப்பிணி உட்பட எல்லாப் பிணிகளையும் போக்கிக் கொள்ளும் திறம்.
ரஹஸ்யயோகினி—தன்னை மறைத்துப்பழகும் திறம்.

பாணினி— மன்மதனின் அம்புகளுக்கிலக்காகி உழலும் தரமும், பின் உபாஸனா பலத்தால் அம்பாளின் மலரம்புகளை வணங்கி வாசனைகளை (அனுபவத்தின் நினைவுச் சுவடுகளை) அழிக்கும் திறமும்.

சாபினி—கரும்புத்தன்மையதான மனம் இழுத்தபடியெல்லாம் சென்று ஓய்ந்து, அம்பாளின் கரும்பு வில்லை வணங்கி வைராக்ய அம்பை நாணேற்றி மனத்தை நாசம் செய்துவிடும் திறம்.

பாசினி—பாசவலையில் சிக்கி சீர் குலைந்தது போதுமெனும் தெளிவுடன் அம்பாளின் பாச சக்தியை வணங்கி பாபபுண்ய இருப்பை தவத்தீயால் எரித்துப்பிறவித் தொடரை முடிக்கும் திறம்.

அங்குசினி—குரோதாதி ஷட்குணங்களுக்காதாரமான ஆணவ,மாயிக, கார்மிக மலங்களை நாசஞ் செய்ய அம்பாளின் அங்குச சக்தியை வணங்கி ஞானத்தால் மும்மல நாசத்தை நிகழ்த்தி முமுக்ஷு வாகும் தரத்தை அடையும் திறம்.

மஹாகாமேச்வரி— மஹாகாமமான மோக்ஷத்தை விரும்பி த்யானம் செய்யும் திறம்.

மஹாவஜ்ரேச்வரி— மஹாவலுவுள்ள ஸம்ஸார ஸாகரத்துடன் தொடர்பு அற ஸமாதியோகம் பயிலும் திறம் (ஸ்வரூபானு - ஸந்தானத் திறம்.)

மஹாபகமாலினி— வெல்லமுடியாத வல்லமையுள்ள மஹாமாயையைச் சரணடைந்து விடுதலை பெறும் திறம்.

மஹாஸ்ரீஸுந்தரி—விடுதலை பெற்ற நிலையான ஸாக்ஷாத்காரத்தை அசைபோடும் திறம்.

ஸர்வஸித்திப்ரத
சக்ரஸ்வாமினி—எல்லாவித ஸித்திகளும மோக்ஷஸாதனமே எனத் தெளியும் திறம்.

அதிரஹஸ்யயோகினி— தனக்கென உள்ள தனித்தன்மையை அழித்து விடும் திறம்.

ஸ்ரீஸ்ரீமஹாபட்டாரிகா—எல்லாவற்றிற்கும் மேல்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்து இளைப்பாறும் திறம்,

ஸர்வானந்தமய
சக்ரஸ்வாமினி—நிர்விகற்ப ஸமாதித் திறம்.

பராபரஹஸ்யயோகினி — ப்ரம்ரஹஸா க்ஷாத்காரத்தை அடையும் திறம்.

த்ரிபுரே—முப்புரத்திலும் உலவும் சக்தி

த்ரிபுரேசி—முப்புரத்திற்கும் தலைவி.

த்ரிபுரஸுந்தரி— முப்புரத்திற்கும் அழகு சேர்ப்பவள்.

த்ரிபுரவாஸினி—முப்புரத்திலும் வசிப் பவள்.

த்ரிபுராஸ்ரீ—முப்புரத்தின் செல்வம்.

த்ரிபுரமாலினி— முப்புரத்தையும் மாலையாயணிந்தவள்.

த்ரிபுராஸித்தே—முப்புரத்திலும் ஸித்தி உருவில் நிலைத்தவள்.

த்ரிபுராம்ப—முப்புரத்திற்கும் அன்னை

மஹாத்ரிபுரஸுந்தரி—முப்புரத்திற்கும் அதீதமானவள்.

மஹாமஹேச்வரி—மஹத்தினும் மஹத் தானவள்.

மஹாமஹாராக்ஞி— மஹத்துக்கெல் லாம் பேரரசி.

மஹாமஹாசக்தி-மஹத்திலும் மஹத்தானசக்தி.

மஹாமஹாகுப்தா-மஹத்தான இரகசியத்தினும் இரகசியமானவள்.

மஹாமஹாகுப்தா—மஹத்தான அறிவினுக்கும அரிய பேறறிவு.

மஹாமஹானந்தா— மஹத்தினும் மஹத்தான ஆனந்தகனமானவள்

மஹாமஹாஸ்பந்தா— மஹத்தினுக்கும் மஹத்தாய் விரிவாக்கிக் கொள்பவள்.

மஹாமஹாசயா— மஹத்தினுக்கும் மஹத்தாய் நிலைத்தவள்.

மஹாமஹா ஸ்ரீசக்ர
நகர ஸம்ராக்ஞி—மஹத்தினும் மஹத்தான ஸ்ரீசக்ரநகர ஸாம்ராஜ்யத்தின் தலைவி.

நமஸ்தே—உனக்கு நமஸ்காரம்,

நமஸ்தே—மீண்டும் நமஸ்காரம்,

நமஸ்தே— மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

(நமஸ்தே த்ரி)—மும்முறை உனக்கே நமஸ்காரம்),

ஸ்வாஹா—என்னை முழுமையாய் அர்ப்பணிக்கிறேன்; ஏற்றருள் வாய்.

ஓம் தத் ஸத்

யாவும் நீயே; நீயும் நானே; நானும் நீயே.

**சுபம்**

(ஜீவாத்மா தன்முயற்சியால் முடிவில் பரமாத்வாவில் ஐக்யமாவதற்கு சக்திகணங்கள் எவ்வாறு கைகொடுக்கின்றன என்பதனை உணர ஆங்காங்கு ஸூசகங்கள் நடமிடுவதை என்னால் காணமுடிகிறது. உங்களுக்கும் இது ஸாத்யமாகவேண்டும், ஆத்ம ஞானம் கிடைக்க வேண்டும் என தேவியை பிரார்த்தித்துக் கொள் கிறேன்,)

தேவியைஆராதிப்போர் பூவுலகில் எல்லா போக போக்கியங்களையும் முழுமையாய் அனுபவித்துவிட்டு, இறுதியாய், இனிப்பிறவா மோக்ஷஸம் பத்தையும் அடைவர் எனப்பரமசிவனே உறுதியளித்துள்ளார். இந்த உறுதிக் குச் சான்று உள்ளதை சக்திகளின்

இயக்க விபரம் நமக்குத் தெளிவாய்க் கோடிட்டுக் காட்டுகிறது. இதுவரை எத்தனை விதமான சக்திகளின் (திறங் களின்) இயக்கங்களால் நாம் வாழ்க்கை எனும் நிகழ்ச்சியினை நமது பிறவியின் திட்டப்படி நடத்த வல்லவர்களாக உலவ முடிகிறது எனும் உண்மைகளை ஓரளவு தெளி வாகப் புரிந்து கொண்டோம்.

ஆனால் இங்கு ஒரு இயல்பான ஐயப்பாடு எழுகிறது. அது நியாய மானதே. நாம் கண்ட சக்தித் தத்து வங்கள் எல்லோருள்ளும் இருந்தாலும், எப்படி ஒரு சிலரால் மட்டும் சிறப் பாகச் செயல்பட முடிகிறது? மற்றவர் களிடம் அச்சக்திகள் இருந்தும் அந்த ஒரு சிலரைப்போல் சிறப்பாகச் செயல் படாமல் மந்தமாக மட்டுமே செயல்பட இயலுகிறது எனும் ஐயம்தான் அது. இதற்கு விடை தேடும் முயற்சியினை இப்போது மேற்கொள்ளுவோம்.

சக்திகள் என்னவோ முழுத்தரத் தில் அவரவருள் 'இருக்கை' (ப்ரதிஷ்டை) பெற்றிருந்தபோதும்,

அவைகள் தடையின்றி ஒளிவீசி நம் செயல்பாட்டில் சங்கமமாகி இயங்கி முழுமையாய்க் கைகொடுக்க இயலாத வாறு, நமது பிறவிக்குள்ள தோஷங் கள், சாபங்கள், பிராரப்தத்தின் காரணமாய் அனுபவித்துத் தீர்க்க வேண்டிய பாபபலன்கள் ஆகியவை சேர்ந்து ஒரு களிம்புபோல் அந்த அந்தச் சக்தியைச் சூழ்ந்து கொண்டி ருக்கின்றன. அந்த களிம்புத் தன் மையை அறவே நீக்கிவிட்டால், சக்தி களின் முழுத்திறமும் தடையின்றி நமக்குக் கைகொடுக்க முடியும்; நாம் சிறப்பாகச் செயல்பட இயலும். ஆனால் களிம்புத்தன்மையை அகற்று வது எப்படி? அதைத்தான் புரிந்து கொள்ளப்போகிறோம்.

நமது அமைப்பை ஒட்டுமொத்த மாக 'மனிதப்பிறவி' எனக்குறிப்பிடப் பட்டாலும் அது மூன்று சரீரங்களைத் தாங்கியுள்ளது. அம்மூன்று சரீரங் களுக்குமாய் ஐந்து கோசங்கள் (அங்கி கள்) உள்ளன. அவைகளை முதலில் நன்கு தெரிந்து கொள்வோம்.

முதலாவது— ஸ்தூல சரீரம் (பூதவுடல்).

இரண்டாவது— ஸூக்ஷ்ம சரீரம், (இயக்கத்திறன், அறிவுத்திறன் பொதிந்த மின்சரீரம்). இந்தச் சரீரத்தின் இயக்குதலினால்தான் பூதவுடல் இயங்கும்.

மூன்றாவது— காரண சரீரம் (இந்தப்பிறவி இன்னின்ன வாறெல்லாம் இயங்கி இவ்வாறாக முடிவுற வேண்டியது எனும் திட்டத்தின் வரையரைக்குட்படுத்தப்பட்ட இயக்க நுணுக்கங்களைத் தாங்கியுள்ள விசைகள் அடங்கிய மூலசரீரம்), இந்தச் சரீரத்தின் இயக்கத்தின் ஆதிக்கத்தில் தான் முன்சொன்ன ஸூக்ஷ்மசரீரம் இயங்கும்.

ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களில் ஜீவாத்மாவின் ஆதிக்கமும், காரண சரீரத்தில் ஜீவாத்மாவின் ஆதிக்கம் ஒரு பகுதியும் பரமாத்மாவின் ஸாக்ஷி தத்துவத்தின் ஆதிக்கம் மறுபகுதியுமாக அமைந்துள்ளன.

இனி இம்மூன்று சரீரங்களின் குறிப்புக்களைத் தொடர்ந்து, முன்னே சொல்லப்பட்ட ஐந்து கோசங்களின் அமைப்பையும் அறிந்து கொள்வோம்.

முதலாவது-அன்னமய கோசம். பூதவுடலுக்கு அங்கி. உயிர்வாழப் பஞ்ச பூதத் தன்மைகளை உணவி லிருந்தும், பானத்திலிருந்தும்,பெற்று ஸ்தூல உடலைப் போஷிக்கும்.

இரண்டாவது-ப்ராணமய கோசம். ஸ்தூலசரீரத்திற்கும் ஸூக்ஷ்ம சரீரத்திற்கும் அங்கி. காற்றின் மூலம் ப்ராணவாயுவைப் பெற்று இவ் வுடலைக் காத்துப் போஷிக்கும்.

மூன்றாவது-மனோமய கோசம். முழுமையாய் ஸூக்ஷ்ம சரீரத்தின் அங்கியாய் இயங்கும். இதன்கண் மனம், புத்தியின் கீழ்ப்பகுதி, அஹங் காரத்தின் கீழ்ப்பகுதி ஆகியவை பொதிந்துள்ளன. இம்மூன்றின் கூட் டுறவுடன் ஸூக்ஷ்ம சரீரத்தில் நடை பெறும் செயல்கள், முன்வினைக்கான அனுபவங்களை 'ப்ராரப்தத்தின் திட்

டத்திலுள்ளபடி' அனுபவித்து முடிப்ப துடன், புதிதாக பாப, புண்யப் பலன் களை இப்பிறவியிலே விளைக்கும் நிகழ்ச்சிகளையும் உருவாக்கும்.

நான்காவது— விஞ்ஞானமய கோசம். ஸூக்ஷ்ம சரீரத்திற்கும், காரண சரீரத்திற்கும் அங்கியாக இயங்கும். இதன்கண் புத்தியின் மேல் பகுதி, அஹங்காரத்தின் மேல்பகுதி, சித்தத்தின் கீழ்ப்பகுதி ஆகியவை பொதிந்துள்ளன. இம்மூன்றின் கூட்டுத்திறம் ஸூக்ஷ்ம சரீரத்திலும் காரண சரீரத்திலும் இடம்பெற்று ஜீவனின் ஸாதனா (ஸாதனை என்றால் பிறவித்தொடரை நிறுத்திப் பிறவா நிலையை வசப்படுத்திக் கொள்ள நடத்தப் பெறும்தவம்) திறத் திற்கேற்ப இயங்கி, முன்வினைக் கணக்குகள் சரிவர முடிந்து போகவும், புதிய இருவினைக் கணக்குகள் உரு வாகி வளர்ந்து விடாமலும் பாதுகாத் துக்கொள்ளத் துணைநிற்கும்.

ஐந்தாவது—ஆனந்தமய கோசம். காரணசரீரத்திற்கும், ஸூக்ஷ்ம சரீரத்

திற்கும், ஸ்தூல சரீரத்திற்கும் பொது வான அங்கி. இது எல்லா அனுபவங் களின் ரஸத்தையும் (அனுபவத் திளைப்பு) ஏற்கும் களமாக இயங்கும். இதன்கண் சித்தத்தின் மேல்பகுதி பொதிந்திருந்தாலும், புத்தி, அஹங் காரம் ஆகியவற்றின் மேல்பகுதிகளும் அவ்வப்போது இங்கு வந்து ஸங்கம மாகி, அப்போதைக்கு அனுபவமாகும் ரஸம் மற்ற ஸூக்ஷ்ம, ஸ்தூல சரீரங் களுக்குப் பரவவும், அதனால் புதிய புதிய ஆசைகள், கற்பனைகள் மலர்ந்து, பிறவிகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் தோன்றவும் துணை நிற்கும்.

ஸ்தூல, ஸூக்ஷ்ம சரிரங்களுக்குப் பரவாத ரஸப்பகுதி காரண சரீரத்தில் ஸாக்ஷியாயிருக்கும் சைதன்யப் பகுதி யிடம் சேர்ந்துவிடும். ஸாதகன் தன் வாழ்க்கையில் நேரும் எல்லா அனுப வங்களின் ரஸத்தையும் தன் ஸாத னாத் திறத்தால் 'நான் போக்தா' (நான் அனுபவிப்பவன்) எனும் எண் ணம் துளிக்கூடஇல்லாமல், இந்த ரஸம் முழுவதும் இறைவனுக்கே

உரியது; அதை அவனிடமே சேர்ப்பிப்பேன் எனும் முழுமையான அர்ப்பணத் திண்மையுடன் நடந்துகொண்டால், அவனது பழைய இருவினைக்கணக்குகள் வலுவிழக்க ஆரம்பிக்கும். தொடர்ந்து பிறவிகளைத் தரும் புதிய இருவினைக் கணக்கும் வளர இடமிராது.

களிம்புத்தன்மைக்கு ஆதாரமானவைகளில் பாபபலன் சம்பந்தப்பட்ட சில நுணுக்கங்களை ஆராய்ந்தோம். இனி, தோஷம், சாபம் இவை பற்றிப் பேசுவோம்.

சாபம் என்பது பிறருக்குத் தீங்கு செய்தோ அல்லது துரோகம் செய்தோ நேரும் ஒன்று.

சாபம் காரணமாகச் சேரும் களிம்பு, நமது எல்லாச் செயல்பாடுகளிலும் குறுக்கிடும் தடங்கல்களைத் தோற்றுவிக்கும் ஆதாரச் சரக்காக அமையும். இந்தக் களிம்பை அகற்ற, நமது தீவிரமான ஸாதனையில் அதற்கெனச் செய்யும் தவத்தின் விளைவால்

மஹான்களின் தரிசனமோ,உபாஸனா ச்ரேஷ்டர்களின் கூட்டுறவோ நேரும். அவர்கள் மூலம் ஏதோ ஒரு விதத்தில் நம் சாபத்திற்கான ப்ராயஸ்சித்தம் ஸாத்யமாகும். சாபத்தால் சேர்ந்த களிம்பு அழியும்.

தோஷம் என்பது - செய்யவேண்டிய நியாயமான கடமைகளை உதறுவதால், கடமைகளில் தவறு நேர்வதால் உருவாகும் ஒன்று. நமக்கு தெய்வத்திடம் என்ன கடமை, ரிஷிகளிடம் (வாழ்வுக்கு வழிகாட்டிகள்) என்ன கடமை, நீத்தாரிடம் (நம் மூதாதையர்) என்ன கடமை, நம்மைச் சுற்றியுள்ள உலகுக்கு அதனிடமிருந்து நாம் பெறும் வாழ்வுக்குப் பிரதியாக என்ன கடமை என்றெல்லாம் உள்ளது உள்ளபடி உணரும் வகையில் மறைகளும், மறைகளின் கிளை நூல்களும் வரையறுத்துள்ளன. அதனை நாம் தக்க சான்றோரிடமிருந்து கேட்டறிந்து சரிவர நிறைவேற்றாமல் விட்டுவிட்டால் அக்கடன்கள் தோஷமாக உருவெடுத்து நம்மைத்

தொடர ஆரம்பிக்கும், நம் வாழ்வை யும் நம் சந்ததிகளின் வாழ்வையும் பாதிக்கும். இவற்றைச் சரிவரப்புரிந்து கொண்டு அதற்குரிய பரிஹாரத்தால் சரிசெய்து கொள்ள நமது ஜாதகத்தை நன்கு பரிசீலித்தால் விபரங்கள் புலனாகும். அதன்படி முயற்சியை மேற்கொண்டால் தோஷங்கள் மூலம் சேர்ந்த களிம்பு அழியும்.

இப்படியெல்லாம் விடாப்பிடி யாய்ப் பெரும் முயற்சிகளால் களிம்பை எவ்வளவுதான் அழித் தாலும், நாம் அதையொட்டி மேற் கொள்ளும் முயற்சிகளில் நேரும் தவறு களும், இப்போதைய வாழ்வை வாழ் வதில் அறிந்தும் அறியாமலும் நேர்ந்துவிடும் தவறுகளும் ஒரு புதுக் களிம்பாகி, அழிந்துபோன பழைய களிம்பு இருந்த இடத்தை ஆக்கிரமித் துக் கொள்ளும். நமது ஸாதனாத் திறத்தின் தரத்திற்கேற்ப இப்புதிய களிம்பு அழியலாம், மறையலாம், தேயலாம் அல்லது இம்மியளவும் குறையாமல் அடுத்த பிறவிக்கு இருப்புக்கணக்கிலும் போய்ச்சேரலாம்.

இப்படியெல்லாம் விபத்துக்கள் நேராமல் தடுத்து நம்மைக் காத்துக் கொள்ளும் திறம், நம் முன்னோர் களால் தீர்க்க தரிசனத்துடன் வரை யறுக்கப்பட்டு, "நாம் இவ்வாறெல் லாம்தான் வாழவேண்டும், இன்னின்ன வாறெல்லாம் வாழக்கூடாது" எனும் அறிவுரைகளைத் தாங்கிய வழிகாட்டி யாக "பரம்பராதர்மம்" எனும் பெய ரால் தரப்பட்டுள்ளது. அதை நாம் சரிவரப் புரிந்துகொண்டு, செம்மை யாய்க் கையாண்டால் எதுவுமே தடை யிலகப்படாமல், விபத்துக்கிலக்கா காமல் நிறைவேறும்.

இவையெல்லாவற்றிற்கும் இன்றி யமையா அடிப்படையாக நம்மிடம் ஒன்று பரிபூரணமாய் இருந்தாக வேண்டும் — அதுதான் — ஸத்தியத் திலே மட்டும் நாட்டம் — எனும்சீரிய தன்மை. இது அடிப்படையாயமையா விட்டால் நமது எந்தத்தவமும், ஸாதனையும், முயற்சியும் ஒரு தினை யளவுகூடப் பயன்தராது. மாறாகத் தாறுமாறான பலன்கள் கிடைத்து நாம் அதைத் தவறாக இதுவும் ஒரு

ஸித்தி தானோ என எண்ணி மயங்கி, மேலும் ஸத்தியத்திலே நாட்டம் குறைந்து பெரும் நஷ்டங்களுக்காளா வோம்.

எனவே இறைவழிபாட்டை மேற் கொள்ள விரும்புவோர் முதலில்'ஸத்தி யத்திலே' முழு நாட்டமுடையவராக, அஸத்தியத்தைச் சந்திக்கநேரும்போது அருவெறுப்புக் கொள்பவராக ஆக வேண்டும். அப்புறம்தான் இறைவனை அணுக அருகதை உண்டாகும்.

சாபங்களையும், தோஷங்களை யும் விலக்கிக்கொள்ள நம் முன்னோர் கள் நிச்சயத்தன்மையுடன் கடைப் பிடித்த செம்மையான வழிகளைக் காட்டிலும் இன்னுமோர் அரியவழி இருக்கிறது. அதையும் சேர்த்துக் கையாண்டால் இந்த சாபங்கள் தோஷங்கள் யாவும் இருந்த சுவடு தெரியாமல் பறந்தோடிவிடும். அதை யும் கோடிட்டுக் காட்டிவிடுகிறேன்.

யாரும், தனக்கிருக்கும் சாபத்தை யும் தோஷத்தையும், தமது ச்ரத்தா பூர்வமான ஸத்வகுணக் கடைப்பிடிப்

பால், நிச்சயம் உணரமுடியும். இந்த சாபங்களும் தோஷங்களும் நம்வாழ்வில் உலவுவதை நாமே நம் அனுபவத்தில் நடைபெறும் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்துக் கணிக்கமுடியும்.

நல்ல காரியங்களில் தடங்கல் குறுக்கிடும். நல்ல காரியத்திற்காகப் புறப்படும்போது தடுக்கும். நல்ல நேரத்தைக் கணித்து எதை தொடங்க முயற்சி செய்தாலும் தட்டிப் போகும். இம்மாதிரியெல்லாம் தொடர்ச்சியாய் நிகழ்வதைக்கண்டு மிரண்டுவிடாமல் அமைதியாய் அவைகளைக் கூர்ந்து கவனித்து நம் வாழ்வில் சாபங்களும் தோஷங்களும் நடமிடுவதை அனுமானித்து அடையாளம் காணவேண்டும். இவைகள் நடமிடுவது உறுதியாய்த் தெரிந்த பின் அக்கணம் முதல், நாம் செய்த தவறுகள் என்ன என்று புரிந்து கொள்ளாமலேயே — நம்மால் என்னென்ன துன்பங்கள் யார் யாருக்கு நேர்ந்திருக்குமோ? அக்காலையில் அவர்கள் மனம் என்ன பாடுபட்டிருக்குமோ? அவர்கள் எவ்வாறெல்லாம்

கொந்து சபித்திருப்பார்களோ என்றெல்லாம் வருந்தி வருந்தி எவ்வாறேனும் இதற்குப் பிராயஸ்சித்தம் காண்பேன் எனப் பஸ்சாத்தாபத்துடன் உறுதியேற்கவேண்டும். இந்தப் பஸ்சாத்தாப உணர்வே மிகப் பெரிய ப்ராயஸ்சித்தம். இப்படி உறுதி பூண்டவுடன், நெகிழ்ச்சியுடன், இவைகளை நிவர்த்தி செய்து விடுமாறு நமது இஷ்டதெய்வத்திடம் 'சரணாகதி' யாகி விடவேண்டும்.

இவ்விதச் சரணாகதி இருக்கிறதே இது ஒரு மாபெரும் யாகத்தைவிட வலியுடையது. இப்படிச் சரணாகதி செய்த மாத்திரத்திலே அத்தோஷங்களும் சாபங்களும் வலுவிழக்க ஆரம்பித்து, யதேச்சையாய் யாரோ வந்து உரிய பரிஹாரத்தைச் சொல்லி நடத்திக்கொடுத்து விட்டும் போவார். அன்றுமுதல் ப்ரகாசமான வாழ்வு தொடங்கும். இதை நிதர்சனமாய்க் காணலாம்.

இதெல்லாம் என்ன பிதற்றல் எனப் பொறுப்பற்றுப் பேசி விலகிச் செல்

வோருக்காக இவைகள் எழுதப்பட வில்லை. ஏனென்றால், அப்படிப் பேசு வோர் நிச்சயம் ஆழமான தோஷங் களுக்கும் கடுமையான சாபங் களுக்கும் உடமையாளர்களாக இருப் பார்கள். இந்த ஜன்மத்தில் அவைகளி டமிருந்து விடுபட ப்ராப்தம் இல்லாத வர்கள், இவர்கள். இத்தனை விபரங் களும் யாருக்கென்றால், எப்படி யாவது கடைத்தேற நல்லவழி ஏதேனும் இராதா என ஏங்கித் தவிப் போருக்குத் தான். அவர்களுக்குத்தான் இதைப் புரிந்து கொண்டு முன்னேற ஆசை உண்டாகும். ஈச்வரானுக்ரஹம் கைகூடும்.

சாபதோஷாதிகளை விலக்கிக் கொள்ள ஸமயஸஞ்ஜீவியாய் இன்னுமோர் அரிய வழியுமுள்ளது. அதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

தம்மை தோஷம் சாபம் இவை சூழ்ந் துள்ளது என நிச்சயமாய் உணர் வோர் அவசியம் இதைக் கடைபிடித் துப் பயனடையலாம்.

பஸ்சாத்தாபம் இழையோடும் எண்ணப்பாங்கோடு - வெயில் காலத்தில் ஒரு ஜதை காலணி, மழைக் காலத்தில் ஒரு குடை, குளிர்காலத்தில் ஒரு போர்வை, கந்தலுடன் இருப்போர்க்கு ஆடை, பசியுடன் காணப்படுவோர்க்கு உணவு, பஸ்ஸிலோ, ரெயிலிலோ பணத்தைத் தொலைத்து விட்டு ஊர் திரும்ப வழியறியாது திகைத்து நிற்பவர்க்கு ஊர் போய்ச் சேர முழு உதவி என, நாம் முன்பின் அறியாத நபர்க்கு அவர்கள் எதிர்பார்ப்பின்றி, நன்றியுணர்வால் திக்குமுக்காடிப் போகும் வண்ணம் வலியச் சென்று மேற்சொன்ன உதவிகளில் அவருக்குத் தேவையானதைத் தந்து உதவுவது, நமது சாப தோஷங்களை மட்டுமல்லாது நமது சந்ததியினர்க்கு உள்ள சாப தோஷங்களையும் களைந்தெறிய வெகுவாகக் கைகொடுக்கும். ஆனால் மமதை, பெருமிதம் கலந்து களங்கப் பட்டுப் போனால் தோஷம், சாபம் இவை விலகாது. உஷார்!

ஒரு விஷயத்தை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் -மனிதனாகப்

பிறந்துள்ள எவரும் ஏதோ ஒரு சாபமோ தோஷமோ இல்லாமலிருக்க வாய்ப்பே இல்லை. ஏதோ ஒன்றின் பாதிப்பு யாருக்கும் இருந்தே தீரும், விலக்கி முடிக்கும் வரை. மட்டுமல்ல, புதியவை சேராமல் தடுக்கும் ஆற்றலையும் பெற்றாக வேண்டும்.

இனி, இதுவரை பேசப்பட்ட ஐந்து கோசங்கள் சார்ந்த மூன்று சரீரங்களும் ஸ்ரீசக்ர அமைப்பில் எவ்வாறு ஸங்கமித்துள்ளன என்தபனை அறிவோம்.

ஸ்ரீசக்ரத்தில் உள்ள :-

1) த்ரைலோக்யமோஹன சக்ரமும் (முதல் ஆவரணம்), ஸர்வாசாபரிபூரக சக்ரமும் (இரண்டாவது), ஸர்வ ஸம்க்ஷோபண சக்ரமும் (மூன்றாவது ஆவரணம்) சேர்ந்து ஸ்தூல சரீரம்.

2) ஸர்வஸௌபாக்யதாயக சக்ரமும் (நான்காவது ஆவரணம்), ஸர்வார்த்த ஸாதக சக்ரமும் (ஐந்தாவது ஆவரணம்), ஸர்வரக்ஷாகர சக்ரமும்

(ஆறாவது ஆவரணம்), ஸர்வரோக ஹரசக்ரமும் (ஏழாவது ஆவரணம்) சேர்ந்து ஸூக்ஷ்ம சரீரம்.

3) ஸர்வஸித்திப்ரத சக்ரமும் (எட்டாவது ஆவரணம்), ஸர்வானந்தமய சக்ரமும் (ஒன்பதாவது ஆவரணம்) சேர்ந்து காரண சரீரம்.
இதே போல் ஐந்து கோசங்களும் :-

முதலாவது ஆவரணம்
— அன்னமய கோசம்,
இரண்டாவது, மூன்றாவது ஆவரணம்
— ப்ராணமய கோசம்.
நான்காவது, ஐந்தாவது ஆவரணம்
— மனோமய கோசம்.
ஆறாவது, ஏழாவது ஆவரணம்
— விஞ்ஞானமய கோசம்.
எட்டாவது, ஒன்பதாவது ஆவரணம்
— ஆனந்தமய கோசம்.

இப்பாகத்தில் இதுவரை பேசப்பட்ட எல்லா விபரங்களையும் சுட்டிக் காட்டல்களையும், நுணுக்கங்களையும் அவரவர் மனோதர்மத்

திண்மைக்கேற்ற அளவில் ஆராய்ந்து புரிந்துகொண்டு சான்றோரை அண்டி மேலும் விளக்கங்களைக் கேட்டறிந்து கொண்டு, நன்கு பயின்று, ஒவ்வொரு வரும் ஒரு வல்லவனாக, நல்லவனாக, சான்றோனாக, உயர்ந்து ஒளி வீசிக் கொண்டு நமது தர்மத்திற்கும், தேசத்திற்கும் இன்றியமையாதவனாக வளைய வரவேண்டுமென்பதே என் அவா.

எனது நியாயமான இந்த அவாவினை இறைவி நிச்சயமாய் நனவாக்கித் தருவாள் என்பதில் எனக்கு முழுமையான நம்பிக்கையுண்டு.

இதுவரை சொல்லி வந்தவைகளைத் திரும்பத்திரும்பப் படித்து அசை போட்டு ஜீரணித்துக்கொள்ளுங்கள்.

தொடர்ந்து, இன்னும் அநேகம் பிரமிக்கவைக்கும், பரவசமூட்டும் கோணங்களில் அதி உன்னதமாய்ப் பிரகாசிக்கும் 'ஸ்ரீ மாத்ருகாவளி'' என்னும் ஒரு புதிய நூலை ஸமர்ப்பிக்க முயற்சிகளை மேற்கொண்

டுள்ளேன். சீக்கிரமே அவ்வரிய நூல் உங்களை வந்தடைய ஆவன செய்வேன்.

இம்மாத்ருகாவளி, மாத்ருகாக்ஷரங்களால் உருவாக்கப் பெற்று, லலிதா ஸஹஸ்ரநாமம், லலிதா த்ரிசதி ஆகிய அதிச்ரேஷ்டக்ரந்தங்களின் முழு தாத்பர்யங்களையும் தம்முள் ஐக்கியமாக்கிக் கொண்ட நூற்றியெட்டு விசேஷ நாமாக்களாலான ஓர்அரிய தோத்திரத் தொகுப்பு.

இதைத் தொடர்ந்து கட்கமாலாவின் வெகு விரிவான உரைகளடங்கிய இன்னொரு தங்கிகரற்ற படைப்பையும் உருவாக்கிக் வருகிறேன். அதுவும் விரைவிலேயே உங்களையடைய ஆவன செய்வேன்.

இக்நூலின் வாயிலாய் நீங்கள் அடையப்போகும் பலன்களுக்கு உரிய பெருமை, என்னை ஸ்ரீவித்யைக்கு அதிகாரியாக்கிய கும்பகோணம், பரம ஹம்ஸ பரிவ்ராஜக பகவான் ஸ்ரீ அண்ணாஸ்வாமிகள் அவர்களையும்,

எனக்கு ஆசிகளை வாரி வழங்கி ஊக்கமும் உற்சாகமும் ஊற்றெடுக்க அனுக்ரஹித்த, புதுகோட்டைஸ்ரீபுவனேச்வரி அதிஷ்டானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாந்தானந்த ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அவர்களையுமே சேரும். அன்னார் இருவரின் பொன்னடிகளுக்கு எளியேனின் சாஷ்டாங்க நமஸ்காரங்களுடன்,

லோக க்ஷேமத்தையே நாடும்
உங்கள்

த்ரிசக்தி பாததூளி

*1-1-1992* T. V. கல்யாண்,

"தேவிகட்கமாலா மண்டலி"

குரோம்பேட்டை, சென்னை.

அனுபந்தம்

# நாடித்துடிப்பு

உயிரோட்டத்தின் உயர்வைக் கண்டோம்.

இப்போது நாடித் துடிப்பைத் துருவிப் பார்ப்போம்.

உலகத்தின் இன்றைய போக்கு சரிதானா? இதை இப்படியே விட்டு விட்டால் என்னவாகும்? எல்லாம் தானே சரியாகிவிடும் என எண்ணி ஏமாந்து விடுவதா?

தெய்வம் விட்ட வழி என தோல்வி மனப்பான்மைக்கு ஆதிக்கம் கிடைக்க இடம் கொடுக்கலாமா?

தீயவர்கள் கொடிகட்டி பறக்கிறார்கள். நல்லவர்கள் நேர்மையிலே நிலைக்க முடியாமல் திக்குமுக்காடுகிறார்கள். விலைவாசி ஏற்றமும், பாதுகாப்பான சூழலின்மையும் நம்பிக்கையை முற்று

கையிட்டுஆட்டங்காணச் செய்கிறதே! காலங் கடந்து விடாமல் ஏதாவது செய்தாக வேண்டாமா?

சற்றுச் சிந்திப்போம்.

வாழத்தான் பிறந்திருக்கிறோம். ஆனால், இன்று, வாழ்கிறோமா? வாழ முடிகிறதா? இதுதான் வாழ்க்கையா? பின் எது வாழ்க்கை?

உழைப்புக்கு வாய்ப்பு! நேர்மையான உழைப்பு! உழைப்பிற்கேற்ற ஊதியம்! ஊதியத்திற்கடங்கிய வாழ்க்கையமைப்பு! அந்த அமைப்பால்வாழ்வின் ஆரோக்கியம்! ஆரோக்கியத்தால் செம்மை, மனநிறைவு, மகிழ்ச்சி, அமைதி! அமைதியால் அன்பின் பரவலாக்கம். அன்பினால், எங்கு பார்த்தாலும் இன்பம். யாரைக் கண்டாலும் நேசம். எதைக் கண்டாலும் திருப்தி! இப்படி இருப்பதல்லவோ உண்மையான வாழ்க்கை.

இந்த வாழ்க்கையயடைய இன்றையச் சூழல் கொஞ்சமாவது துணை வருமா? வராது! மாறாக,

பேராசைகளை விதைக்கிறது, வளர்க்கிறது. பற்றாக்குறையைப் பரவவிடுகிறது. ஒன்றை மாற்றி ஒன்றாக எதை எதையோ தேடி அலைய வைக்கிறது. இப்படி ஒரு நச்சுச் சூழல் விரிவடைய ஏன் இடங்கொடுத்தோம்;

தர்மத்தை கைவிட்டோம் தெய்வத்தை மறந்தோம். முற்போக்கெண்ணம் எனச் சொல்லிக் கொண்டு பண்பால் பின்னோக்கி காட்டுமிராண்டிகாலத்திற்குப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

வாருங்கள்! எல்லாவற்றையும் உதறிவிட்டு வாய்மையில் நிலைப்போம். தெய்வத்தை நினைப்போம்—பண்டமாற்றுப் பாங்கில்அல்ல—சரணாகதிப் பாங்கில். தேவி பாததூளிப் பாசறையினை அமைப்போம்.

வெற்றி வாய்மைக்கு!

வணக்கம் தாய்மைக்கு!

## பாததூளிப் பாசறை
## அறைகூவல்

மனிதனை நோக்கிவிடுக்கும் இவ்வறை கூவல், தெய்வம் நமக்குநல்கவிருக்கும் ஒரு வரமாகவும் வடிவெடுக்கட்டும்!

இன்றைய ஆரோக்கியமற்ற வாழ்வு முறை அடியோடு மாற்றி அமைக்கப் பட்டு ஒரு செம்மையான தொகுப்பைக் கொண்ட வழிமுறை அமலாக்கப்பட வேண்டும்.

பொய்க் கணக்கெழுத ஒரு படிப்பு, பொய் வழக்காட ஒரு படிப்பு. பொய் புனைய ஒரு படிப்பு, பொய்மைக்கு அலங்காரம் செய்ய ஒரு படிப்பு என்ற நிலைகள் அடியோடு மாற்றப்பட வேண்டும்.

பொய்மையொழிந்த, மெய் மட்டுமே சுடர்விட்டு ஒளிரும் கல்வி, வாழ்க்கை முறை, வழக்கில் வந்து, பரந்து, நிறைந்து, நிலைத்து, மனிதனது பாரம்பர்யப் பெருமைகள் நிரந்தரப் படுத்தப்பட வேண்டும்.

அதற்கு ஒவ்வோர் தனிமனிதனும் தன்னாணை எடுத்துக் கொள்ள வேண்டும்.

எவ்வளவு பெரிய லாபமோ, இன்பமோ கிடைப்பதாயிருந்தாலும் பொய்மைக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது.

பொய்மையைக் கண்ட விடத்தெல்லாம் எதிர்த்து வீழ்த்துவதுதான் நம் முழுநேர நோன்பாக வேண்டும்.

உண்மை எங்கெல்லாம் எப்போதெல்லாம் பலவீனப்படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் வலியச் சென்று தோள் கொடுத்து நிமிர்த்தி வைத்து அதற்கு உரமூட்ட வேண்டும்.

அநீதி எங்கு முளைவிட முயற்சி செய்தாலும் முளையிலேயே அதைக்கிள்ளியெறிந்து வேரறுத்து மறுபடி முளை விடாத முடிவை நிரந்தரமாக்க வேண்டும்.

எவ்விடத்தும் சமாதானம் மட்டுமே நிலவக்கூடிய சூழ்நிலையைக் கண் காணித்துப் போற்றிப் பயிர் செய்ய வேண்டும்.

யாராக இருந்தாலும், யாரும், ஒருவருக் கொருவர் அன்னியரல்ல, நம்மவரே எனும் சமரச நிலை பரவ ஒவ்வொரு வரும் தனி முயற்சியோடு இயன்ற வரை அடுத்தவர்க்கு, ஏதேனும் ஒரு அம்சத்திலாவது, உதவியாக இருந்து பரஸ்பர அன்பைப் பேணி வளர்த்துக் காக்க வேண்டும்.

யாரும் யாரையும் ஏமாற்ற இடங் கொடுக்காமல் கண்காணித்தல் வேண்டும்.

இயன்றவரையில் ஆங்காங்கு சத்சங் கங்கள் நிறுவிப் பொதுப் பணிகளில் பங்கேற்றல் திரும்பவும் அமலுக்கு வர வேண்டும். சத்சங்கம் என்பது அசத்தி யத்தின் எதிரிகளைக் கொண்ட பாசறைகளாக ஒளிர வேண்டும்.

பணத்துக்கு முதலிடம் கொடுக்கும் வசூல் பட்டியல் வழக்கம் மாறி, அவரவர் வலிய வந்து செய்யும் உதவியைப் பெற்றுப் படிச் செலவே தும் செய்யாமல் முழுமையாகக் குறிப் பிட்ட பணியினுக்கே செலவு செய்து

மீதமிருப்பதை ஊரார் அறிய ஓரிடத்தில் அறித்த சந்தர்ப்பத்திற்காக இருப்பில் வைக்க வேண்டும்.

கருங்காலிகள் எந்த இடத்திலும் உருவாகாதவாறு கண்காணித்தல் வேண்டும்.

என்ன நிலை மீறினாலும் வன்முறைக்கிடமே கொடுக்காமல் அறிவுத் திறன் கொண்டே அமைதியை நிலை நாட்டும் திண்மையை யாவருள்ளும் வளர்க்க வேண்டும்.

தெய்வத்தின் பெயரால் கூட, தவறு நடப்பதை ஆதரிக்காதப் பகுத்தறிவுத் திண்மை நமது பாங்காக வேண்டும்.

எளிமையே வாழ்வின் மூச்சுக்காற்றாகி ஆரோக்கிய வாழ்வு முறையே நமது குறிக்கோளாக வேண்டும். மனைவியைத் தவிர மற்றப் பெண்கள் யாவரும் உடன் பிறப்பே எனும் மரபு நிரந்தரமாகித் தாய்க் குலத்தின் சுதந்திரம் பேணிக்காக்கப்பட வேண்டும்

விளம்பரம் செய்து ஆதரவு தேடித் தலைமை பெறுதல் எனும் வழக்கம் வீழ்ந்து, தரமறிந்து நம்முள் நாமே தேர்ந்தெடுக்கும் நபர் தன்னடக்கத் துடன் தலைமையேற்று அதைப் பெருஞ் சுமையாகக் கருதி எச்சரிக்கை யுடன் இயங்கும் சீரிய மனிதராகத் திகழ நமது பூரண ஒத்துழைப்பு காத்து நிற்க வேண்டும்.

உலகில், நாட்டில், ஒவ்வோர் ஊரிலும் ஒரு ஏசு தோன்ற வேண்டும், ஒரு நபி தோன்ற வேண்டும், ஒரு மகாவீரர் தோன்ற வேண்டும், ஒரு புத்தர் தோன்ற வேண்டும், ஒரு அசோகர் தோன்ற வேண்டும், ஒரு மத்வா சாரியார் தோன்ற வேண்டும், ஒரு இராமானுஜர் தோன்ற வேண்டும், ஒரு சங்கரர் தோன்ற வேண்டும், ஒரு விவேகானந்தர் தோன்ற வேண்டும் — தப்பித் தவறி ஹிட்லரின் சாயல் கொண்ட ஒரு புழுக்கூடத் தோன்றக் கூடாதென்ற பிரார்த்தனை நம் மனத்தை இடையறா த்யானமாய்ப் பற்றி நிற்க வேண்டும்,

இவ்வளவும் நாம் ஆற்றிக் கொண்டே சென்றோமானால், நம்மை வழி நடத்திச் செல்ல ஆங்காங்கு மகா புருஷர்கள் தோன்றுவர். நம் வாழ்வு தழைக்கும், உலகில் அமைதி நிலவும், நிறையும், நிரந்தரம் பெறும்.

பாததூளிப் பாசறை,

*தற்காலிகத் தலைவர் - மகாசக்தி பாத தூளி*

*" உபதலைவர்—பராசக்தி பாத தூளி*

*" தளபதி—த்ரிசக்தி பாததூளி*

***1-1-1980***

***ராயப்பேட்டை,***

***சென்னை-600 014.***

## பாததூளிப் பாசறையின்
## சில எண்ணங்கள்

i

விலைவாசி விஷமென ஏறுகிறது. இதற்கு ஆளும் கட்சியே பொறுப்பு என அப்போது எதிர்கட்சியாக இருப்போர் குற்றஞ்சாட்டுகின்றனர். பின்னர் இவர்கள் ஆளுங்கட்சியாகுங் காலத்திலும் விலைவாசி அதே ஏறு முகத்தில் தான் வளர்கிறது. முன் ஆளுங் கட்சியாயிருந்து தற்சமயம் எதிர்கட்சியாக இருப்போர் முன்னவர் செய்தது போலவே, மக்களிடம் சென்று விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஆளுங்கட்சி மீது குற்றப் பத்திரிகை படிக்கின்றனர். இவர்களின் பேச்சு வன்மையால் மக்கள் குழப்பப் படுகின்றனர், குழம்புகின்றனர்.

இவ்விலைவாசி ஏற்றம் இன்றோ நேற்றோ தொடங்கியதல்ல. இது நமது ஆரோக்கிய வாழ்வு முறை நலிய ஆரம்பித்த உடனேயே முளைவிட **ஆரம்பித்து இன்று மரபெரும் விருக்ஷ**

மாகி இலை, கிளை, காய், கனி விழுது களுடன் இன்னும் 'பெருகுவோம்' என எக்காளமிட்டு நிற்கிறது.

அடிப்படைகளைச் செம்மையாய் சீர் தூக்கிப் பார்த்து, காரண, காரியங் களை ஆராய்ந்து, சிந்தனைச் செல்வர் களும் சாதனை வீரர்களும், மாற்றங் களை, திருத்தங்களை, அறிமுகப் படுத்திச் செயல்பட்டாலன்றி, எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தா லும் இந்த விலைவாசி ஏறுமுகம் இறங்குமுகமாகும் வாய்ப்பே நேரப் போவதில்லை. வாய்ச்சொல் வீரர் களின் வசனக் கணைகளுக்கும், வோட்டு வேட்டைக்கு வருவோரின் கனல் மொழிகளுக்கும் அது பணி யாது.

தோராயமாக எந்த கட்டத்தில் இந்த நச்சு விதைக்கப்பட்டது என்று ஆரா யும் போது, பணத்தை வட்டிக்குவிட்டு பணம் பண்ணுதல் என்ற பழக்கம் ஆரம்பமானது, முதற்கட்டம்.

இரண்டாவது கட்டம், இறக்குமதி செய்யப் பெற்றுப் புகுத்தப்பட்ட

நேரிடை வியாபாரமே நடவாமல், பேச்சு வார்த்தை ஒப்பந்த மூலமாகவே நடைபெறும் பங்கு வியாபாரங்கள் வேரூன்றி வளர்ந்துவிட்ட துர்ப்பாக்கிய நிகழ்ச்சி.

மூன்றாவது கட்டம், தரகர்கள் என்ற வர்க்கம் தோன்றி இயங்க ஆரம்பித்தது.

நான்காவது கட்டமாக விளம்பரச் செலவின் மூலம் உற்பத்திப் பொருளைப் பிரபலமடையச் செய்யும் உத்திகள்.

அவ்விளம்பரப் பணியே ஒரு தனி வர்க்கத்தை உற்பத்தி செய்து, சில பொருள்களுக்கான விளம்பரச் செலவு ஏறத்தாழ உற்பத்திப் பொருளின் அடக்க விலையொத்த பரிமாணத்தை எட்டும் நிலை மலர்ந்திருப்பது.

பொருளின் உற்பத்திக்கு முன்னோடியாக, அதையொட்டிய ஆராய்ச்சிக் குழு, திட்டக்கமிஷன். ஆலோசனைக் குழு என்றெல்லாம் அபரிமிதச் செலவினங்கள்.

வட்டிக்கு வாங்கிய பணத்தைக் கொண்டு பெருவாரியாகப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணவலு வின் ஆதாரத்தாலேயே செயற்கை முறை தட்டுப்பாட்டை உண்டாக்கியே விலையேற்றத்திற்கு வழிகோலுவது. உற்பத்தித் திறனும், உழைப்பின் பயனுமே ஊதியத்திற்குரியவை எனும் மரபு மாறி, உறங்கிக் கொண்டிருக்கும் உபரிப் பணம் இடம் மாறுவதால் உயர்ந்த விகிதத்தில் பொருளீட்ட முடியும் எனும் ஆரோக்கியமற்ற நிலை உருவானதால்தான் எல்லாமதிப்புள்ள நிலைகளும் தம் அந்தஸ்தை, செல் வாக்கை இழந்து இரண்டாந்தர நிலையை அனுபவிக்கநேர்ந்து பலவீன மடைந்து விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கப் போதிய ஆற்றலின்றி கிடக் கின்றன.

வரி கொடுக்காது ஏமாற்றக் 'கருப் புப் பண' உத்தி கையாளப்பட்டதால் விலைவாசி ஏற்றத்திற்கும், அவசிய மற்ற ஆடம்பரப் பொருட்கள் வாழ் வின் இன்றியமையா அங்கம் வகிக்க வும், வாய்ப்புக்கள் நிரந்தரமாகி விட்டன.

இவ்வாறான வழிமுறைகளால் அநேகம் பொருள்களின் விலையில் ஐம்பது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட அளவு அர்த்தமில்லாத கண்ட, கண்ட வடிகால்கள் வழியாக விரயம் செய்யப் பட்டு, பொருளின் கச்சாச் சரக்கின் மதிப்பு, அதன் ஆக்கத்திற்குரிய ஊதியம், அது உருவாக நின்ற தொழில் நுட்பத்திற்குரிய சன்மானம் ஆகியவை போக, இவை யாவற்றுக் கும் முதலீடாக அமைந்த மூலதனத் திற்குச் சில சமயம் நட்டம் நேர்வதும் நடக்கிறது. லாபமாக நடந்தாலோ, மேலே சொல்லிய எல்லாச் சுமைகளை யும், விலைவாசி ஏற்றத்தையும், முழுமையாக நுகர்வோர்தான் ஏற் கின்றனர்.

இந்தக் கோணத்தில், அறிஞர்கள், பொருளாதார வல்லுனர்கள், புரட்சிக் கோணத்தில் நிலைகளை ஆராய் வோர், யாவரும் ஆழ்ந்து சிந்தித்து ஏதேனும் நிவர்த்திக்கு வழி உண்டா எனும் சாத்தியக் கூறுகளை தேடித் தெளிந்து நம் வாழ்நாளிலேயே இதற்

குப் பரிகாரம் காணும் வாய்ப்பு நேரப் பிரார்த்திப்போமாக.

அவதார புருஷர் நபிநாயகம் அவர்கள் வட்டி வாங்கும் செய்கையினை ஆதரிக்கவில்லை எனும் பேருண்மையை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமே.

II

தம் உயிரையே பலி வாங்க நியமித்துள்ள சிலுவையைத் தாமே சுமந்துப் பலிக்களத்திற்குச் சென்ற அவதார புருஷர் ஏசு பிரான் அவர்களின் தியாகம் கூடப் பணப்பேய் பிடித்த மேல்தளவர்க்கத்தின் மனத்தை மாற்ற முடியாது போனாலும், அம்மகா புருஷரின் தியாகத் தீ இன்னும் அணைந்து விடவில்லையாதலால், அத் தீ என்றோ திடீரெனக் காட்டுத் தீயாக மாறி தீமைகளை அறவே பொசுக்கி மறுவாழ்வு நல்கும் எனும் நம்பிக்கை நம்முன் செழுமையாய் வளர்வதாக.

III

மகான்கள்தான் மக்களை வழி நடத்திச் செல்ல முழுத்தகுதியும் உரிமையும் பெற்றவர்கள்; அரசியல்வாதிகள் அல்ல. வள்ளுவர் பெருமானின் சான்றோரிலக்கணம் இதற்குச் சான்று. இந்த உண்மையை இன்றையச் சமுதாயம் குறிப்பாக இளைஞர் சமுதாயம், முழுமையாக உணர வேண்டும்.

சென்ற தலைமுறைகளில்தன்னிகரிலா நேர்மையுள்ளமனிதர்கள் தியாகத்தீயில்தம்மைச்சுட்டுப் புடமிட்டுநாட்டிற்கும் மக்களுக்கும் தொண்டாற்றினர். அத்தொண்டின் எதிரொலியிலேயே கடந்த தலைமுறை வாழ்ந்து முடித்தது. இப்போது துவங்கியுள்ள தலைமுறைக்கு அவ்வாறான தலைவர்களே இல்லாது தத்தளிக்கும் நிலை நேர்ந்துள்ளது. அரசியல் தலைவர்களின் தனிச்சிறப்பு அம்சம் முக்கியமற்ற விஷயமாக ஆக்கப்பட்டு, அரசியல் கட்சிகளின் செல்வாக்கு மட்டும் ஓங்கியுள்ளது. இது நாட்டுக்கோ மக்களுக்

கோ ஆரோக்கியமானதல்ல. இன்றைய இளம் இரத்தத்திலிருந்து தியாகச் செம்மல்களான மகாபுருஷர்களும், தன்னலம் பேணாத் தன்னிகரற்ற தலைவர்களும் தோன்றட்டும் எனப் பிரார்த்திப்போமாக.

## IV

எந்த மூலையிலும் தகிடுதத்தம், லஞ்ச வஞ்சம், ஏமாற்றுவித்தை, சராசரி மக்களின் அமைதியான வாழ்க்கைக்குப் பாதுகாப்பின்மை இவை மலிந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு பிரஜையும் தான் உண்டு வளர்ந்த தாய்ப்பாலுக்கு மாசு கற்பிக்கும் இழி செயல் எதிலும் சூழ்நிலை தன்னை ஈர்த்து விடாதவாறு நடந்து, தான் கையொப்பமிடும் தன் தந்தையின் பெயர்க்குறி எழுத்திற்குப் பெருமை சேர்க்கும் கண்ணியனாக வாழ்வது என்ற கட்டுப்பாட்டைத் தனக்குத் தானே நிறுவி நடக்கத் தலைப்பட்டால், நம் தலைமுறையிலிருந்தே பாலாறு, தேனாறுக் கனவுகளெல்லாம் நனவாகிவிடும். இதற்கான மன

வுறுதியை நம் இளைஞர்கள் பெற வேண்டும் என இறையிடம் அடைக் கலம் கொள்வோமாக!

V

வரதக்ஷிணைக் கொடுமையொழிய ஒவ்வொரு இளைஞனும் வீர சபதம் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டம் வந்துள்ளது. தங்கம், வெள்ளி விலை ஏற்றம் பெண்ணைப் பெற்றோரைப் பதற வைத்துள்ளது. அவர்களது பயம் நீங்க அபயவரம் நல்குவது இன்றைய இளைஞர் பெருமக்களின் பொறுப்பாகியுள்ளதை நினைவுப் படுத்த ஆசைப்படுகிறோம்!

VI

தாய்க்குலத்தின் கவர்ச்சிமிகுத் தோற் றத்தினை மிகைப்படுத்திக் காட்டி மயக்கமூட்டிப் பாலுணர்ச்சிக்கு வெறி யேற்றிவாழ்வுமுறைஅலங்கோலத்தை எய்ய உதவும் வழி முறைகளுக்குச் சாவுமணியடிக்க வேண்டும். இதைச் செய்யத் தாய்க்குலத்தின் பூரண ஒத்துழைப்பு தேவை. எந்தச் சகோதரி

யும் தனது உருவத் தோற்றத்தை இவ்வாறு ஒரு அலங்கோலச் செயலுக் குப் பயன்படுத்த இடந்தருவதில்லை எனும் நோன்பை மேற்கொள்ள வேண் டும். பெண்ணிலிருந்தே பிறந்து விட்டுப் பெண்ணை விலைபொரு ளாக்க நினைக்கும் அறியாமையி லிருந்து வருங்கால இளைஞர் சமுதாய மேனும் விடுதலை பெற வேண்டும். அதற்கு இன்றே அங்குரார்ப்பணம் நடக்கட்டும், இனிதே நிறைவேறட்டும் எனப் பிரார்த்திப்போமாக!

## VII

இனப்பெருக்கத்தைக் கண்டு அஞ்சிக் குரலெடுத்துக் கூவுகிறோம், மூலத்தை மறந்து. முன்னெல்லாம் உடலுறவு என்பது புனிதமான ஒன்றாக, எச்சரிக் கையுடன் நேரம் காலம் அறிந்து அனுபவிக்கும் ஒரு இன்பமாக, ஏன் நோன்பாகக்கூட மதிக்கும் அந்தஸ் தோடு இருந்தது.

ஆனால் இன்றோ உடலுறவென்பது, பாலுணர்வையூட்டி வெறியேற்றும் கேளிக்கைச் சாதனங்களால் ஊக்கு

விக்கப்பட்டு, நினைத்த போதெல்லாம் இயந்திர கதியில் இயங்குவது எனும் பழக்கமாக நிலைத்ததுதான், மக்கட் தொகை, காளான் என, காட்டாற்று வெள்ளமெனப் பெருகக் காரணம். இந்த விஷயத்தையும் சிந்தித்துப் பரிகாரம் தேடிப் பயனடைவோமாக!

## VIII

துரதிர்ஷ்ட வசமாக, நாம் வாழ்வது விளம்பர யுகத்தில் அமைந்து விட்டது. ஒரு பொருளின் மதிப்பை அனுபவத்தால் அறிந்தோ, அனுபவித்தவர் கூறக் கேட்டோ, அணுகுவது என்ற பாரம்பர்ய நிலை அடியோடு மாறிப்போய், பொருளுக்கு சொந்தமானவர்கள் ஆரோக்கியமற்ற கொள்ளை லாப வியாபார நோக்கோடு போட்டி மனப்பான்மை தலைவிரித்து ஆட, எதையும் சந்திரன், இந்திரன் என்றோ, சுவர்க்கம் என்றோ, அமுதம் என்றோ பகட்டாக விளம்பரப்படுத்தி நம்மை ஏமாளிகளாக்கும் தாக்குதல் தான் தற்கால நியதியாகி இருக்கிறது.

# IX

மேலும் இப்போதெல்லாம் ''பத்திரிகை தர்மம்'' என்ற புனிதச் சொல் அளவுக்கு மீறி உபயோகப் படுத்தப் பட்டு நம்மை எதையும் நம்ப வைக்கும் முயற்சி தீவிரமாகி இருக்கிறது.

உண்மையில் ''பத்திரிகை தர்மம்'' என்ற இப்புனிதச் சொல்லின் 'சத்திய நோக்கம்' இன்றைய நடப்புக்களில் ஐயத்திற்கிடமின்றிச் சிதைந்து, நலிந்து தான் காண்கிறது. ஒரு பத்திரிகையின் சொந்தக் கருத்து, 'தலையங்கம்' என்ற வட்டத்தி னுள்ளேதான் இருக்கலாம். செய்திப் பகுதியில் நுழையவே கூடாது. ஆனால், நாம் காண்பதோ, உண்மை பல்வேறு நிறங்களில், பல்வேறு அளவில், மிகைப்படுத்தப்பட்டோ, சிதைக்கப்பட்டோ அல்லது திரித்துக் கூறப்பட்டோ, தன் சுய உருவை இழந்து, பலப்பல உருவத்தோடு ஒரே உண்மை அநேகம் பத்திரிக்கைகள் வாயிலாக வெளிவந்து, நம்மை வெவ்வேறாகப் பிரித்து, அதனின்று சில கோஷ்டிகளாக ஆக்கி, எந்நேரமும்

நாம் சந்தேகமும், பயமும் துவேஷமும் கொண்டு வாழ்பவர்களாகி ஒரு ஸ்திர மற்ற தன்மையில் இயங்கும் தாழ்மையை இன்று அடைந் துள்ளோம். என்ன அவலம்! செய்தி களைத் திரித்துக் கூறித் தாம் சார்ந் திருக்கும் கொள்கைக்கு ஆதரவு திரட்டும் இழிநிலை மாறினால்தான் நமது பழைய மாண்புக்கு மீட்சி. இல்லையேல் எஞ்சி நிற்கும் யாவற்றுக்குமே வீழ்ச்சிதான்.

குற்றுயிராகிக் கிடக்கும் நமது பாரம்பரிய மரபுகள் புத்துயிர் பெற்று பேரொளி வீச வேண்டுமானால், எழுத்துச் சிற்பிகள், சிந்தனைச் செல்வர்கள், சமூக அமைப்பின் தர்மகர்த்தாக்கள், அறம் வளர்க்கும் ஆன்மீகப் பெரியோர், தர்மத்தைப் பேணிக் காக்கும் தூயோர், முடிவாக வருங்கால சந்ததிகளின் பெற்றோர், யாவரும் ஒருங்கிணைந்து கண்டிப் புடனும், கண்காணிப்புடனும் களை யெடுத்து முடித்து, ஒரு புதிய வழியை வகுத்துக் கடைப்பிடித்தால்தான், இப்போது புரையோடிப்போய் ஆக்கிர

மித்துள்ள நச்சு நீங்கி, உண்மை தழைக்கும் நிலை உருவாகும்.

வாழ்க்கைக்கு ஆரோக்கியமான வாழ்வு முறை இன்றியமையாத அஸ்திவாரம். இதைச் செம்மைப்படுத்தும் வேலை முதல் பணியாகும். இந்தப் பணி ஒழுங்காக முடிந்து விட்டாலே பாதி நோய் தீர்ந்து விடும்.

பிறர் பொருளை அபகரித்தல், அயலான் மனை விழைதல்; புறங் கூறல், பொய் சொல்லல், வம்பு பேசுதல், இச்சகம் பேசி வஞ்சகம் செய்தல், பகை வளர்த்தல், வீண் சண்டையிட்டு வன்முறையைக் கையாளல், வெட்டியாய்த் திரிதல் போன்ற புல்லுருவிக் குணங்கள் எந்த மூலையிலும் முளைவிடாமல் பாது காத்து எச்சரிக்கையோடு நடப்பதை வாழ்க்கையின் பழக்கமாகக் கைக் கொள்ள வேண்டும். கொள்கையளவில் வேறுபாடுகள் இருந்தாலும், சிந்தனை யளவில் ஒருமைப்பாட்டுடன் இயங்கும்

தனிமனிதர்களைக் கொண்ட சமுதாய மாக நாம் மாற வேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனும் தனது தனித்தன்மையான நேர்மையால் தழைத்தோங்கித் தன்னை இனம் காட்ட வேண்டும்—ஒரு கொள்கையின் உறுப்பினனாக அல்ல.

கொள்கை காலப்போக்கில் மடிந்தா லும், ஒருவனது தனித்தன்மை சிரஞ்சீவித்வம் பெற்று நின்று அவனது சந்ததிக்கு வழிகாட்டியாக ஒளி வீச வேண்டும்.

எந்த முறைக் கேட்டினை எங்கு கண்டாலும், தனி மனிதர்கள் ஒரு மனிதராகி, ஒரு மனத்தினராய் அதை எதிர்த்து வீழ்த்த வேண்டும். இப்படி ஒன்று சேரும் சம்பவங்களே நமக்குள் ஓர் புதிய இன்ப உணர்வை ஊட்டி, நாம் இமயமென உரம் பெறும் ஆற்றலை வளர்க்கும்.

தவறிழைக்காத யாரும் தன்னிச்சை யாய் யாரையும் சிபாரிசோ

அறிமுகமோ இன்றி, அணுகி இணைந்து செயல்படும் வாய்ப்புக்கள் மலிய வேண்டும். தவறு செய்ய நினைக்கவே கூசும் இயல்பு தோன்றி, வளர்ந்து, தவறான வழியே தோன்றாத நிலை மலர வேண்டும்.

மாயையால் சூழப்பட்டு, மயக்கத்தால் கட்டுண்ட நிலையில், நமது தேவைகளில் புதுப்புது மாயநிலையினைத் தோற்றுவிக்கப் பாடுபடும் சுவை நம்மிடம் இருக்கவே கூடாது. அச்சுவை நமக்கு மாபெரும் எதிரி. நமது தேவைகளைக் குறுக்குவதன் மூலம்தான் அந்த எதிரியை வெற்றி கொள்ள முடியும்—தேவைகளை மேலும், மேலும் வளர்த்துக் கொள்வதால் அல்ல.

சமூக விரோத சக்திகள், அதற்குத் துணை போகும் லாகிரி வஸ்துக்கள், அதன் போலிக் குதூகல நிலையினை அனுபவிக்கத் துணை நிற்கும் கேளிக்கைப் படைப்புக்கள் இவைகளை ஒன்றன்பின் ஒன்றாய் ஒடுக்கி, முறியடித்து, முளையோடு கிள்ளி யெறிய வேண்டும்.

''கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப்போக''

எனும் ராமலிங்க அடிகளாரின் வாக்குப் பலிக்கும்படி செய்ய வேண்டும்.

அந்த நாளில் பாலுணர்ச்சிப் பசியடக்க நினைத்தவன், தன்னை முக்காடிட்டு மறைத்துத் தன் குற்றச் செயலுக்கு வெட்கினான்.

மது மயக்கத்திற்காளானவன் தலை குனிந்து தன்னை ஒளித்துத் தன் தவறைத் தாழ்மையாய் எண்ணி னான்.

ஆனால் இந்த நாளிலோ அத்தவறு களை வீறுடன் செய்து தம்மை வெளிப்படுத்திக்கொள்வதே ஆண்மை என எண்ணுகின்றனர். என்ன பேடித் தனம்!

இப்பலவீனங்களை அறவேயொழித்து நம் சந்ததியினை இங்ஙச்சரவும் தீண்ட

முடியாத அமைப்பை நிர்மாணிக்க வேண்டும். இதைச் செய்து முடித்தால் ஒரு மாபெரும் யக்ஞம் நடத்தியவர்களாவோம்.

பெண்கள் என்ற எண்ணம் வரும்போது நம்முள் புனித உணர்வு மட்டுமே தோன்ற வேண்டும். அப்போதுதான் நமது தாய், தாரம், தமக்கை, தங்கை, தங்கச் செல்விகள் யாரும் தயக்கமின்றித் துணிவுடனே தளிர்நடை போட முடியும். அப்போதுதான் அவர்கள் நம் வாழ்வு தழைக்கவும் தூய்மையாகவும் துணை நிற்க முடியும்.

பரோபகாரம் என்ற நமது பெருமை மிகுந்த பாரம்பர்யம் இன்று மிகவும் நலிந்து மூச்சுவிடக்கூடச் சக்தியற்றுக் கிடக்கிறது. அதற்குப் புத்துயிரூட்டி, வலிவு சேர்த்து, நம்மை வழிவழியாகக் காக்கும் சக்தியினை மீண்டும் நல்க வேண்டும்.

எந்த உயிருக்கு நேரும் இன்னலும் நம்மை உடனே ஒரு கடமை வீரனாக்கி அத்துன்பத்தின் பரிமாணத்திற்கேற்ப

ஒருவரோ அல்லது பலரோ இணைந்து பரிகாரம் காணும் பரந்த உள்ளம் மீண்டும் நமது பாரம்பர்யமாக நிலைக்க வேண்டும்.

## XI

யாரும் தன்னை ஒரு பணக்காரன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. பலசாலி என்று நினைத்துக் கொள்ள கூடாது. அறிவாளி என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. வசதிகள், தகுதிகள், வளங்கள், எது வாயிருந்தாலும் சரி, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவையே தவிர, நாமாக எதையும் தோற்றுவிக்க வில்லை, அடைந்து விடவில்லை, ஐச்வர்யங்கள் (இயற்கை வளங்கள்) யாவும் என்றோ தோற்றுவிக்கப்பட்டு விட்டன, பிரபஞ்சம் தோன்றும் போதே.

ஜீவராசிகள் உயிர்வாழ்வதற்காக, வாழ்க்கைக்குத் தேவையானவைகளை உரிய காலங்களில் அடைவதற்காக, அடைவதைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தோன்றிய ஐச்வர்

யங்கள், பொருட் செல்வமென்றும், அருட்செல்வமென்றும். உண்மையில் நாம் தர்மகர்த்தவாக இருந்து பரிபாலனம் செய்யவே இவை நம்மை அடைவிக்கப்படுகின்றன. அன்றி, நமதுசொத்து, நினைத்தவாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்காக ஏற் படுத்தப்பட்டவையே அல்ல ஐச்வர் யங்கள்.

பொருளாற்றல், வலிவாற்றல், அறி வாற்றல் யாவுமே நம்மைவந்தடையும் ஐச்வர்யங்கள் தாம்; நடைமுறையில் நம் ஆற்றலால் வளர்க்கப்பட்டு, பெருக்கப்பட்டு அடையப்படுகிறது என்று தோன்றும் மாயம், நம்மால் ஆழ்ந்து சிந்திக்கப் பெற்று, உண்மை யிலேயேஇ வையாவும் தர்மகர்த்தா நிலையில் பரிபாலனம் செய்வதற்காக ஈசுவர சங்கல்ப்பத்தின்படி நம்மை வந்தடைந்திருக்கும் தெய்வப்பிரசாதம் என்ற அதன் உண்மைக் கோணம் தெளிவாக வேண்டும், நமது உணர் வாக வேண்டும். தேவைக்கேற்ப ஐச்வர்யங்கள் ஒழுங்காகப் பங்கீடு ஆவதற்கே அறிவுச் செல்வமும்

ஆற்றல் செல்வமும் தோற்றுவிக்கப் பட்டன.

ஐச்வர்யங்கள் எடுக்க எடுக்கத் திரும்ப நிரப்பப் பெறுவதற்காகவே அறிவும் பலமும் பயன்பட வேண்டும்; பிறரை அடிப்பதற்காக அல்ல; அடித்துப்பிடுங்கித் தனக்கெனச் சேர்த்து வைப்பதற்காக அல்ல. அன்றி இவ் வுண்மைகளைப் புறக்கணித்து அகந்தையால், இவை நான்ஈட்டியவை எனக்கே சொந்தம், யாருக்கும் இதில் உரிமையில்லை எனச் சாடுகிறவன் உண்மையில் ஒருகொள்ளைக்காரனே.

மாயநிலையின் மயக்கத்திலே தோற்று விக்கப்பட்ட அபரிமித விலைப் பட்டியலிடப்படாத, உண்மையான, உருப்படியான, பயனுள்ள, உழைப் பால்ஒருவன் எவ்வளவு சம்பாதிக்க முடியும்? அப்படிச் சம்பாதித்ததில் அவன் தர்மகர்த்தா நிலையில் வரவிற் கேற்றஅளவில் ஒழுங்கானப் பங்கீட்டு முறையிலே நன் குடும்பத்தைப் பேணிக்காக்கும் வினைக்கு உபயோ

கித்தது போக எவ்வளவு மீதம் பிடிக்க முடியும்?

அப்படி மீதமாவதிலும் இதில் தன்னுடையது எனத் தனி உரிமைகொண்டாடக்கூடிய அளவு, முன்சொன்ன ஒழுங்கானப் பங்கீட்டு முறைப்படி மிக மிக அற்ப அளவுதானே எஞ்சி நிற்கும்?

அச்சிறிய அளவினைக் கவனமாகச் சேமித்து வைத்துத் தனது நெருக்கடிக்கால அவசர நிலைக்குத் தானே அதைப் பாதுகாப்பாக எண்ண முடியும்?

இவ்வாறான, மனிதனின் உண்மைப் பாரம்பர்யச் சீரிய சிந்தனைகளுக்கும், இயல்பான நெறிகளுக்கும் நமது இன்றைய இறக்குமதி செய்யப் பெற்றக் கலாசாரங்களின் கலப்படத்தால் ஈன்றெடுத்துச் சீராடப்பெறும் வாழ்வுமுறை இடங்கொடுக்குமா? நிச்சயம் கொடுக்காது.

காரணம்—ஐச்வர்யம் எனும்மதிப்பிலா நிதியை, பணம் எனும் ஆபத்தான

அடையாளச் சீட்டை அளவு கோலாக நிறுவி, அடியோடு மதிப்பிழக்கச் செய்து விட்டோம்.

எந்த ஐச்வர்யத்தையும் பணம் விலை பேசும் அவல நிலை!

எந்த உறவையும் பணத்தால் வாங்கி விடக்கூடிய இழிநிலை!!

பணம் குவிந்திருக்குமிடத்திற்கு, அப் பணம் எவ்வாறு அங்கு குவிய நேர்ந்தது எனும் சிந்தனைக்கிட மில்லாமலேயே தனி மரியாதை, பயம் என்கிற போலி நிலை!!!

குணம் எவ்வளவு உன்னதமானதாக இருந்தாலும் பணத்துடன் பிணைந்த தாக இல்லாவிடில் வரவேற்பே கிடைக்காத கடைநிலை!!!!

இவ்வாறாகக் கட்டுக்கு மீறிய வேக நிலையில் காட்டாற்று வெள்ளமென, நமது எல்லாப் பாரம்பர்யங்களையும், பண்புகளையும், மதிப்புள்ள வாழ்க்கை முறைகளையும், பணம் என்ற இந்தப்

புதிய அளவுகோல், வீழ்த்தி அடித்துக்கொண்டு போய், நம்மால் மீட்க முடியாத பள்ளத்தில் தள்ளிவிட்டது.

இனி எப்படி இந்த ஆபத்தான அளவுகோலை மாற்றியமைப்பது? முடியாது, முடியவே முடியாது. ஆனால் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள நிச்சயமான ஒரே வழி உண்டு. அது நம்மை நாமே திருத்திக் கொள்வதுதான்.

பணத்தின் மதிப்பை நமது ஆன்மீக பலத்தால், பண்பான பழக்க வழக்கங்களால், நெறியான நடப்பால், வலிவிழக்கச் செய்ய வேண்டும். பணம் என்பது ஒரு மாபெரும் அசுரபலம் வாய்ந்த தத்துவமாக இல்லாமல், எந்த நேரத்திலும் பரிசீலனைக்கு உரிய வெறும் அடையாளச்சீட்டு நிலைக்குக் குறைக்கப்பட வேண்டும். நியாயமானத்தகுதிகள் மூலமே அளவான முறையில் இவ்வடையாளச் சீட்டைப் பெறும் கட்டுப்பாடு அமலாக வேண்டும். நா நயத்திற்குத்தான் மதிப்பு, நாணயத்திற்கல்ல எனும் விதி தோன்ற வேண்டும். அதற்கு நம்மில் சத்தியத்திற்காகப் போராடி அதனை

முடிசூட்டி வைக்கப்பாடுபடும் நோக்கம் தியாக தாகமாக, தீராமோகமாக வளர வேண்டும். அப்போதுதான், நாம் நிறுவிய பணமே நம்மை வீழ்த்தி நாசமாக்கும் கொடுமையினின்று விடுதலை பெற ஆரம்பிப்போம்.

பின்தான் யாவரும் ஓர்குலம், யாவரும் ஓர் இனம், ஒருவனே தேவன், எனும் தத்துவம் புத்துயிர் பெற்றுத் தலை நிமிரும். தனி ஒருவன் உணவின்றித் தவிக்கும் தலைகுனிவு மறையும்.

ஐச்வர்யம் பணத்தால் தாழ்த்தப்பட்டு மாற்றுக் குறைந்திருக்கும் நிலையி லிருந்து மீள நாம் திருந்துவது ஒன்று தான் வழி.

யாராயிருப்பினும் எந்நிலையிலுள் ளோராயினும் அவரவர்பெறும் வாழ்க் கைத் தரம்; தர்மகர்த்தா என்ற நிலை யில் அவர்கள் பெறும் ஊதியமே யன்றி, அவர்களை வந்தடையும் எந்த ஐச்வர்யத்திற்கும் எஜமானர்களாக முடியாது. எஜமானன் ஈசுவரன் ஒருவனே. எஞ்சிய யாவரும் அவனை

அண்டியிருக்கும் நொண்டிகளே. இந் நொண்டிகள் சண்டிகளாகி விடுவதன் விளைவுதான் இந்த இழி நிலை.

இவ்வுண்மையை வலியுறுத்திச் சொல்வதால் மனிதனது தன்னம்பிக்கை இழந்து போகும் என வாதிப்போர் சத்தியத்திற்கும் சமூகத்திற்கும் எதிரிகளே. அவர்கள், ஏற்கனவே பலவீனப் பட்டிருக்கும் நமது இழிநிலையினைப் பெரிதும் விரும்பிப் பயனடைய அலையும் குள்ள நரிகள், இதமானவர்களே அல்லர்.

அன்றி நாம் இப்பிரத்தியட்ச உண்மைகளைப் புரிந்துகொண்டு, புரையோடிப் போயிருக்கும் நமது நலிவு நோயை அறவே அகற்றிக் கொள்வதால் நாம் பெறும் உரம் வைரமென நம்மை உறுதியாக்கும்; த ன் னை த் த ா னே அழித்துக் கொள்ளும் தாழ்மை மறைந்து நம்மை நாமே உயர்த்திக் கொள்ளும் நலன் பெருகும்.

*1980ல்* வெளியாகிய 'விடயபுரம் மகான்'' சரிதத்திலிருந்து!

சற்று வலித்தாலும் பரவாயில்லை. கொஞ்சம் நம்மை நாமே பகுத்தறிவுச் சவுக்கால் அடித்துக் கொண்டு பார்ப்போமா?

நமக்கென்று ஒரு சிறந்த தனித்தன்மை உண்டு, பழுதிலாப் பாரம்பர்யம் உண்டு, பாராட்டுக்குரிய பண்பாடு உண்டு, கர்வத்துக்குரிய கலாசாரமும் உண்டு. வணக்கம் பெறக்கூடிய வரலாறு உண்டு.

இதையெலாம் எப்போது மறந்தோம்? ஏன் மறந்தோம்? அன்னியர்க்கிடம் கொடுத்தோம். நம் அடையாளத்தைப் பறிகொடுத்தோம். அன்னிய மொழியிலும், அவர்களது நடை, உடை, பாவனையிலும் ப்ரமை கொண்டோம். நம்மவரிடமே நம் மொழியில் பேசுவதை பெருமைக் குறைவாக எண்ணி, அன்னிய மொழியிலே பேசி அசர வைப்பதாக நினைத்து, அசட்டுத்தனத்தை அங்கியாக்கிக் கொண்டோம். அன்னியரைப் போல் முடியலங்காரம், உடையலங்காரம்,

பழகும் பாணி என்றெல்லாம் மாற்றிக் கொண்டு சற்றும் கூச்சமில்லாமல் பொறுப்பில்லாமல், தன்மான உணர்வை மழுங்க விட்டோம், மயங்கி நிற்கிறோம். இது நியாயமா?

நமது சந்ததிகள் இத்தவறுகளில் இன்னும் ஒருபடி மேலே போவதைப் பார்த்து முகத்தைச் சுளிக்கிறோம். பழைமையைப் பற்றிப் பேசி அங்கலாய்த்துக் கொள்கிறோம். நமது தனித்தன்மையை நம் சந்ததிக்குப் போதிக்காமல், வலியுறுத்தாமல் கோட்டையை விட்டது நாம்தானே? சந்ததிகளைக் குறை கூற நமக்கேது தகுதி?

அவர்கள் யாரையோ போல தம்மைக் காட்டிக் கொள்ளும் மோஹத்தில் திளைத்துத் தாழ்ந்து போகிறார்களே, தனக்கென்று தனித்தன்மை உண்டு என உணராமல். இதற்கு நம்மை எவ்வாறு தண்டித்துக் கொள்வது?

நியாயமான தண்டனை தவறை ஒப்புக்கொள்வதில்தான் இருக்கிறது.

பிராயச்சித்தம்:—நாம் முழுமூச்சுடன் செயல்பட்டு அவர்களை எப்படியே னும் திருத்துவதில்தான் அடங்கியிருக் கிறது.

இதற்கு நாம் எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கை முன்னம் சொல்லி உள்ளதுபோல் தேவீ பாததூளிப் பாசறையை அமைத்துச் செயலில் இறங்குவதுதான்.

விடயபுரம் மஹான் நூல் வந்து 12 வருடங்களாகின்றன. இந்தப் பனிரெண்டு வருடத்தில் எழுந்த வேறு எண்ணங்களையும் சேர்க்கிறேன். படித்து விட்டு ஆவன செய்ய ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு ஆன்மீக நூலில் ஏன் இவ்வாறு ஆழமாக உலகவியலையும் வாழ்க்கை முறையையும் விவாதிக்க வேண்டும் என்று சிலர் புரியாமல் திகைக்கலாம். ஆன்மீகமும் லோகாயதமும் வாழ்க்கை எனும் நாணயத்தின் இருபக்கமும் போலக்கூட அல்ல, மாறாக சொல்லும் பொருளும் போல, சிவனும் சக்தியும்

போல, இது இல்லாமல் அது இல்லை, அது இல்லாமல் இது இல்லை.

மரபுகள், வாழ்க்கையின் உயிர்நாடி, அறமும் நெறியும் பிணைந்த இயக்கம் தான் வாழ்க்கையின் உயிரோட்டம், துன்பமின்றி மகிழ்ச்சியாக வாழ்வது தான் ப்ரபஞ்சத்தின் குறிக்கோள் இந்தக் குறிக்கோளை எளிதாய் இனிதே நிறைவேற்றத் தேவையான எல்லா வளங்களையும் வசதிகளையும் இயற்கை நமக்கு வாரி வழங்கிக் கொண்டே இருக்கிறது.

நாம் கண்ட அறவாழ்வினுக்கு இணை யான வழிமுறை எங்கேயும் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை. அவ்வளவு மஹோன் னதமான பொதுவுடமைத் தத்துவம் நமது ஸனாதன தர்மம்.

லேகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து என்பது நம் மறைகளின் அறை கூவல்.

யாராக இருந்தாலும் சரி– சுகமாகவே இருக்கவேண்டும். கஷ்டம் வரவே கூடாது.

உலகத்தில் உள்ள எல்லாச் செல்வங்களுக்கும் நாம் யாவருமே சம பங்காளிகள் தான்.

சுகமா? அது எல்லோருக்கும் பொது.

இறைவனா? யாவருக்கும் பொது வானவனே.

கடமையா? அதுவும் எல்லோருக்கும் பொது.

உலகமா? அதுவும் எல்லோருக்கும் பொதுதான்.

இந்த தர்மத்தில் எங்கேயும் எந்த முரண்பாட்டுக்கும் இடமேயில்லை.

யார் எங்கு வேண்டுமானாலும் போகலாம்.

எங்கே வேண்டுமானாலும் வசிக்கலாம்.

ஆனால் கடமையைத் தவறாமல் செய்யவேண்டும்.

சத்தியத்தை பின்பற்றி நடக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொருவரும் வாழ்ந்தால் அப்புறம் உலகில் சுகத்தைத்தவிர

வேறு என்ன இருக்கமுடியும்? கஷ்டத்திற்கு இங்கே இடமேது?

இவ்வளவு உயர்ந்த தர்மம் எவ்வாறு நம் வாழ்விலிருந்து விலகியது? விலக எப்படி அனுமதித்தோம்? இனி எப்படி அதை மீட்டு திரும்ப நம் வாழ்வில் இணைத்து நிலையைச் சீர்செய்வது? இதைத்தான் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். நெறியான சிறந்த வழிமுறைகளை உருவாக்க வேண்டும், அறிமுகப்படுத்த வேண்டும்; அமல்படுத்த வேண்டும். அப்படி ஒரு அட்டவணையைத் தொகுத்துக் கொள்வோம்.

## நாடு

காடும், மலையும், நதியும், நீர்த்தேக்கமும், கழனியும், வசிக்குமிடமும் மக்களுக்காக நிறைந்த இடம். மக்கள் நாட்டின் உரிமையாளர்கள்.

## மக்கள்

நாட்டையும், உயிரினத்தையும், வளத்தையும், வசதியையும் பெருக்கிப் பேணிப் பாதுகாக்கும் சமஅந்தஸ்து உள்ள தர்மகர்த்தாக்கள்.

## ஆள்வோர்

திறமையின், தரத்தின் அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நல்லோர்.

## ஆட்சி

நாட்டின், மக்களின் நல்வாழ்வுக்கென ஆள்வோரால் நிறுவப்படும் அமைப்பு.

## அதிகாரம்

இன்னின்னார் இன்னின்ன பணியை முடித்து இன்னஅளவு வாழ்க்கை வசதியை ஈட்டிக் கொள்வது, அதில் இத்தனை அரசுக்குச் சேர்க்க வேண்டும், அது நீக்கி பாக்கி என்றும் பிறர்க்குப் பயன்படுத்தத் தயார் நிலையில் யாவருமறிய சேமிப்பாக வைத்திருக்கவேண்டியது, என்றெல்லாம் வரையறுத்து, நடைமுறைப் படுத்தி நாட்டையும், மக்களையும் பாதுகாப்பாய் பேணும் செயல்.

## இறையுணர்வு

இறையுணர்வு குன்றாமல் இயங்கும் போதுதான் மனிதன் தன்னுள் புதைந்துள்ள விலங்குத்தன்மையைக்

கட்டுப்பாட்டுக்குள்ளடக்கி நெறியாய்ச் செயல்பட முடியும், என்ற உணர்வோடு, ஆட்சி, கல்வித்துறை மூலம் இறையுணர்வைச் செம்மையாய்ப் புகட்டவும், பொது இறைவழிபாட்டு மையங்களை நிறுவி இறையுணர்வு பரவவும் வழிவகுத்து வாழ்க்கையில் அமைதியைப் பாதுகாப்பது.

### கல்வி

ஆட்சி மக்களுக்கு வழங்கவேண்டிய கட்டாயப் பொறுப்பு. ஒரு பொறுப்புள்ள குடிமகனாக நெறியாளனாக உழைப்பாளியாக ஒவ்வொருவரையும் உருவாக்கத் தேர்ந்த ஆசான்களை வளர்ப்பது, ஊக்குவிப்பது, செயல்பட வைப்பது.

### உணவு

ஆட்சி தன் சீரிய செயல்திறத்தால் நிறைய விளைச்சலை ஊக்கி, அறுவடை செய்ய வைத்து எந்த இடத்திலும் ஏற்றத்தாழ்வு நேராமல் விநியோகிக்கச் செய்தாக வேண்டும்.

## உடை

யாவரும் தேவையான அளவுக்குப் பெறும் வகையில் ஆட்சி, உற்பத்தியைக் கண்காணித்து பங்கீட்டை முறையாக அமுல் படுத்துதல்.

## வசிக்க இடம்

விளைவுக்குப் பயன்படாத இடத்தில் மக்கள் குடியேறவும் வசிக்க வசதிகளைப் பெறவும் உரியவர்களைக் கொண்டு திறம்பட செயல்பட வைத்து யாரும் தேவைக்கதிமாக ஆக்கிரமிக்காமல் கண்காணிப்பதும் அரசின் பொறுப்பே.

## மருத்துவம்

மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிசள் கிடைக்க மருத்துவர்களை ஊக்குவித்து கௌரவித்து அவர்களை மக்களிடம் பரிவுடன் தொடர்பு கொள்ள வைப்பது அரசின் பொறுப்பு.

## நீதி

யாவருக்கும் பாரபட்சமின்றி நீதி கிடைக்கச் செய்வதும் அரசின்

சுமையே. யமதர்மராஜனின் வாரிசென எந்தக் குற்றவாளியையும் தப்பி விடாமல் தண்டிக்கும் நெறியாளரைக் கோணிவிடாமல் காத்து வருவதும் அரசாங்கத்தின் பணியே.

### காவல் துறை

காவல் தெய்வாமன இத்துறை இயங்க இதனுள் புல்லுருவிகள் வளர்ந்து விடாமல் களையெடுப்பதும், இவர்கள் தமது கடமையின்உயர்வை எண்ணிப் பெருமிதத்தோடு இயங்கும் மாண்பை பாதுகாத்துப் பேணுவதும் அரசின் வேலையே.

### பட்டாளம்

நாட்டுப் பற்றில் வழுவாப் பிடிப்புள் ளோரைத் தேர்ந்தெடுத்து பரிவுடன் பண்படுத்தி வீரத்தைப் புகட்டிப் பேணிப் பாதுகாப்பதும் அரசின் கடமையே.

### அயல் நாட்டுறவு

எந்த நிலையிலும் சமாதானத்தையும் நட்பையும் விரும்பும் கண்யமான மக்கள் வாழும் நாடு நம்முடையது

எனப் பிரதிபலிக்கும் வகையில் எந்த நாட்டுடனும் நேசக்கரம் நீட்டிப் பழகுவது, அவர்களது போற்றத் தகுந்த அம்சங்களைத் தவிர வேறெந்த அம்சத்தையும் விமர்சிக் காமல் ஒதுங்கி இருப்பது, நல்லுற வைப் பேணுவது ஆகியவையும் அரசின் பங்கே.

## கலை

பொழுதுபோக்கு என்ற பெயரால், ஆபாசமும், பொறுப்பின்மையும் வாழ்க்கையினுள் புகுந்துவிடாமல் வீரம், பண்பு, தயை, நெறி இவற்றை வலிறுத்தும் வகையில் கலைஞர்கள் பணியாற்றுமாறு கண்காணிப்பதும் அரசின் வேலையே.

மேலே சொன்னவைகளை, இதைவிடச் செம்மையாகவும், ஆழமாகவும், திருக் குறள் பறைசாற்றுகிறது. ஏனைய பண்டைய இலக்கியங்களும் வலி யுறுத்துகின்றன. ஆகவே பாததூளிப் பாசறையில் தினமும் ஒரு குறளேனும் தெளிவான விளக்கங்களுடன் விவரிக் கப்பட்டு அவரவர் மனத்தில் செழுமை

யும் வாய்மையும் வேறூன்ற வகை செய்யவேண்டும்.

தவிர மேலே சொன்ன எந்த அம்ச மாவது இந்நாளில் அதன் உண்மைக் கோணத்தில் இயங்குகிறதா என சிந்தித்து விட்டு இப்போது பரவி யுள்ள நச்சுத் தன்மையை நீக்க ஒவ்வொரு பாததூளிப் பாசறை முகாமும் தீவிரமாகப் பாடுபட வேண்டும்.

இப்பாசறையின் கண்,இராணுவத் தின், காவல்துறையின், சாரணப் படையின், பண்டைய நாயன்மார் களின் ஆழ்வாராதிகளின் இறைப் பற்று, நாட்டுப்பற்று, மனிதாபி மானம், தொண்டு மனப்பான்மை பேராண்மை இவைகள் ஒளிவீச வேண்டும்.

அந்தந்தப் பேட்டையிலுள்ள நல்லோ ரையும் வசதி படைத்தோரையும் இந்நற்பணியில் ஈர்த்து நாளுக்குநாள் தீமையைப் பொசுக்கியும், நல்லதை வளர்த்தும் முன்னேற வேண்டும்.

ஒவ்வொருவரும் வன்முறைக்கும் அபிப்ராய பேதத்திற்கும் இடங் கொடாத கோணத்தில் புரட்சிச் சிந்தனைகளை புகுத்தி நிலைமையச் சீரமைக்கப் பாடுபடவேண்டும்.

உதாரணமாக சில சிந்தனைகளை முன் வைக்கிறேன்; பரிசீலித்து பழகிப் பாருங்கள்.

ஒவ்வொரு பேட்டையிலும், வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பேட்டையி லிருக்கும் செல்வந்தர்களை வட்டியோ, ஊக்க ஊதியமோ இடம்பெறாத வகையில் முதலீடு செய்ய வைத்து குறைந்த லாபத்தில் மலிவான விலை யில் பலகாரங்களும் சிற்றுண்டிகளும் அங்குள்ளோருக்குக் கிடைக்கச் செய் தால், ஹோட்டலில் சென்று அநியாய விலையை அழுவதைக் குறைக்கலாம். அப்பேட்டையிலுள்ள செல்வச்சீமான் யாரேனும் ஒரு சிறிய இடத்தை வாடகையில்லாமல் மக்கள் வசதியை நினைத்து இதற்குத்தந்து உதவலாம். நாம் வசிக்கும் தெருவைத் துப்புரவாய்

வைத்துக் கொள்ள நாமே முறை வைத்துச் சுத்தம் செய்யலாம். நமது, பேட்டையில் வசிக்கும் மருத்துவரை அணுகி ஏழைகளுக்கு ஊதியமின்றி சிகிச்சை செய்ய வைக்கலாம். ஏழை வீட்டில் சாவு நேர்ந்தால் யாவரும் ஒன்று கூடி அவர்கள் செலவை யேற்று உதவலாம். தெருவில் ரோடு சரியாக இல்லாவிட்டால், நாமே கார்ப்பரேஷன் முனிஸிபாலிடி, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்குச் சென்று தளவாளடங்களை யும், தேவையான இதர பொருட் களையும் பெற்று வந்து ரோடு போட்டுக் கொள்ளலாம். இப்படி சிந்தித்துச் சிந்தித்து எத்தனையோ நற்பணிகளை இணைத்துக்கொண்டே போகலாம். ஊர்ப்பாதுகாப்பு விஷயத் திலும் புதுப்புது உத்திகளைப்புகுத்தி தீயவர்களைத் தடுத்துத் திருத்தவும் முற்படலாம்.

ஆனால் ஒரு முக்கிய விஷயத்தைக் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இந்த அமைப்புக்குள் எந்த அரசியல் கட்சியின் செல்வாக்கும் ஊடுருவி

விடாமல் கண்காணிக்க வேண்டும். இல்லையேல் இதற்குள்ளேயும் சோடா புட்டி, சைக்கிள் செயின் எல்லாம் வந்து விடும். ஏன்? துப்பாக்கிக் கூட நுழைந்துவிடும். நம் முயற்சியெல்லாம் இவைகளை அடியோடு விரட்டிவிட்டு நமது சீரிய பாரம்பரியத்தை நிலை நாட்டத்தான். மக்கள் சக்தி திரண் டெழுந்து எந்த அநீதியையும், அக்ரமத்தையும், அதர்மத்தையும், அசத்தியத்தையும் வீழ்த்தவேண்டும். அதற்காகப் பேட்டைக்குப் பேட்டை தெருவுக்குத்தெரு தேவீ பாததூளிப் பாசறையை அமையுங்கள். வரலாறு போற்றும் நற்பணிகளைப் பரப்புங்கள். ஒவ்வொரு பாததூளிப் பாசறைக்கும் அந்தந்த ஊரிலுள்ள தலைமைக் காவல் அதிகாரியை (Police) கௌரவ தலைமைப் போஷகராக இருக்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். குற்றங்களை ஒடுக்குவதற்கும், தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் காவல் துறைக்குப் பாததூளிப்பாசறை ஒத்துழைக்க எப்போதும் தயாராயிருக்க வேண்டும்.

# ஒரு சிறிய வினாடி-வினா!

(ஆனால் பதில்களுடன்)

கே : உற்பத்தி பெருகி தன்னிறைவு நேர்ந்து விடாமல் கவலையோடு கண்காணித்து தன்னை மட்டும் வளர்த்துக் கொண்டே போவது யார்?

ப : பணத்தை வட்டிக்கு விட்டுப் பணம் பண்ணும் பண முதலைகளே.

கே : ஆள்வோரிடம் சலுகை பெற நன்கொடை என்ற பெயரால் பணத்தை வாரி வாரி அழுது விட்டுத் தாம் அழாமல் அந்த அழுகையைத் தாம் விற்கும் பொருளின் மீது ஏற்றிவிட்டு நம்மை அழவைப்பது யார்?

ப : பணபலத்தால் ஆட்டிப் படைக்க வல்ல வியாபாரிகள்.

கே : எது எக்கேடு கெட்டுப் போனால் என்ன? என் வேலை நடந்தால் போதும் எனக் கையூட்டைக் கையாளும் கோடரிக்காம்பு யார்?

ப : சமூஹ ப்ரக்ஞையும் தம் சந்ததி களின் உண்மையான நல்வாழ்வை

பற்றிக் கவலையும் இல்லாத பொறுப்பற்ற ஏமாளிக் குடிமகன் தான்.

கே : ஓட்டு வங்கி சிதைந்து விடாமல் சாதகமாய் அமைய எந்தத் தில்லுமுல்லையும் மனச்சாட்சியே இல்லாமல் செய்து நல்ல பாரம்பர்யத்தையும் நாட்டையும், மக்களையும் சீரழித்தவாறு வளைய வருவோர் யார்?

ப : இதற்கு பதில் எழுதவே தேவை இல்லை. எல்லோருக்குமே நன்கு தெரியும்.

கே : வன்முறைக் கலாச்சாரத்தை ஊக்கி வளர்த்துத் தங்களுக்கு அரணாக அமைத்துக் கொண்டு ஆட்டம் போடுவது யார்?

ப : இதற்குள்ள பதிலும் யாவருக்கும் தெரிந்ததுதான்.

இப்போது சொல்லுங்கள். பாததூளிப் பாசறை அவசியமா இல்லையா? அவசரமா? இல்லையா?

சிந்தனைத் திறமுள்ள யாவரும் இது போன்ற புதுப்புது வினாடி—வினாக் களை கண்டுபிடித்து பிரசாரம் செய்து உண்மையை ஒலிக்கச் செய்து கொண்டே இருங்கள். எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

ஒரு முக்கிய விஷயத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ளாவிட்டால் இந்நூல் முழுமையாகாது.

நம்மைச் சுற்றி இன்று காணக் கிடைக் கும் அவலங்களையும் அக்ரமங்களை யும் கண்டும் கேட்டும் அவ்வப்போது எரிமலையாய்க் குமுறும் என் இதயத் தில் ஈட்டியென வார்த்தைகள் கிளம் பும். தீப்பந்தங்களென கருத்துக்கள் கனன்று எழும். அக்னித்ராவகமென வேதனை கொப்பளிக்கும். ஆனால் கூடவே தெளிவும் பிறக்கும்.

இன்று இப்படி மனித உயிருக்கே விலையில்லாமல் துப்பாக்கிக் கலா சாரத்தால் கசாப்புக்கடையாக மாறி வரும் நமது நாகரீகத்தை நினைக்கும்

போது குடல் நடுங்குகிறது. ஆனால் இந்நிலை இவ்வளவு விரிவாய்ப்பரவுவ தற்கு நாமேதான் விதை விதைத் தோம் எனப் புரியும்போதுதான் தலை குனிகிறது, மனச்சாட்சி மிரள்கிறது, புத்தி செயலற்றுப் போகிறது.

இறையுணர்வை அறவே புறக்கணித்து விட்டு இரட்டை வேடமிட்டுத் தோற் றத்தில் மதச்சின்னங்களைக் கொடி பறக்க விட்டுக் கொண்டு, அன்று எவ்வாறு மனந்துணிந்து அந்நிய னுடன் கூட்டுச் சேர்ந்து நம்மவரையே எதிரியெனப் பெயரிட்டு, அழித்தோம், முதுகில் குத்தினோம், காட்டிக்கொடுத் தோம் — அதனாலெல்லாம் நேர்ந்த பின் விளைவுகள்தானே இன்றையச் சீரழிவு?

நமது பாரம்பர்ய மரபான, எதையும் பேசித் தீர்வு காணும் நிதானம் எங்கே போயிற்று? விட்டுக்கொடுக்கும் தயை எங்கே போயிற்று, மனிதாபிமானம் நிறைந்த ஒற்றுமையுணர்வு எங்கே போய் ஒளிந்து கொண்டது?

இதையெல்லாம் நினைந்து நெகிழ்ந்து வருந்தி இறைவனிடம் உருகி மன்னிப்புக் கேட்டுச் சரணாகதியடைந்து நிலையைச் சீர்செய்ய மன்றாடிப் பிரார்த்தித்தவாறே வாய்மையற்ற எதையும் சொல்லாமல் செய்யாமல் வாழப் பழகுவோம். நிச்சயம் இறைவன் எல்லாவற்றையும் சீர்செய்து விடுவான்.

கலி வாழ்க்கையில், ஒன்றையொன்று சார்ந்த ஆன்மீகத்தையும் (நிவ்ருத்தி) உலகியலையும் ப்ராவ்ருத்தி, இரு கோடுகளாக்கி ஒன்றையொன்று தொடாமல் இயங்கவிட்டு விட்டோம். இந்தத் தவறின் பரிணாமம்தான் இன்றைய அவல நிலை ஆன்மீகத்தை உலகியலிலும், உலகியலை ஆன்மீகத்திலும் லயப்படுத்தினால் சமரசப் படுத்தி இணைத்துவிட்டால்வாழ்க்கை பூர்ணமாகி விடும். இனியவைவெல்லாம் கனியும். அதாவது இரண்டு கோடுகளையும் இணைத்து ஒரு வட்டமாக்கி விட்டால் அது பூர்ணமாகி விடாதா?

# மங்களாசாஸனம்

## மறுக்க முடியாத மறை

மறுக்கவேஇயலாத மறை!

மறுப்புக்கப்பாற்பட்ட மறை!

இதில் எதை வேண்டுமானாலும் பொருத்திக் கொள்ளுங்கள். ஆனால் ஆழ்ந்து அமிழ்ந்து உண்மையுடன் ஐக்கியமாகிவிடுங்கள். தன்னை ஈர்த்து விட்ட ஏதோ ஒன்றைச் சார்ந்து கொண்டு மற்றவைகளை மறுப்பது, எதிர்ப்பது என்பது மனிதனுடன் கூடப் பிறந்துவிட்ட அறியாமையான பலவீனம்.

அதனால்தான் ஒவ்வொருவரும் தான் வணங்கும் தெய்வம்தான் ஸத்ய மானது, தான் கடைபிடிக்கும் வழி பாட்டு முறைதான் சரியானது எனப் பிடிவாதம் செய்கின்றனர். இதனால் தான் சிக்கல்கள் தோன்றி வேற்றுமை வேர்விட்டுக் கொள்கிறது, விழுது களும் பரவுகின்றன.

எது ஒன்றும் தோற்றம் பெற்று வெளி யாக ஆண்மை, பெண்மை எனும்

இரண்டு தத்துவத்தின் இணைப்பும் இயக்கமும் தேவை என்பது விஞ்ஞான நீதியான விதி. இந்த விதிக்குப் புறம் பாக எதுவுமே தோன்றமுடியாது, சாத்தியமுமில்லை, அப்படி மீறி நடந் துள்ளதாகத் தோற்றும் எதையும் நுண்ணி ஆய்ந்தால் அதன் மூலத்தி லும் ஏதோ ஒரு விதத்தில் ஆண்மைத் தத்துவமும் பெண்மைத் தத்துவமும் இணைந்து இயங்கி ஆதாரமாயமைந் துள்ளது வெளிப்படும்.

எனவேதான் அத்வைதம் எனும்— ஒன்றேதான் இரண்டல்ல எனும் கண்டுபிடிப்பின் முடிவில், அந்த ஒன்றே தன்னை விரிவு படுத்தி வேறு படுத்திக் கொண்டு, காணப்படும் எல்லாத் தோற்றமுமாகப் பரிணாம மடையத் தன்னையே விதையாகவும், விளைநிலமாகவும் -அல்லது-உருவாக வும் உருவின் இயக்கச்சக்தியாகவும் அல்லது விதைக்கும் - ஆண்மைத் தத்துவமாகவும்,கருவுறும் பெண்மைத் தத்துவமாகவும் பிரித்துக் கொண்டு இயங்கி இணைந்ததன் விளைவே நாம் குறிப்பிடும் ப்ரபஞ்சமாக

('யூனிவர்ஸ்') ஆயிற்று என உணரப் பட்டது.

இப்படி உணர்ந்தது எது என்றால், எது ஒன்று விரிவடைவதற்காகத் தன்னை இரண்டாக்கிக் கொண்டதோ அதுவே தான் தனது கணிப் பாற்றலின் திறனால், யாவரும் வழி வழியாய்க் கடைப்பிடித்துணர வழி வகை செய்ய இவ்வுண்மையைத் தெளிந்து உணர்ந்து, வெளியிட்டது. தான் செய்ததுதானே இத்தனையும்- இதை உணரப் போக வேண்டுமா எனும் கேள்விக்குச் சமாதானம்- விரிவாக்கிக் கொள்ளும் போது தன்னை வேறுபடுத்திக் கொள்ள வேண்டியும் நேர்ந்ததால் தன்னையே அது இது என இருமையுணர்வுக்குட் படுத்தத் தன் இயல்பையே மறைத்து உணரும் மறந்துணரும் தன்மையைத் தோற்றுவித்துக் கொண்ட மறைப்புத் தத்துவத்தைத்தான் 'மாயை' என வழங்குகிறோம். இந்த மாயையை ஊடுருவி மூலத்தைத் தொடும் முயற்சியை மேற்கொண்ட போது இரண்டாகவும், பலவாகவும் வேறு

பட்டுத் தோன்றும் யாவற்றினு முடைய அடிப்படையே இரண்டற்ற ஒன்றுதான் எனத் திரும்பத் தன்னைத் தானே, தான் தோற்றுவித்துக் கொண்ட மறைப்பிலிருந்து விடுவித் துக் கொண்டு, உள்ளதை உள்ளபடி அறிந்த சாதனை!

எனவே தான்- இவ்வுண்மை- எம்மதத் திற்கும் சம்மதத்தைத் தவிர எவ்வித சர்ச்சைக்குமிடமிராத அடிப்படை யுண்மை-பேருண்மை

இப்பேருண்மைக்கு உலக மக்கள் யாவருமே உட்பட்டவர் தாம், சொந்த முள்ளவர் தாம், உரிமையுள்ளவர் தாம்.

அந்நாட்களில் செழித்தோங்கி உலவிய மொழியிலே இந்நூலில் சொல்லப் படும் பெண்மைப் பெயர்களும், ஆண்மைப் பெயர்களும், அப்பட்ட மான தத்துவங்களே என உணரும் வாய்மை,நமக்கு முதிர்ச்சி வரும்போது வசமாகும்,

முரண்பாடுகள் போல் தோற்றுபவை களைக் கண்டு மிரள்வதும், மலைப்ப தும், மயங்குவதுமாக உழலும் தன்மையை நீக்க ஓயாமல் போராடித் தோற்றுத் தோற்று விடாமுயற்சியாய் முற்றுகையினைத் தொடர்வதுதான் முதிர்ச்சியை எட்டும் வழி.

அம்முதிர்ச்சி வரும்வரை ஒரு பற்றுக் கோடாய்ப் பயன்படும் வகையில் உருவகப்படுத்தப்பட்ட, பேருண்மை களை தம்முள் அடக்கிய தோத்திர வடிவந்தான். கட்கமாலா எனும் இச்செய்யுள். இங்கு சர்ச்சைக்கோ, அபிப்ராய பேதத்திற்கோ, வேறு பாட்டிற்கோ இடமேயில்லை,-யாவருக் கும் பொதுவான உண்மையிது. யாவரும் ஒன்றுபட்டு ஒற்றுமைஉணர் வால் உறவைப் புரிந்து கொண்டு, வேற்றுமையுணர்வை வேரறுத்து விட்டு-சகோதர பாசத்தில் மூழ்கித் திளைத்து எதிலும் இணைந்து சம பங்கு பெற்று இன்பமாய் மனநிறை வுடன் வாழ்ந்து அமைதியை ஸ்திர மாய்ப் பேணிவருவதே உண்மையான வாழ்வின் அடித்தளம்-நோக்கம்.

என்பதை யாவரும் மனச்சாட்சிக் கிசைய உணர்வதுதான் இறையுணர் வில் இணைந்து விட்டதற்குச் சான்று. மற்றபடி எதிர்வாதமோ, வேற்று மையோ, வேற்றுமையால் ஒவ்வா மையோ தலையெடுக்குமாயின் இறை யுணர்வுக்கு எதிராகச் செயல்பட்டு வாழ்வின் உண்மை நோக்கத்தி லிருந்து விலகிப் போகிறோமென்பது தான் உண்மை.

இப்போதெல்லாம் ஸெகுலரிஸம் (**Secularism**) எனும் போலியை ஜோகுலரிஸ(**Jocularism**)மாக நடமாட விட்டு ஜாக்காலிஸம் (**Jackalism**) செய்து வரப்படுகிறது.

இது நன்மை செய்யாது. வேற்றுமையை நினைவூட்டவும், வளர்க்கவும், அதனால் ஆதாயம், தேட நினைக்கும் சுயநலமும்தான் பெருகும். சகோதரத்வம் எனும் சீரிய உண்மைஅத்வைதத்தாலும் விசிஷ்டாத் வைதத்தாலும் த்வைதத்தாலும் வலி யுறுத்தப் படுவதை நடைமுறைப்படுத் தினால் போதும், நன்மையாவும் நிலைக்கும்.

இவ்வுண்மைகளை நன்கு பரிசீலித்து உணர்ந்து கொண்டு, இம்முயற்சியின் கண் ஜாதி, மதம், உயர்ந்தவன், தாழ்ந் தவன், ஏழை, பணக்காரன், மேதை, மூடன் என்றெல்லாம் வேற்றுமை களுக்கிடங்கொடாமல் அவற்றைக் களையெடுத் தெறிந்துவிட்டு,யாவரும் இணைந்து விரும்பி இவ்வியக்கத்தில் சங்கமமாகுங்கள். அப்புறம் நிலைத்து விடும் ஒன்றேகுலம்-ஒருவனே தேவன் எனும் பேருண்மை! இப்படி ஒரு முடிவை எட்டும் வரை ஓய்வதில்லை எனும் உறுதியுடன் முழுமூச்சாய் செயல்படுங்கள். உலக மக்கள் யாவரையும் ஊக்குவித்து இணைத் துக் கொண்டே பரவுங்கள், பயணியுங் கள். இனிமையான மறுமலர்ச்சி உதய மாகிவிடும்.

இங்ஙனம்

44 வருடகாலமாய் உலக ஒற்றுமை யையும் நலனையும் முன்வைத்துக் கனவு காணும், செயல்படும் :

த்ரிசக்தி பாததூளி **T. V.** கல்யாண்

***1-1-1992***
**சென்னை-600 044**

## அறிக்கை

அன்பு- ஆரோக்யம்- ஐச்வர்யம் இம் மூன்றும் இணைந்தால்தான்வாழ்க்கை முழுமையாகும். இம்மூன்றையும் இணைக்கும் சக்தி அறம் எனும் தத்து வத்திலே பொதிந்துள்ளன அந்த அறம் எனும் தத்துவம் சாந்தி (அமைதி) எனும் மூலத்தில் வேரூன்றியுள்ளது. அறம் வலுவாக நிலவாவிடில் அன்பு ஆரோக்யம், ஐச்வர்யம் இவை சரிவர இணையாது. ஏதோ ஒன்று பாதிக்கப் பட்டே இயங்கும். இந்தக் குறைநேர வாய்ப்பில்லாமலிருக்கவே சான்றோர் கூட்டு இறை வழிபாட்டை அறிமுகப் படுத்தியுள்ளனர். இந்த உண்மையை ஒவ்வொருவரும் ஆழமாகவே உணர வேண்டும்-அவசரமாகச் செயல்பட வேண்டும், அதற்கே இந்த அறிக்கை.

## எச்சரிக்கை

ஒரு காலத்தில், வந்தே மாதரம்' என்ற சொற்றொடர், இந்நாடு பூராவும் உள்ள இன, மத, மொழி மக்களால் ஒருமைப்பட்ட 'மனத்துடன் பல

வருடங்கள் உச்சரிக்கப்பட்டதால் அச்சொற்றொடர் ஒரு மஹாமந்த்ரத் தன்மையையடைந்து, கத்தியின்றி யுத்தமின்றி, ரத்தச்சேதமின்றி பிரிட்டிஷாரிடமிருந்து நம் பாரதநாடு விடுதலையடைந்தது.

அன்று அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை தேடினோம்-பெற்றோம்.

இன்று-தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அமைதியான வாழ்விற்கும் யமனாக வேறூன்றிப் பயங்கர வேகத்தில் வளர்ந்து வரும் அசுரசக்தியினை அழித்தாக வேண்டிய கட்டாயமான காலக்கட்டத்திற்கு வந்து விட்டோம். உடனடியாக இப்போதே செயல்படா விட்டால் அப்புறம் எப்போதைக்குமே செயல்பட முடியாமல் இந்த அசுர சக்திகளின் ஆதிக்கம் ஓங்கி விடும் ஆபத்து நிச்சயமாகி விட்டதை உணர்த்தவே இந்த எச்சரிக்கை!

எனவே-'வந்தே மாதரம்'-'ஸத்யமேவ ஜயதே' என்ற மாமந்திரச் சொற்றொடர்கள் பட்டி, தொட்டி தோறும் எல்லாக் காலங்களிலும் ஒலிக்கச் செய்ய வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி ஒவ்வொரு இந்திய ப்ரஜையும் இப்புனிதச் சொற்றொடர்களைக் கையாளுவதை உடனே தொடங்க வேண்டும்.

ஒருவரையொருவர் சந்திக்கும்போது— நமஸ்தே, நமஸ்காரம், வணக்கம், ஹாய் என்றெல்லாம் ஒலிப்பதை அடியோடு உதறிவிட்டு, ஒருவர், 'வந்தே மாதரம்' எனக் கை உயர்த்தவும் பதிலுக்கு மற்றவர்- ஸத்யமேவ ஜயதே' என உற்சாகத்துடன் கூவிக் கை தூக்க வேண்டும். இதை உடனே தொடங்குவீர்களா?

அவசியமெனத் தோன்றினால் அவரவர்மொழியில் இக்கருத்தை அப்படியே பரப்பலாம்.பரவாயில்லை.)

# திருத்தம்

| பக்கம் வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 34-11 | நம்பிக்னைய | நம்பிக்கையை |
| 34-21 | சிற்றிவாக | சிற்றறிவாக |
| 36-17 | மனிதனின் | மனிதனில் |
| 37-2 | பரிணாமச் | பரிணாம மடைந்து |
| 37-14 | மிரண்டி | மிராண்டி |
| 57-13 | ஆகாமல் | ஆக்காமல் |
| 68-21 | கோணாம் | கோணம் |
| 69-14 | தந்தைத் | தந்தை |
| 79-14 | தத்துங் | தத்துவங் |
| 80-10 | படும். | படும் |
| 85-14 | ஸாதித்துத்தா | ஸாதித்துத்தர |
| 86-14 | பரசக்தி | பராசக்தி |
| 91-20 | ஸத்திகள் | ஸித்திகள் |
| 92-3 | ஸ்ங்கல்ப | ஸங்கல்ப |
| 98-20 | நாமாகளில் | நாமாக்களில் |
| 105-13 | நித்யகால | நித்யகலா |
| 111-4 | பராபரா ஹஸ்ய | பராபர ரஹஸ்ய |
| 115-16 | எண்ணக | எண்ணக் |
| 119-11 | ப்ரயோகாக்ஷம் | ப்ரயோ காக்ஷரம் |
| 119-16 | ஆவாரணம் | ஆவரணம் |
| 127-21 | க்ஷோபினி | க்ஷோபிணி |
| 130-1 | ஸர்வதுக | ஸர்வதுக்க |
| 135-4 | பராபரஹஸ்ய | பராபர ரஹஸ்ய |
| 135-4 | ப்ரம்ரஹஸா | ப்ரம்ஹஸா |
| 136-( | பேறறிவு | பேரறிவு |
| 141-19 | கீழப்பகுதி | கீழ்ப்பகுதி |
| 142-24 | ஸௌக்ஷ்ம் | ஸௌக்ஷ்ம |

| | | |
|---|---|---|
| 149-25 | மோ? | குமோ? |
| 164-2 | அறித்த | அடுத்த |
| 172-20 | நம்முன் | நம்முள் |
| 176-15 | முன்னெல்லாம் | முன் பெல்லாம் |
| 196-19 | லேகாஸ் | லோகாஸ் |

---


# ஸ்ரீ மஹாமேரு
# த்யான நிலையம்
# ஸ்ரீ நகரம்

பண்ட்ருட்டி கண்டிகை

(தாம்பரம்—காஞ்சி பஸ் ரூட்டில்
படப்பை தாண்டி உள்ளது)

ஸ்ரீ வித்யையில் ஆர்வம் உள்ளோர் இங்கு சென்று தரிசித்துப் பெறுவனவெல்லாம் பெற்றுப் பெருவாழ்வும் பேரின்பமும் ஒருங்கே அடையலாம்.

இந்நூலில் காணும் பேருண்மைகளை அனுபமாய்ப் பெறலாம்.

சக்தி கணங்களின் உயிரோட்டத்தை நிதர்சனமாய்க் காணலாம்.


---